## நேர் வழி பயணத்தில்...

உலகில் உயர்ந்தது மனித இனம். மனித இனத்தில் எந்தவித குறைபாடுமின்றி வாழ்ந்து சிறந்தவர் என்ற நற்பெயருடன் இருப்பவர்கள் வெகு சிலரே. சமுதாயத்தில் பலர் கடைசிவரை மதிக்கப்படாமல் இருந்து பின்னர் அவரை மகான், உத்தமர் என்று கொண்டாடுவதை இன்றும் கண்டு கொண்டு இருப்பதுடன் கண்டும் வருகிறோம்.

அகிம்சை, வீரம், விஞ்ஞானம், விளையாட்டு, தொழில், கலை, இலக்கியம் என்பனவற்றில் செயற்கரிய செயல்களைச் செய்தவர்களையும், செய்து கொண்டிருப்பவர்களையும் பற்றிப் போற்று கிறோம், புகழுகிறோம்.

பதவியில் இருக்கும் போது தவறு செய்ய பல சந்தர்ப்பங்கள் தானே வந்தும், ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு மாறாததுடன், ஊழலே செய்யாமல் சிறப்பாகச் செயல் படுத்துவதுடன் அப்பதவிக்கே தனிப் பெருமை சேர்த்தவர்களை, சேர்ப்பவர்களைக் கணக்கிட்டால் மிகச்சிலரே! பதவி காலத்தில் அப்படிப்பட்டவர்களை அடையாளம் காண்பது என்பது அரிது.

ஊழலும், இலஞ்சமும் முதலில் எப்பொழுது எங்கு யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்று யாராலும் உறுதியிட்டு கூற முடியாது. சமுதாயச் சந்தையில் ஊழல் எங்கும் பரவி இருக்கும் ஒரு புற்றுநோய். ஆரம்பத்தில் கொஞ்சமாக இருந்த ஊழல் தற்போது உலகையே ஆட்டுகிறது, ஆட்டிப் படைக்கிறது.

ஊழலம், இலஞ்சமும் சமுதாயத்தில் தீராத நோய் போல உள்ளது. நாடாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி ஊழல் நீக்கமற பரவியுள்ளது. இதற்கு அக்காலம் முதல் இக்காலம் வரை பல உதாரணங்களைச் சொல்ல முடியும். இன்றுள்ள சமுதாயத்தில் ஊழலுக்குத் துணை போனவர்களும், ஊழலால் பாதிக்கப் பட்டவர்களும்தான் அதிகம்.

புள்ளி விவரப்படி ஊழல் இல்லாத நாடுகளை விரல் விட்டுட எண்ணி விடலாம். இந்தியாவைப் பொறுத்தவரை ஊழல் என்பது அரசியல்வாதிகளின் ஆயுதம். இந்த ஆயுதத்தை தனக்காக, தன் குடும்பத்தாருக்காக. தன் பதவிக்காக. முக்கிய பதவிக்கு வரவேண்டும் என்பதற்காக, இருக்கும் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, எப்படிப்பட்ட நிலையிலும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது நாம் அறிந்த ஒன்று.

இந்த வேகமான வாழ்க்கையில் நம் வேலை முடிந்தால் போதும் என்ற குறுகிய மனப்பான்மையில் பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரைஇ அரசியல்வாதிகள் முதல் அரசு அதிகாரிகளில் பெரும்பாலோர் வரை அரை மனதோடு ஊழலை ஏற்றுக் கொண்டு வாழப்பழகி விட்டனர் என்றே சொல்லலாம்.

ஊழல் செய்யாமல் வாழமுடியாதா? இது இன்றுள்ள நிலையில் கேள்விக்குறிதான். இந்த ஊழலை எதிர்த்துக் குரல் கொடுத்தால் அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்க்ள அச்சுறுத்தப் படுகிறார்கள்.

பொது வாழ்க்கையிலோ அல்லது அரசுத் துறையிலோ ஒருவர் நேர்மையாக இருந்து செயல்பட்டால், அவர்கள் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஏமாளிகள் என்று அழைக்கப் படுவர். அவர்களை இலக்கணப் பிழை போல் கருதுவர் பேசுவர்.

அரசு அதிகாரியாக இருந்து நேர்மையாகச் செயல் பட்டால் அவரை குறுக்கு வழியில் செயல்படவைக்க அன்பாகவோ அல்லது மிரட்டியோ செய்ய வைப்பதும், அதற்கும் மறுத்தால் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி இடமாற்றம் செய்வதும் நடந்து வந்தது. நடந்தும் வருகிறது.

நேர்மையான அரசியல்வாதிகளைப் பார்ப்பது என்பது அரிது. அப்படியும் ஒருவர் பதவியில் இருந்துவிட்டால் அவரைப் பற்றி எந்த தவறான செய்தியைச் சொன்னால் மக்களை எளிதில் சென்றடையுமோ அப்படிப்பட்ட தவறான செய்திகளைச் சொல்வதும், மன உளைச்சலைக் கொடுப்பதும், சாதாரண நபராக இருந்தால் போலீஸ் முலம் பொய் கேஸ் கொடுத்து மிரட்டச் சொல்வதும், சந்தர்ப்பம் ஏற்பட்டால் நீதி மன்றத்திற்கு இழுத்து அலையவிடுவதும், பதவியை விட்டு நீக்க, சாம, பேத, தான, தண்டம் என அனைத்து வழிகளையும் கையாள்வதும் தற்போது நடந்து வருகிறது. இந்த நிகழ்வுகள் நேர்மையானவருக்குக் கொடுக்கும் சன்மானம்.

நாட்டில் இலஞ்சமும், ஊழலும் மக்களைப் பிடித்திருக்கும் தீராத நோய்களாக இருக்கின்றன. இவைகளை தீர்க்க முடியாதா... முடியும்! எப்படி யாரால் என்று ஆர்வமாகக் கேட்கிறீர்களா?

இதற்காக யாரும் புதிதாகப் பிறந்து வரப்போவதில்லை. சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள், விழிப்புணர்வுடன் செயல்பட்டால் சமுதாயத்தில் தீரா நோய்களாகக் கருதும் இலஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க முடியும்.

பல குணங்களைக் கொண்ட மக்கள் ஒரே நாளில் பின்பற்றி விடுவார்களா என்ன! பின்பற்ற மாட்டார்கள். வருபவர்களும் உடனே வந்துவிடவும் மாட்டார்க்ள. சொல்வதைச் சிந்திப்பார்கள். பேசுவார்கள். நடைமுறைப் படுத்துபவர்களைப் பார்ப்பார்கள். அதன்பிறகு தங்களுக்குத் திருப்பதியளிக்கிறது என்றால் வரலாமா, வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்தி அதன்பிறகு ஈடுபட வருவார்கள். ஈடுபடும் போது முழு

ஈடுபாட்டுடன் செய்வார்களா என்றால் அதுவும் யோசனை செய்ய வேண்டிய விஷயம். இப்படிப் பட்டவர்களை நல்ல வழியில் கொண்டு போக, இவர்களுக்கு வழிகாட்ட, வழிகாட்டுதலுடன் வழி நடத்த, வழி நடத்துவதுடன், தானும் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருப்பவர் தான் விருத்தாசலம் நகர்மன்றத் தலைவராக இருந்த **டாக்டர் மு. வள்ளுவன்** அவர்கள்.

இவர் தன் பதவிக்காலத்தில் நேர்மையாக இருந்ததாலும் இலஞ்சத்தையும், ஊழலையும் முழுமையாக எதிர்த்ததாலும், தொலைநோக்குப் பார்வையில் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டி ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டபோது இலஞ்சம், ஊழல் என்னும் தீய சக்திகளால் எதிர்ப்புகள் ஏராளம். ஔவொரு சிறு சிறு செயல்களுக்கும் கூட மிகப்பெரிய எதிர்ப்புகள். அடிப்படைக் காரணம் எதிர்பார்ப்புகள்.

எந்தவித, எப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்புகளுக்கும் இடம் கொடுக்காமல் நேர்மையாகத் துணிச்சலுடன், தனித்து நின்று, சட்டத்திற்கு உட்பட்டு வென்றதற்கான வரலாறு தான் இந்நூல். இதில் வரும் அனைத்து நிகழ்வுகளும் மக்கள் அறிந்த, நாடறிந்த ஆவணங்களின் தொகுப்பு.



# விருத்தாசலம் பெருமையும் - வள்ளுவனும்

கடலூரர் மாவட்டத்தில் உள்ள ஐந்து நகராட்சிகளில் விருத்தாசலமும் ஒன்று. இதில் 33 வார்டுகளும், 250 தெருக்களும், சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும் வசிக்கின்றனர்.

விருத்தாசலத்தைச் சுற்றிச் சிறிய, பெரிய கிராமங்கள்தான். அனைத்தும் விவசாயத்தை நம்பி உள்ளன. இங்கு மிகப்பெரிய தொழிற்சாலைகளோ, நவீன வசதிகள் உள்ள மருத்துவ மனைகளோ, புகழ் பெற்ற கல்விக் கூடங்களோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்நகரத்தில் கிராம விவசாய மக்களை நம்பித்தான் அனைத்து வியாபாரங் களும் நடக்கின்றன.

இந்நகரத்திலுள்ள பழமலை நாதர் கோவிலுக்கும் ஐந்துக்கும் அதிக ஒற்றுமைகள் உண்டு. ஐந்து இராச கோபுரங்கள், ஐந்து பிரகாரங்கள், ஐந்தந்து உள் மண்டபங்கள், வெளி மண்டபங்கள், ஐந்து கொடிமரங்கள், ஐந்து லிங்கங்கள், ஐந்து மூர்தங்கள், ஐந்து தீர்த்தங்கள், ஐந்து தேர்கள், தினமும் ஐந்து வேளை பூஜைகள், மாதத்தில் ஐந்து சிறப்பு வழிபாடு,

வருடத்தில் ஐந்து சிறப்பு விழாக்கள் என்பதுடன், இங்கு வழிப்பட்ட தேவர்கள் ஐவர், வழிப்பட்ட முனிவர்கள் ஐவர், முக்தியடைந்நத மகான்கள் ஐவர் எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்நகருக்கு ஐந்து எழுத்து ஊரான நெய்வாசல் கிராமத்தில் தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த முருகேசன் - செந்தாமரை ஐந்து எழுத்துக்கள் கொண்ட தம்பதியரின் ஐந்து பிள்ளைகளுள் மூத்தவரான, ஐந்து எழுத்தைக் கொண்ட வள்ளுவன் இந்த நகராட்சிக்கு, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நகரசபைத் தலைவராக 25.10.2001இல் பதவியேற்றார்.

நகர்மன்றத் தலைவராகப் பதவியேற்றவுடன் தன் அலுவலக இருக்கைக்கு மேல் '**இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்; இலஞ்சம் கொடுப்பதும் குற்றம், இலஞ்சம் வாங்குவதும் குற்றம்; மக்களின் வரிப்பணம் இங்கே செலவிடப்படுகின்றது. மக்களே எஜமானர்கள்**' என்று எல்லோர் பார்வையிலும் பாடும்படி எழுதி வைத்துத் தன் தனித் தன்மையைக் காட்டினார்.

இதற்குக் காரணம் தான் வளர்ந்து வந்த வாழ்க்கை முறை தான். இவர் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க முதற்காரணம் இவரது பெற்றோர்கள்தான். சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் கீழே கிடக்கும் எந்த ஒரு பொருளையும் எடுக்க அனுமதிக்காததுடன், "நமக்குச் சொந்தமில்லாத எந்தப் பொருளையும் நாம் எடுக்கக்கூடாது. அதன் மீது ஆசைப்படவும் கூடாது" என்று கூறிய அறிவுரை இவரையும், இவருடன் பிறந்தவர்களையும் நேர்மையாக மாற்றியது.

ஆவினங்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து ஆண்டுத் தேர்வு எழுதி முதல் மதிப்பெண் பெற்றதால், மங்களூர் யூனியனுக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கான போட்டி. அத்தேர்வில் இரண்டாவது

இடம் பெற்றதால் National Scholarship for Talented Children from Rural Areas என்னும் உதவித் தொகை கிடைத்தது. அதனால் புதுக்கோட்டை முன்மாதிரி பள்ளியில் *9,10,11* வகுப்புகள் படிக்கும் வாய்ப்பு. அங்கு இவரைப் போல் சேர்க்கப்பட்ட அனைவரும் விடுதியில் தங்கி படிக்க வேண்டிய நிலை.

## நேர்மைக் கடை

விடுதிக்குள் இருக்கும் நேர்மைக் கடையில் மாணவர் களுக்குத் தேவையான நோட்டு, பென்சில், பேனா, பேப்பர், ரப்பர், பேஸ்ட், பிரஷ், சோப்பு, எண்ணெய், பவுடர் என விற்கும் பொருட்களுடன் விலைப் பட்டியல்களும் இருக்கும். விற்பனையாளர்கள் என்று யாரும் இருக்க மாட்டார்கள். மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பொருளுக்குரிய தொகையைப் பணப்பெட்டியில் போட்டுவிட்டு பொருளை எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையானப் பொருட்களை மொத்தமாக வாங்கி வைக்கவும், கடையை நிர்வகிக்கவும் மூன்று மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று செயல்பட்டது. பொருள் வாங்கும் போது மீதிச் சில்லரை வரவேண்டிய நிலை இருந்தால் பக்கத்தில் இருக்கும் நோட்டில் மீதி வரவேண்டிய தொகை யாருக்கு என்பதை எழுதி வைத்துவிட்டு வந்துவிட்டால் போதும். கடை மூடும் சமயத்தில் மாணவர் குழு உரியவரிடம் கொடுத்து விடும்.

இதில் என்ன அதிசயம் என்றால் ஒரு நாளும் ஒரு பைசா கூட குறைந்தது இல்லை. அத்துடன் பொருளோ, பணமோ திருடு போனதும் இல்லை என்பதுதான்.

*1978-1979*ம் ஆண்டு தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவர் பேரவை தேர்தலில் துணைப் பொதுச் செயலாளர் (Assistant General secratary of Students Association) என தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்ட காலத்தில், கல்லூரி வளாகத்தில் வாரம் தோறும் சினிமா காட்சிக்கு ஏற்பாடு செய்ய

வேண்டும் என்பது ஒரு நடைமுறை. அதற்கான கணக்கினை நேர்மையாகவும், சிறப்பாகவும் செய்ததால் 1980ஆம் வருடம் தஞ்சையில் நடந்த (Medical Exbition) மருத்துவக் கண்காட்சிக்குத் தலைமை மாணவக் கணக்கராக (Chief Cashier Student Volunteer) பணியாற்ற கல்லூரி நிர்வாகம் வாய்ப்பு அளித்தது. இருபது நாட்கள் நடைபெற்ற கண்காட்சியில் சுமார் ரூ. 18,300/- வசூலானது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது திறமையைக் கண்ட ஒரு அரசியல் கட்சி 1998, 1999 பாராளுமன்ற பொதுத் தேர்தல்களிலும், 2001 சட்டமன்ற தேர்தலின் போதும் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி அமைப்பாளராக நியமித்தது. அதனால் மூன்று முறையும் அக்கட்சி வெற்றி பெற முடிந்தது. இவரது பணியில் இருந்த நேர்மையையும், நிர்வாகத் திறமையையும் கண்ட அக்கட்சி நகராட்சித் தேர்தலில், விருத்தாசலம் நகர்மன்றத் தலைவர் பதவிக்கு வேட்பாளராக அவருக்கு விருப்பம் இல்லாத நிலையில் வலுக்கட்டாயமாக அறிவித்தது.

நேர்மையாகச் செயல்படுவேன் என்னும் வாக்குறுதியை மட்டும் அளித்து வாக்கு கேட்டதன் மூலம் நேர்மைக்குக் கிடைத்த பரிசாக நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். இதில் என்ன சிறப்பு என்றால் அக்கட்சிக்குக் கிடைத்த முதல் நகர்மன்றத் தலைவர் இவர்தான்.

தன் பதவிக்காலத்தில் நேர்மையாகவும் உண்மையாகவும் மக்களுக்குச் சேவை செய்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று செயல்பட ஆரம்பிக்க, அப்பொழுதே இந்தச் செயல் சிலருக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தது. அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் செயல்பட ஆரம்பித்தார்.

**வள்ளுவன் பதவியேற்ற போது "நகராட்சிக்கு ரூ. 50 லட்சம் கடனுடன் நகராட்சி ஊழியர்களுக்கு 5 மாத ஊதியம் வழங்கப்படாத நிலை".**

ஏன் இந்த நிலை? இந்நிலையில் நகர மக்களுக்கு அடிப்படை வசதிகளை எப்படிச் செய்வது? நகராட்சிக்கு வரும் வருமானம் என்னாகிறது? என ஆராய்ந்த போது மிகவும் இரகசியமாக ஒரு கூட்டம் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது தெரிய வந்தது.

நகர் மன்றத் தலைவரின் முதன்மையான கடமை நிதி மேலாண்மையே என்றெண்ணி நிதி நிலையைப் பெருக்க வேண்டும், அதே சமயம் கொள்ளையடித்துக் கொண்டிருப் பதைத் தடுத்த நிறுத்த வேண்டுமென ஒரு தீர்க்கமான முடிவெடுத்தார். அதன் முதல்கட்டமாகச் செலவீனங்களைக் குறைப்பது. முறைகேடுகளைக் களைந்து வருவாய் இழப்புகளைத் தவிர்ப்பது. புதிய வருவாயைப் பெருக்குவது என்ற அடிப்படையில் செயல்பட ஆரம்பித்தார்.



## சிக்கன நடவடிக்கை

மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்கத்தில் நகர் மன்றத் தலைவருக்கு அலுவலகம் மற்றும் அவரது சொந்த வீட்டிற்குத் தொலைபேசிக் கட்டணம் அதிகப் பட்சமாக ரூ. 6400/- என்றும், துணைத் தலைவர் வீட்டிற்கு ரூ. 2150/- என நிர்ணயித்திருந்தது தமிழ்நாடு அரசு.

இவர் நகர்மன்றத் தலைவர் ஆனதும் முதல் வேலையாகத் தன் அலுவலகத் தொலைபேசி தேவை யில்லை. வீண் செலவு எனக் கருதினார். அரசு வீட்டிற்கு ஒரு தொலைபேசி வசதியை வழங்கி யிருந்தது. அலுவல கத்தில் தான் இருக்கும் நேரத்தில் அங்கு வரும் பொது மக்களையும், பிற நபர்களையும் சந்திக்கவே நேரம் சரியாக இருக்கும். இப்படிப்பட்ட நேரத்தில் அலுவலகத் தொலை பேசியைப் பயன்படுத்துவது என்பது இயலாது. எனவே, நகர் மன்றத் தலைவருக்கான தொலை பேசி தேவையற்றது என முடிவு செய்து தானே நடை முறைப் படுத்தத் தொடங்கினார்.

நகர்மன்றத் துணைத் தலைவர் வீட்டுக்கு அரசு நிர்ணயித்த தொலைபேசிக் கட்டணம் ரூ. 2150/- மட்டுமே. ஆனால் முன்னாள் நகர்மன்றத் துணைத் தலைவராகப் பதவி வகித்தவர் 25.10.2001இல் புதிய நகர்மன்றம் பொறுப்பேற்ற பின்னால் தனக்காக இருந்த தொலைபேசி இணைப்பை ஒப்படைக்காமல் தொடர்ந்து பயன்படுத்தியதால் அக்டோபர் மாதம் ரூ. 5057/-ம் டிசம்பர் மாதம் ரூ. 3280/-ம் சேர்த்து ரூ. 8337/-யையும் நகராட்சியால் செலுத்தப்பட்டிருந்தது. இது தவறு எனக்கூறி உரிய நபரிடமிருந்து செலுத்திய தொகையை வசூலிக்க வேண்டும் என நகராட்சி ஆணையருக்குப் புதிதாகப் பொறுப்பேற்ற நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் கடிதம் மூலம் கேட்டுக் கொண்டார். எந்த நடவடிக்கையும் இல்லாமல் போகவே,ள செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடம் புகார் செய்யப்பட்டது. அதற்கும் எந்த நடவடிக்கையும் இல்லை. கடைசியில் நகர் மன்றத் துணை தலைவர் வீட்டில் இயங்கி வந்த தொலைபேசி இணைப்பைத் துண்டித்தது. வீண் செலவைக் கட்டுப்படுத்தியதுடன் தன் கடமை முடிந்துவிட்டது என நிர்வாகம் அமைதி காத்தது. இதுபற்றி சம்மந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி மேல் அதிகாரிகளுக்குப் புகார் எழுதியதுடன் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையிலும் புகார் செய்தார்.

### மின்சாரச் சிக்கனம்

பொதுவாகச் சில ஊர்களில் நிர்வாகம் சரிவர செயல்படவில்லை என்றால், தெரு விளக்குகள் இரவு நேரங்களில் குறிப்பிட்ட நேரப்படி எரியாமல் சில நேரம் இருட்டுவதற்கு முன்பேயும், விடிந்து சில மணி நேரம் தொடர்ந்து எரிந்து கொண்டும் இருக்கும். இதே நிலைதான் இந்த நகராட்சியிலும். இதைக்கண்ட வள்ளுவன் தினமும் மாலை 6.30 மணிக்கு பின் எரியவிட்டு அதிகாலை 5.30 மணிக்கு முன் நிறுத்தினால் ரூபாய் பத்தாயிரம் (10,000/-) மின் கட்டணம் குறையும் என்பதை கணக்கிட்டதுடன், மழைக் காலங்களில் சூழ்நிலைக்கேற்ப மாற்றம் செய்து கொள்ளலாம், இதை

நடைமுறைப்படுத்தலாம் என நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டதனால் அதன்படி செயல்படுத்தப்பட்டது.

அதன்படி உரிய நேரத்தில் மின் விளக்குகளை நிறுத்தாத ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள, தெரு விளக்குகள் குறிப்பிட்ட நேரத்தில் எரிந்ததால் மின்சார சிக்கனத்துடன், மின்சாரக் கட்டணமும் குறைந்தது.

**டீசல் சிக்கனம்**

நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வந்த குப்பை லாரி மற்றும் டெம்போ போன்ற வாகனங்களுக்கு ஆகும் டீசல் செலவு சம்மந்தப்பட்ட பதிவேடுகள் முறையானதாக இல்லாததுடன் சரியாகவும் பராமரிப்படவும் இல்லை. இவைகளுக்குப் பயன்படுத்தும் டீசலால் நகராட்சிக்கு ஏகப்பட்ட பணச்செலவு. இப்படிப்பட்ட தவறுகள் தெரிய வந்ததும், அப்பதிவேடுகளை முறையாகப் பாராமரிக்கச் செய்ததுடன், அதிகப்படியான டீசல் செவவுக்குக் காரணமாக இருந்த வாகன ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன், அவ்வப்போது கண்காணித்தன் மூலமும் செலவு மிகவும் குறைந்தது. டீசல் சம்மந்தமான சில புகார்கள் மீது நகராட்சி உரிய நடவடிக்கை எடுக்காததால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்குப் புகார் தெரிவித்ததுடன் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையின் கவனத்திற்கு முறைப்படிக் கொண்டு செல்ல முன்னேற்றம் அடைந்தது. துப்புரவுப் பணியில் இருக்கும் TN 31. V. 7523 எண் கொண்ட லாரி ஞாயிற்றுக் கிழமைகளில் குப்பை எடுத்தது போல் டீசல் செலவைப் பதிவேட்டில் எழுதப் பட்டிருந்தது. அத்துடன் நிர்வாக அனுமதி இல்லாமல் திருச்சி TVS கம்பெனிக்குச் சென்று வந்ததாகக் குறிப்பிட்டு இருந்ததைக் கண்டுபிடித்து நகர்மன்றத் தலைவர் புகார் கொடுக்க, சம்மந்தப்பட்டவரின் ஊதியத்தில் மாதம் ரூ. 2000/- வீதம் பிடித்தம் செய்யப்பட்டு வைப்புத் தொகையாக வைக்கப் பட்டது. தணிக்கைத் தடை ஏதும் எழுதாத பட்சத்தில் அந்தத் தொகை சம்மந்தப்பட்டவருக்கே வழங்கப்படும் என உத்திரவிடப்பட்டது.

இதே போல் லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டிய பகுதியில் TN31. T.3658 எண்ணுள்ள பவர்டில்லர் வாகனம் மூலமாகக் குடிநீர் துப்புரவுப் பணியாளர் மூலம் வழங்கியதால் அதிகப்படியான டீசல் செலவுகள் ஏற்பட்டது. இதைப் பதிவேடுகளில் இருந்து தெரிந்துகொண்டு புகார் கொடுக்க சம்மந்தப்பட்ட துப்புரவுப் பணியாளர் மாதச் சம்பளத்தில் 50% தொகை வழங்குவதுடன் மாதம் ரூ. 2000/- பிடித்தம் செய்யப்பட வேண்டும், பின்னால் தணிக்கைத் தடை ஏதும் இல்லையென்றால் அத்தொகை அவருக்கே வழங்கப்படும் என உத்திரவிடப்பட்டது.

TN31. S. 2932 எண்ணுள்ள குடிநீர் வழங்கப்படும் டேங்கர் லாரியில் டீசல் முறையாகப் பயன்படுத்தாதுடன் Log Book-ம் எழுதப்படவில்லை. ஸ்பீடா மீட்டர் கூட இயங்கவில்லை. இதைப் புகாராகத் தெரிவிக்க முறையாக Log Book எழுதப்படுவதுடன், ஸ்பீடா மீட்டர் இயங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இயக்கப்பட்டதுடன் சம்மந்தப் பட்ட அதிகாரிகளின் ஒப்புதல் பெற்ற பின்பு தான் லாரிக்குத் தேவையான டீசல் பிடிக்க வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் இதனால் ஏற்படும் டீசலுக்கான பண இழப்பினை ஓட்டுநரின் ஊதியத்தில் பிடித்தம் செய்து அத்தொகை நகராட்சி நிதியில் ஈடு செய்யப்படும் என்று உத்திரவிடப்பட்டது.

TN31. T. 2568 எண் கொண்ட பொது சுகாதாரக் குப்பை எடுக்கும் லாரி ஓட்டுநர், டீசல் செலவீனப் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனவே, டீசல் பங்க்குக்குச் சேர வேண்டியத் தொகை செலுத்தப்படாததால் பங்க் உரிமையாளர் நகராட்சி வாகனங்களுக்கு டீசல் வழங்க மறுத்து விட்டார். இதனால் மக்களுக்குக் குடிநீர் விநியோகம், பொது சுகாதாரப் பணி நடக்காமல் போக இவர்தான் காரணம் என இவரைப் பற்றிப் புகார் கொடுக்க நிர்வாகம் 2004 ஆகஸ்ட் மாதச் சம்பளத்தை நிறுத்தி வைத்தது.

குடிநீர் சம்மந்தப்பட்ட தீர்மானங்களை நகராட்சி முறையாக அமுல்படுத்தாததால் குடிநீர் தட்டுப்பாடு. அதிக

மக்கள் வாழும் நகராட்சியில் குடிநீர் கிடைக்கவில்லை என்றால் என்னாவது! இதற்குக் காரணம் தீர்மானங்களைச் செயல்படுத்தாமல் இருந்ததால் குடிநீர் தட்டுப்பாட்டை உண்டாக்கினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இதற்குக் காரணம் நகராட்சியின் சீர்கேடே!

குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க TN31. S. 2932 எண் உள்ள அதே குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் செலவைச் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் வசூலிக்க வேண்டும். அத்துடன் நகர்மன்றம் ஒப்புதல் அளித்து உள்ள குடிநீர் சம்மந்தப்பட்ட தீர்மானங்களின் பணிகளை விரைவு படுத்துவதுடன், காலதாமத்திற்குக் காரணமானவர்களிடம் டீசலுக்கு ஆகும் செலவை வசூல் செய்ய வேண்டுமென நகராட்சியைக் கேட்டுக்கொண்டதுடன், இப்பிரச்சனையைச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்குக் கொண்டு சென்றதுடன் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையின் பார்வைக்கும் கொண்டு சென்றார் வள்ளுவன்.

## நகராட்சி ஊழல்கள்

நகராட்சி என்றால் ஊழல்கள் அதிகமாக நடக்கும் என்பது பரவலான செய்தி. அது பல இடங்களில் பல தடவைகள் நிரூபிக்கப் பட்டுள்ளன. இந்த நகராட்சி மட்டும் விதி விலக்கா என்ன? இங்கும் பல முறைகேடுகள். அவற்றில் இந்த மூன்றும்...

1. மின் உதிரி பாகங்கள்
2. குடிநீர் தளவாட சாமான்கள்
3. கொசு ஒழிப்பு பூச்சிக் கொல்லி மருந்து

## 1. மின் உதிரி பாகங்கள்

நகர் மன்றம் ரூ. 2 லட்சத்திற்கு மின் உதிரி பாகங்கள் வாங்கி பயன்படுத்தப் பட்டதாகக் கோப்பு எண் E1/2855/2002 என்ற போலியான பதிவேடுகள் மூலம் ரூ. 65 ஆயிரம் கையாடல் செய்திருப்பது கண்டறியப்பட்டது.

நகர் மன்றம் ரூ. 2 லட்சத்திற்கு மின் உதிரிபாகங்கள் வாங்கிட ஒப்புதல் அளித்தும், நிதிநிலை சரியில்லை எனக் கூறினார்கள். ஆனால் 2002இல் ரூ. 1,02,000க்கு மின் பொருட்கள் வாங்கியதாகக் கணக்குக் காட்டியிருந்தனர். பழுதடைந்த மின் பாகங்களை மாற்றியதாக அதிகாரிகள் பதிவு செய்திருந்த பட்டியலைப் பார்த்தால் நகரமே ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்க வேண்டும்.

2002 அக்டோபரில் வாங்கிய பொருட்களை எந்தெந்த தெருக்களினல் எந்தெந்த தேதிகளில் பொறுத்தப்பட்டது என ஸ்டாக் புத்தகத்தில் போலியாக பதிவு செய்து இருந்தனர். இதில் என்ன ஆச்சரியம் என்றால் பொறுத்தப்பட்ட நாட்களில் ஒன்று நவம்பர் 31, **நவம்பர் மாதத்துக்கு 31ஆம் தேதி இல்லை என்பது உலகறிந்த இரகசியம்.**

ஆனால் இங்கு மட்டும் நவம்பர் 31ஆம் தேதி பணி செய்ததாக எழுதி கின்னஸ் சாதனை செய்திருந்தனர். இதில் மேலும் ஒரு ரெக்கார்டு என்னவென்றால் ஒரு லட்சம் ரூபாயில் 65 ஆயிரம் ரூபாய்க்கு ஊழல் நடந்தது தான். இதைக் கண்டறிந்து நிர்வாக மண்டல இயக்குநருக்கு முறையீடு செய்ததுடன், ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைக்கும் கொண்டு செல்லப்பட்டது.

## 2. குடிநீர் தளவாட சாமான்கள்

குடிநீர் விநியோகத்திற்காக 20HP மோட்டார் ஒன்றும், 7.5 HP மோட்டார் ஒன்றும் என இரு மோட்டார்கள் பொறுத்தப்பட்டு அதற்காக ரூ. 39,450/- வழங்கப்பட்டது என்று

M.F. No. 90 என்ற குடிநீர் விநியோகப் பதிவேட்டில் இருந்தது. இந்த மோட்டார்கள் இருக்கின்றதா என ஆய்வு செய்ய சம்மந்தப்பட்ட பகுதி பொறுப்பு எழுத்தரை எழுத்து மூலம் பணித்தது நகர்மன்றம்.

இரண்டு மோட்டார்களைப் பற்றி ஆய்வு செய்த போது தான் தெரிந்தது இரண்டுமே ஏட்டளவில் தான் உள்ளது. உண்மையில் இல்லை என்பது. அதைவிட மற்றொரு அதிசயம், மோட்டார்களை இயக்க கையுறை (Hand Gloves) ஒன்று ரூ. 70/- வீதம் இருபது வாங்க ரூ. 1400/- செலவு செய்ததாக எழுதிய கணக்கில் (10x70=1400) எனக் குறிப்பிட்டு இருந்தது. இது எப்படி இருக்கிறது என்றால் இருட்டில் தொலைத்த நிழலை இராத்திரியில் தேடுவதைப் போல.

விருத்தாசலம் நகராட்சிக்கு வறட்சி நிவாரண நிதி மூலம் மார்க் II கைபம்ப் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்கான மொத்தத் தொகை ரூ. 45 ஆயிரத்தில் இருந்து ரூ. 50 ஆயிரம் வரை ஆகுமென்று அது சம்மந்தமான பல வல்லுநர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இங்கு மட்டும் இதற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை மதிப்பீடு அளித்து நடை முறைப் படுத்தியிருந்தது. ஆக இரண்டு மார்க் II கைபம்ப் செலவை ஒரே பம்ப்பில் செலவு செய்ததாகக் காட்டிச் சிக்கனத்தின் சின்னமாகத் திகழ்ந்த செயலைப் பாராட்டாமல் உள்நோக்கம் கொண்டு தயாரிக்கப் பட்டதாக நகர்மன்றத் தலைவர் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையில் புகார் செய்யலாமா? செய்து விட்டார்.

### 3. கொசு ஒழிப்பு பூச்சிக் கொல்லி மருந்து

நகர்மன்றத் தலைவர் நகரத்தின் அடிப்படை தேவைகளைக் கண்காணித்து நடவடிக்கை மேற்கொண்டு செயல் படுத்துவதற்காக நகர் மன்ற உறுப்பினர்களை நிதி, குடிநீர், துப்புரவு, சாலை அமைப்பு, மின்சாரம், கட்டட அமைப்பு என ஆறு குழுக்களாகப் பிரித்ததுடன், அக் குழுக்களின் பணிகள் குறித்த நகல்களையும் வழங்க ஒரு சில குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டன எனலாம்.

2002ஆம் ஆண்டில் மாதத்திற்கு 30 லிட்டர் வீதம் 800 லிட்டர் கொசு மருந்து வாங்கிப் பயன்படுத்தப்பட்டதாக ரூ. 1,32,000/- கொடுக்கப்பட்டிருந்தது. இத்தொகை நகர் மன்றம் ஒப்புதல் அளித்திருந்ததை விட அதிகமான தொகையாகப் போனதால் இதனை ஆய்வு செய்ய துப்புரவு குழுவிடம் ஒப்படைத்தார். குழுவில் உள்ள நகர்மன்ற உறுப்பினர் திரு. ந. ஆழ்வார் ஆய்வுப்படி கோப்பு எண் H1/2995/2002இன் மூலம் மிகப்பெரிய ஊழல் கண்டறியப்பட்டது.

போலி இரசீதுகள் மூலம் மேற்படி பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளதுடன், பெறப்பட்ட மருந்துக்கான Way Bill மற்றும் லாரி இரசீது இல்லை. இது குறித்துச் சென்னை ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையில் புகார் செய்யப்பட்ட நகலை, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கும் நகர்மன்றத் தலைவர் எழுத்து பூர்வமாக அனுப்பியதுடன், கொசு ஒழிப்புப் பூச்சிக் கொல்லி மருந்து பயன்பாடு குறித்து முந்தைய பதிவேடுகளை ஆய்வு செய்ய ஆரம்பித்தார். கிணறு தோண்ட பூதம் புறப்பட்ட கதையாயிற்று.

14.7.2000 முதல் 28.08.2001 வரை 14 மாதங்களில் வாங்கிப் பயன்படுத்தியதாகக் கூறப்பட்டது ரூ. 25,27,485/- மதிப்புள்ள 20,600 லிட்டர். இந்தக் கணக்குப்படி சராசரி மாதம் 1471.5 லிட்டர். நாள் ஒன்றுக்கு 49 லிட்டர் வீதம் அடித்திருக்க வேண்டும். அப்படி அடித்திருந்தால் நகராட்சி எல்லைக்குள்ளே கொசு இருந்திருக்குமா? என நீங்களே நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் பதிவேட்டில் சில நாட்களில் 45லிட்டரும், சில நாட்களில் 90 லிட்டரும் கணக்கு காட்டப்பட்டிருந்தது. அவ்வளவும் போலியானவை என்பதற்கு ஆதாரமாக ஒரு ஞாயிறுக்கும் மறு ஞாயிறுக்கும் இடையில் ஏழு நாள் எனக் கணக்கிட்டு அவசர கோலம் அள்ளித் தெளித்தாற் போல, அள்ளுபுள்ளி கணக்குகளை அவசர அவசரமாக எழுதியிருந்தனர். பாவம் எதையுமே ஆராய்ந்து அலசி பார்க்கும் வள்ளுவன், நகர்மன்றத் தலைவராக வருவார் என்று கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஒரு அலுவலக நடைமுறையை, குறிப்பாக நிதி சம்மந்தப்பட்டவை அதில் நடக்கும் தவறுகளைச் சுலபமாகத் தெரிந்து கொள்ள அதன் ஆண்டு தணிக்கையறிக்கை (Report) யைப் பார்த்தாலே போதும். அந்த அலுவலகம் எப்படிப்பட்ட நிலையில் இயங்குகிறது, அதிகாரிகளால் கையாளப்படும் நிதிகள், மற்றவர்களை ஏமாற்றியது, ஏமாற்றுவது என அனைத்தையும் தணிக்கை முறையாகச் செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே தெரிந்து கொள்ளலாம். இல்லை என்றால் அதிலும் பல கோடி ஊழல்களும் மறைக்கப்பட்டு காணாமல் போகும். ஒரு காலத்தில் தணிக்கை துறை மீது ஏகப்பட்ட மரியாதை, மதிப்பு உண்டு. ஆனால் சமீப காலங்களில் சிலவற்றைப் பார்க்கும் போது அதன் மீது சந்தேகப் பார்வை. காரணம் அத்துறையில் உள்ள ஒரு சிலர் செய்யும் அயோக்கிய செயல்கள் தான்.

தணிக்கை அறிக்கையைப் பற்றித் தெரிந்த நகர்மன்றத் தலைவர் விருத்தாசலம் நகராட்சியின் பொது நிதி மற்றும் இதர நிதிகளின் 1999-2000ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையைப் பார்க்கலானார்.

கொசு ஒழிப்புப் பூச்சிக்கொல்லி மருந்து வாங்கியதிலும், வழங்கியதிலும் குறைகள் இருந்தது குறித்து ரூ. 2,39,304/- தணிக்கையில் மறுக்கப்பட்டதை கண்டதும் ரூ. 25,27,485/- செலவில் முறைகேடு எனக் கடலூர் ஊழல் கண்காணிப்புத் துறைக்குப் புகார் செய்தார். இது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் இல்லாத நிலையில் நடவடிக்கையைத் துரிதப்படுத்த நினைவூட்டுக் கடிதம் அனுப்பியதுடன், வழக்கம் போல் சென்னை ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைக்கும் அனுப்பினார். அதை விருத்தாசலம் நகர் மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மக்களுக்கு வெளிச்சம் போட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார், எப்படி என்றால்...

**'மக்களின் வரிப்பணம் மீட்பு ஆர்ப்பாட்டம்'** என்ற தலைப்பில் 25.10.2001இல் விருத்தாசலம் நகர் மன்றத் தலைவராக பொறுப்பு ஏற்றபோது நகராட்சியின் கடன் ரூ. 50

லட்சமும், ஊழியர்களுக்கு 5 மாதம் ஊதியமும் வழங்கப்படாத நிலை.

சிக்கன நடவடிக்கை, வீட்டு வரிவிதிப்பில் ஒளிவு மறைவற்ற தன்மை, தீவிர வரி வசூல், விரைவான இலஞ்சமற்ற சேவை செய்ததன் மூலம் நகராட்சியின் நிதி நிலை ஓர் அளவுக்குச் சீரடைந்தது. முதல் தொலை நோக்குப்பார்வையில் கொண்டு வந்த திட்டங்கள், போடப்பட்ட தீர்மானங்கள் மக்கள் வரிப் பணத்தைப் பல காரணங்களால் செய்த ஊழல்கள், ஊழல் செய்தவரிடம் இருந்து பணத்தைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் இது பற்றிப் பல புகார்கள் ஆதாரத்துடன் அனுப்பியும் சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும், 28.5.2003 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு விருத்தாசலம் நகராட்சி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் என அச்சடித்த ஆயிரக் கணக்கான நோட்டீஸ்கள் மூலம் நகர மக்களுக்குத் தெரியப் படுத்தினார். இதே நோட்டீசில் ஊழலுக்குக் காரணமாக இருந்த நகராட்சி ஆணையர் சீ. எத்திராஜ், நகராட்சி பொறியாளர் டி. சந்திரசேகரன் என இருவர் புகைப்படங்களும் இருந்தன... ஊழல்களை ஆதாரத்துடன் தெரியப்படுத்தி ஊழல் செய்ததாகக் கூறும் இருவர் படத்தையும் வெளியிட்டது தமிழ் நாட்டில் இதுதான் முதன் முறையாக இருக்கும்.

அதே போல் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் தன் அலுவலகம் முன்பே; அதிகாரிகள் செய்த ஊழலுக்காகவும், அவர்களிடம் இருந்து ஊழல் செய்த பணத்தை மீட்க வேண்டும் என வலியுறுத்தியும் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தியது தமிழ் நாட்டில் மட்டுமின்றி இந்திய அளிவல் கூட இங்கு தான் முன் மாதிரியாக நடந்தது எனலாம்.

இது பற்றித் தமிழக அரசு ஊழல் தடுப்புக் கண் காணிப்புத் துறை, நகராட்சி மேல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டார். பலன் பூஜ்யமே. அரசு

அதிகாரிகள் எதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்? எதற்கும் எடுக்க மாட்டார்கள் என்பது தெரியாதா?



# மார்க்கெட் சுவர்

மக்களுக்கு நன்மை விளைவிக்கக் கூடிய எந்தச் செயலையும் துணிவுடனும், நேர்மை யுடனும் செய்தால் வெற்றி பெற முடியும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இதை நடை முறைப் படுத்தும் போது ஏற்படக் கூடிய தடைகள், எதிர்ப்புகள் இவை களைச் சமாளித்து உறுதியுடன் நின்று நிறைவேற்றுவது என்பது சாதாரண காரியமல்ல. இதற்கு அசாத்திய துணிச்சலும் நேர்மையான செயல் களும் முக்கியம். இதுவரை யாரும் செய்யாத, செய்யத் துணியாத செயலை துணிவுடன் செய்து முடித்தார் வள்ளுவன். விருத்தாசலம் நகராட்சி வரலாற்றில் இரு ஒரு மைல்கல். அதுவும் நகர்மன்றத் தலைவராகப் பொறுப்பேற்ற நான்கு மாதத்தில் மிகப் பெரிய சாதனை.

விருத்தாசலம் நகரத்தை அழகுப் படுத்துவது, சாலை போக்குவரத்தை மேம்படுத்துவது மற்றும் தொடரும் விபத்துக்களைத் தவிர்ப்பது என்பது பற்றி விவாதிப் பதற்கான ஆலோசனைக் கூட்டம்

*27.11.2001*இல் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தங்கசுவாமி அவர்கள் தலைமையில் நடந்தது. அதில் கோட்டாட்சியர் (RDO), காவல் துறை கண்காணிப்பாளர் (DSP), சட்டமன்ற உறுப்பினர், நகர் மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். விருத்தாசலம் பாலக்கரை பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் நடப்பதைத் தவிர்ப்பது என்பதுதான் முக்கிய விவாதப் பொருள்.

கிழக்கு மேற்கான பாலத்தின் மேற்குப் பாலக்கரையை ஒட்டி வடக்கில் விருத்தகிரிஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நந்தவனம், காய்கறி மார்க்கெட் இயங்கி வந்ததால், மார்க்கெட்டுக்கு வருவோர் போவோரும், அவர்கள் நிறுத்தும் வாகனங்களாலும், சாலைகளின் ஓரத்தில் பூ, காய்கறி, பழங்கள் விற்கும் தள்ளுவண்டிகள், தரையில் வைத்திருக்கும் சில்லரைக் கடைகளின் ஆக்கிரமிப்புகள், விருத்தகிரிஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் என நெரிசல் அதிகம். அத்துடன் கிழக்குப் பகுதியில் இருந்து பாலத்தைக் கடந்து மேற்கே பெண்ணாடம், திட்டக்குடி செல்லும் பேருந்துகள், கொளஞ்சியப்பர் கோயில் வழியாகச் செல்லும் பேருந்துகள், லாரிகள் என இதே வழிகளில் வருவதாலும், போவதாலும் அப்பகுதி எப்பொழுதும் தேர்த் திருவிழா போல் இருக்கும்.

இடையில் எங்காவது ஒரு வாகனமோ அல்லது இருச் சக்கர வாகனமோ செல்ல சற்று தாமதம் ஆனாலும் கேட்கவே வேண்டாம். இப்பகுதியில் விபத்துக்கள் அடிக்கடி நடந்தபடி இருக்க மேற்சொன்ன காரணங்கள்தான். பாலக்கரையில் இருந்து 75 மீட்டர் தூரத்திற்குள் தான் இந்த விபத்துப் பகுதி.

கோயில் முன்புறம் முன்பே இருக்கும் வழியால் மார்க்கெட்டுக்குச் சென்று வரலாம். இதனால் அடிக்கடி நடக்கும் விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கத்துடன் பாலக்கரையில் இருந்து மேற்கே, வலப்புறம் தடுப்புச் சுவர் வைப்பதுடன் மக்கள் பயனடையும் விதத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்த இடம் அமைத்துச் செயல்படுத்துவது எனக்

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அடுத்த 3 மாதங்களில் இதை நடைமுறைப்படுத்த எந்தச் செயல்பாடும் இல்லாத நிலையில், **தினமலர்** நாளிதழில் '**கலெக்கடர் உத்தரவு காற்றிலே பறக்கிறது**' என்ற தலைப்பில் செய்தி வெளியானதும், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு வட்டாட்சியர் கடிதம் மூலம் 6.3.2002இல் நகராட்சிக்கு வந்தது.

நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் இதை நடைமுறைப் படுத்த 8.3.2002இல் பதினைந்துக்கும் மேற்பட்ட நகராட்சி உறுப்பினர்கள், நகராட்சி ஆணையர், நூற்றுக்கும் மேற்பட்ட நகராட்சி அலுவலர்கள், ஊழியர்கள், கோட்டாட்சியர் இராதாகிருஷ்ணன், தாசில்தார், DSP தலைமையில் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட போலீஸ் முதலியோர்கள், கம்பி, சிமெண்ட் போன்ற தளவாட சாமான்களுடன் மதியம் இரண்டு மணியளவில் அப்பகுதிக்கு வந்து, முடிவு செய்யப் பட்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றனர்.

மனித உயிர்கள் முக்கியம் என்பதைவிட தங்கள் வியாபாரம் பாதிக்கக் கூடாது என்பதற்காக, சில வியாபாரிகள் என்ன ஏது என்று புரியாமலும், ஒரு சிலர் நகர் மன்றத் தலைவர் செயல் படுத்துகிறாரே என்ற ஆதங்கத்திலும், அரசியல் கட்சி சாயம் பூசிக் கொண்ட சிலரும் என ஒன்று சேர்ந்து வியாபாரிகள் என்ற போர்வையில் சுவர் வைக்க எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடையடைப்பு செய்ததுடன், கோஷமிட்டு தர்ணா போராட்டம் நடத்த ஆரம்பித்தனர்.

சுவர் வைக்கப்படும் இடத்தில் "காய்கறி மார்க் கெட்டுக்குப் போக மூன்று இடங்களில் வழி விட வேண்டும்" என்ற கோரிக்கை வைக்க அது போதாதா அதிகாரிகளுக்கு... பலதையும் ஆராய்ந்து கலந்து பேசி இறுதி முடிவெடுத்து உத்தரவிட்டு ஒரு வருடத்திற்குப் பின் நிறைவேற்றப் போகும் சமயத்தில் விபத்து, உயிர் இழப்புகளை விட வியாபாரத்திற்கு மூன்று வழி வேண்டும் என்று சொன்னதற்காகவே பேச்சு வார்த்தையை ஆரம்பித்து விட்டனர்.

வியாபாரிகள் தங்கள் நலனில் அக்கரை கொண்டு பேசிய போது அடிக்கடி நிகழும் விபத்து பற்றியோ, உயிர் பற்றியோ பேசாமல் இருக்கவே நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் "மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிலும், வருவாய்த் துறையின் வரை படத்திலும் வழி விட வேண்டுமென்று எங்கும் குறிப்பிடபடவில்லை. அத்துடன் கோயிலின் முன்புறம் இருக்கும் பழைய வழியே போதுமானது. புதிதாக மூன்று வழி தேவையில்லை. இப்பிரச்சினையில் வியாபாரிகளின் நலனை விட மக்கள் நலனே முக்கியம்" என ஆணித் தரமாக வாதிட பேச்சு வார்த்தை நடத்திய அதிகாரிகளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. எந்த இறுதி முடிவும் ஏற்படாமல் போகவே நகர்மன்றத் தலைவரிடம் நாளைக் காலை 11.00 மணிக்குப் பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்றார் கோட்டாட்சியர்.

"நாளை என்பது என்னுடைய அகராதியில் இல்லை. இரண்டு மணி நேரத்தில் பேச்சுவார்த்தையை முடித்துத் தர வேண்டுகிறேன்" என்று சொல்ல 'வந்து சொல்கிறேன்' என்று சொல்லி அலுவலகம் சென்று விட்டார்.

மற்றவர்கள் எல்லோரும் அங்கேயே காத்திருக்க, கோட்டாட்சியருக்கு போன் செய்தால் Out of Order என்று வந்தது. நேரம் நீண்டது.

"மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவுப்படி DSP மற்றும் 150 போலீஸ்காரர்களுடன், துப்புரவுப் பணியாளர்கள் உட்பட 150க்கும் மேற்பட்ட நகராட்சி அலுவலர்கள், பாலக்கரையில் இரும்புவேலி அமைத்துச் சுவர் வைக்கும் பணிக்காக காத்திருக்கிறோம். கோட்டாட்சியர் சம்பவ இடத்தில் இல்லை" எனக் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தொலை நகல் (Fax) கொடுத்தார் வள்ளுவன்.

சற்று நேரத்தில் கோட்டாட்சியர் வர, இரவு 11.45 மணிக்குச் சுவர் வைக்கும் பணி மீண்டும் தொடங்கி அதிகாலை நான்கு மணியளவில் உத்தரவில் குறிப்பிட்டிருந்தபடி முழுமையாகச் சுவர் வைக்கப்பட்டது. சுவர் வைக்க தடை செய்ய முயன்ற 65 நபர்களைக் கைது செய்தது காவல் துறை.

காலையில் ஆக்கிரமிப்பை அகற்ற ஆரம்பத்திலிருந்து பேச்சுவார்த்தை, மீண்டும் சுவர் வைக்கும் பணி என எல்லாவற்றிற்கும் நகர் மன்றத் தலைவர் அவ்விடத்தை விட்டு நகராமலிருந்து முடித்ததுடன், அந்த இடத்தில் இரும்பு வேலியிட்டு இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமாக அமைக்கப் பட்டது.

மார்க்கெட் தடுப்புச் சுவர் பிரச்சனையில் நகர் மன்றத்துக்கும், வியாபாரிகளுக்கும் தான் பிரச்சனை. ஆனால் சம்மந்தமேயில்லாமல் விருத்தகிரிஸ்வரர் கோயில் நிர்வாகம், ‘மக்கள் நலனே முக்கியம் என்று செயல்பட்ட நகர் மன்றத் தலைவர்’ மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. கோயில் நிர்வாகம் தொடர்ந்த வழக்கு மனுவில், பாலக்கரை மெயின் ரோட்டிலிருக்கும் மார்க்கெட்டுக்குச் செல்ல தடுப்புச்சுவரை அகற்றி வழிவிட வேண்டும் என்றும், அவ்விடத்தை நகரசபை பயன்படுத்த இடைக்காலத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. வழக்கின் பிரதிவாதிகளாக நகராட்சி ஆணையரும், நகர் மன்றத் தலைவரையும் குறிப்பிட்டு இருந்தது.

நீதி மன்றம் ‘நகரசபையின் சட்ட பூர்வமான கடமையில் தலையிட முடியாது. அந்த இடத்தை நகரசபை பயன்படுத்த இடைக்காலத்தடை விதிக்க முடியாது’ என்று வழக்கை விசாரித்த நீதிபதி ரவிராஜ பாண்டியன் தீர்ப்பு கூறி மனுவைத் தள்ளுபடி செய்தார்.

அத்துடன் பிரச்சனையை விட்டுவிடவில்லை ‘உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது’ கோயில் நிர்வாகம். அந்தளவு எதிர்ப்பு தெரிவிக்கக் காரணம், வியாபாரிகள் வழிகாட்டலே என்று கூறலாம். மேலும் சுவரை அகற்ற அவர்கள் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், கண்டன நோட்டீஸ் அடித்து ஒட்டியதுடன் நேரிடையாகவும், மறைமுகமாகவும் பல முயற்சிகளைச் செய்தனர்.

வியாபாரிகளின் பலவித முயற்சியின் பலனாகத் தடுப்பு சுவரை இடித்து மார்க்கெட்டுக்கு வழிவிடுவது சம்மந்தமாகக்

கூட்டம் நடத்த வேண்டும் என 26 நகர் மன்ற உறுப்பினர்கள் எழுத்து பூர்வமாகத் தலைவருக்கு அழைப்பு விடுத்தனர். அதில் 15 நகர் மன்ற உறுப்பினர்கள் தடுப்பு சுவர் கட்ட உதவியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

‘வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அது சம்மந்தமாகக் கூட்டம் நடத்துவது முறையான செயல் ஆகாது நடைமுறையில் இல்லாதது. மேலும் நாம் எடுக்கும் முடிவு நீதி மன்ற நடவடிக்கைக்கு முரணானது’ என்று நகர் மன்றத் தலைவர் மறுத்தார்.

நகர் மன்றத் தலைவர் இல்லாமல் உறுப்பினர்களே கூட்டம் நடத்தி நடவடிக்கை எடுத்துச் செயல்படுத்த சட்டத்தில் இடமுள்ளது. சட்டத்திற்குப் புறம்பான செயலைச் செய்து நியாயப்படுத்தி விடலாம் என்று எண்ணியோ என்னவோ கூட்டம் நடத்தப் போவதாகத் தகவல் தெரிவித்து கூட்டம் நடத்தினார்கள். இதற்கு நகராட்சி ஆணையர் உடந்தை என்பதுடன் அவர்தான் இப்படிச் செய்யலாம் என்று யோசனை சொல்லி செயல்பட்டார் என்பது பின்னர் தெரிந்தது.

கூட்டத்தில் வியாபாரிகள் கோரிக்கையை விட மக்கள் நலனே முக்கியம் என்று செயல்பட்டு தடுப்புச் சுவர் வைக்கப் பட்டதோ, அந்த சுவரை அகற்றி மார்க்கெட்டுக்கு வழிவிட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு நகராட்சி ஆணையர், வியாபாரிகளுடன் கோயில் நிர்வாகமும் மறைமுகமாக கைகோர்த்ததன் அடிப்படையில் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர். இந்தத் தீர்மானத்தின் நகலைக் கோயில் நிர்வாகம் நீதி மன்றத்தில் சமர்ப்பித்துப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ள ‘நகராட்சி ஆணையர், நகர் மன்றத் தலைவர் இருவரில் நகர் மன்றத் தலைவர் மட்டும் தொடர்ந்து எதிர்த்து வருகிறார். எனவே, தடுப்புச் சுவரை அகற்ற உத்திரவிட வேண்டும்’ என்று வாதிட, நகர் மன்றத் தலைவர் இல்லாமல் போடப்பட்ட தீர்மானம் செல்லாது என நகர் மன்றத் தலைவர் சார்பில் வாதிட, வழக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்.

இவ்வழக்கில் நாம் முன்பே குறிப்பிட்டுள்ளது போல் நகராட்சி ஆணையர், அரசு அலுவலர் மற்ற சிலரும், சேர்ந்து சில நகர்மன்ற உறுப்பினர்களைச் சில பல வழிகளால் சரிகட்டப் பட்டு விட்டனர் எனத் தெரிந்ததும், மக்களின் உயிர்காக்கும் நலனே முக்கியம் என்ற நம்பிக்கையில் உறுதியாக இருந்தார் நகர் மன்றத் தலைவர் வள்ளுவன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து நகர் மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர், கோயில் நிர்வாக அரசு அலுவலர் மூவருக்கும் சம்மன் அனுப்பப் பட்டது.

கடலூர் மாவட்ட ஆட்சியரிடம், "பிரச்சினைக்குரிய சம்மந்தப்பட்ட பகுதி சுமார் 75 மீட்டர் இடைவெளியில் 1993 முதல் 2002ஆம் ஆண்டு வரை 62 விபத்துக்கள் நடந்து உள்ளதாகவும், அதில் 12 நபர்கள் இறந்து விட்டனர் என்றும் விருத்தாசலம் காவல்துறை கைப்பட எழுதிய ஆவணங் களையும், சுவர் வைத்த நாள் முதல், ஓராண்டாக ஒரு சின்ன விபத்து கூட நடக்கவில்லை" என்றும் கூறிய வள்ளுவன், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 36ன் படி மனித உயிர்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது என்றும் சுட்டிக்காட்டினார். விசாரணை செய்ததுடன் நேரடியாகப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ககன்தீப்சிங்பேடி தன் உத்தரவில். நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் என்ன தகவல்களைத் தந்தாரோ அந்த அடிப்படையிலேயே சுவர் வைக்கும் முன் விபத்துக்கள் அதிகமாக நடந்திருப்பதாகப் போலீஸ் ஆவணங்கள் படியும், மனத உயிர்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தச் செயலையும் செய்ய நகராட்சிகள் சட்டம் பிரிவு 36ன் படி இடமில்லை என்பதுடன் நகர் மன்றத் தலைவர் இல்லாமல் சுவரை அகற்ற போடப்பட்ட தீர்மானம் (எண் 987) செல்லாது என ரத்து செய்து உத்தரவிட்டார்.

27.11.2001இல் கோட்டாட்சியர் (RDO), காவல் துறை கண்காணிப்பாளர் (DSP), சட்டமன்ற உறுப்பினர், நகர் மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து

கொண்ட விவாதித்து இறுதி முடிவு எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவரால் போடப்பட்ட உத்தரவை ரத்து செய்ய மறைமுகமாகப் பல பிரச்சனைகளை ஏற்படுத்திய நகராட்சி ஆணையருக்கு மிகப் பெரிய பின்னடைவு.

மக்களின் நலன்தான் முக்கியம் என்ற கொள்கைக்காகத் தனித்து நின்று நேர்மையாகச் சட்டத்திற்குட்பட்டு நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் பெற்ற வெற்றி தனி மனித வெற்றி என்றே சொல்லலாம்.

நாம் நிரந்தரமான அரசு ஊழியர். நமக்கு எல்லாம் தெரியும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவிக் காலம் வெறும் ஐந்தாண்டுகள். இக்காலத்தில் அந்தப் பதவியை அவரே இராஜினாமா செய்தாலும் சரி, அல்லது அரசு நிர்வாகத்தைக் கலைத்தாலும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பதவி... அவ்வளவுதான்!

சர்வ வல்லமை படைத்த அரசு ஊழியரான நான் நகராட்சி ஆணையராக இருக்கும் சமயத்தில் நாம் சொல்வதைக் கேட்காமல் அவர் சொல்வதைக் கேட்பதா..., என்ற கர்வம் தலைக்கேறி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ‘மக்கள்தான் எஜமானர்கள், பதவிக்கு வந்தது சேவை செய்வதற்கே’ என்ற அடிப்படையில் செயல்பட்டு வந்த நகர் மன்றத் தலைவருக்கு ஒத்துழைக்க மறுக்க ஆரம்பித்தது நகராட்சி நிர்வாகம். நிர்வாகம் தானே ஆணையர்.





**மார்க்கெட் சுவர்**

## அனுமதியற்ற குடிநீர் இணைப்பு

விருத்தாசலம் பெரியார் நகர் பகுதியில் அனுமதி பெறாத குடிநீர் இணைப்புகள் பல இருப்பதாகக் கவுன்சிலர் சாமுவேல் கென்னடி புகார் செய்தார். அதன் அடிப்படையில் நகராட்சி ஊழியர்கள் நகர் முழுவதும் சென்று குடிநீர் இணைப்புள்ள ஒவ்வொரு வீட்டையும் ஆய்வு செய்ததில் சுமார் 114 அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இரு நகர் மன்ற கவுன்சிலர்கள் வீட்டில் அனுமதி யற்ற குடிநீர் இணைப்புகள் இருந்தது குறிப்பிடத் தக்கது.

முறையற்ற இணைப்புகளுக்குக் காரணமாக இருந்த பிளம்பர் ஒருவரின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. இதே போல் முறையற்ற குடிநீர் இணைப்பு களுக்குக் காரணமாயிருந்த இரண்டு இன்ஜினியர்கள் தற்காலிகப் பணி நீக்கம் (சஸ்பெண்ட்) செய்யப் பட்டனர்.

நகராட்சி குடிநீர் இணைப்பு களை முறையாகக் கொடுத்து, கள்ள இணைப்புகளைத் தடுத்திருந்தால் அதில் வரும் வருமானத்தில், இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு

அதனால் 1000 இணைப்புகள் வழங்கி அப்பகுதி மக்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்திருக்க முடியும். என்ன செய்வது? எல்லா இடத்திலும் இலஞ்சம் பரவிக் கொண்டிருக்கும் போது குடிதண்ணீர் இணைப்பில் வரக்கூடாதா என்ன! வந்து அப்படி மாட்டிக் கொள்வார்கள் என்று தெரிந்திருந்தால் செய்யாமல் இருந்திருப்பார்களோ என்னவோ!

இதுபோன்ற முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்தி நடவடிக்கை எடுத்திட நகர் மன்றத் தலைவர், மேல் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். எதை எழுதினாலும் கண்டு கொள்ளாத அரசு, புத்தருக்கு ஞானம் வந்தது போல், **இதனை நன்கு பரிசீலனை செய்து முறையற்ற குடிநீர் இணைப்புகளை எவ்வாறு நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதுடன், எப்படிப் பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும்** என்றும் அரசாணை பிறப்பித்தது. அதன்படி **அனுமதியற்ற குடிநீர் இணைப்பு களைக் கண்டு பிடித்தவுடன் முன் அறிவிப்பின்றி இணைப்பைத் துண்டித்து ரூ. 5000/- அபராதம் விதிக்கலாம். புதிய குடிநீர் இணைப்பிற்கு முறைப் படியான விண்ணப் பத்தினைப் பெற்று பரிசீலனை செய்து வைப்புத் தொகையையும், குழாய் இணைப்பு வரிக்கான தொகையையும் ஒரே தவணையில் பெற்றுக் கொண்டு இணைப்பு வழங்கலாம்... மின் மோட்டார் பொருத்தி குடிநீர் எடுத்து வருவதைக் கண்டு பிடித்தவுடன் இணைப்பைத் துண்டித்து மோட்டாரைப் பறிமுதல் செய்வதுடன் ரூ. 7000/- அபராதம் விதிப்பது. நீரோட்ட அளவு தடை குழாய் (Flow Control Valve) பொருத்தலாம்** என்றும் அரசாணையில் இருந்தது. மேலும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஆணைகள் வெளியிடுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், பேரூராட்சிகள் இயக்குநருக்கும் அதிகாரம் வழங்கி அரசு ஆணை இடுகிறது என்றும் குறிப்பிட்டு இருந்தது.

மேற்படி அரசாணையை நடைமுறைப் படுத்தலாம் என்று நகர் மன்றத்க் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்து, தீர்மான நடவடிக்கை குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டது. அப்படி இருந்தும் நகராட்சி முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்த முன்வரவில்லை. எந்த நகராட்சி அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் இந்த அரசாணையை அரசு வெளியிட்டதோ, அதே நகராட்சி செய்ய முன்வரவில்லை என்பது தான் ஆச்சரியம்! ஆச்சரியப்பட என்ன இருக்கிறது! செய்து இருந்தால் தான் ஆச்சரியம்! யாருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டு அரசாணை வெளியிடப் பட்டதோ அந்த நகராட்சி ஆணையர் அமுல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதுதான் கேவலம். காரணம் பல... 'நகர் மன்றத் தலைவர் இலஞ்சம் வாங்க விட மாட்டேன் என்கிறார், எதற்கு எடுத்தாலும் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைக்கு எழுதுகிறார்' என்பது தான். இதனை முறையாக ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையின் பார்வைக்குக் கொண்டு சென்றார்.

புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதில் இலஞ்சத்தை முழுமையாக ஒழிக்க எண்ணிய நகர் மன்றத் தலைவர் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி காத்திருப்போருக்கு, "அரசு நிர்ணயித்த தொகையை மட்டுமே செலுத்தி குடிநீர் இணைப்பைப் பெறுங்கள். கூடுதலாக யாராவது பணம் கேட்டால் DGP, Vigilance கடலூர் இலஞ்ச ஒழிப்புத் துறைக்குத் தகவல் சொல்லுங்கள்" என்று தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு தனித் தனியே கடிதம் எழுதினார்.

ஒவ்வொரு இணைப்புக்கும் ஆயிரக்கணக்கில் தனியே பணம் கொடுத்து பல மாதமாகியும், ஏன் வருடக் கணக்கில் ஆகியும் கிடைக்காதது ஐம்பது பைசா கார்டு மூலம் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டுகிறது என்றால் சும்மாவா...? அரசு நிர்ணயித்த தொகையை மட்டும் கட்டி இணைப்பு பெற காத்திருப்பார்களா என்ன! புதிய குடிநீர் இணைப்புக்கான கடிதம் கிடைத்தவுடன் அனைவரும் விழிப்புணர்வு பெற்றனர்.

இந்த நகராட்சியில் இலஞ்சம் கொடுத்தால் தான் நல்லது கூட நடக்கும் எனக் கேள்விப்பட்டவர்களுக்கு, இந்தப் புதிய குடிநீர் இணைப்பு மிகப்பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுடன் மக்கள் இது பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

நெய்வேலியைச் சேர்ந்த இரவிச்சந்திரன் என்பவர் தெற்கு பெரியார் நகரில் வசித்து வருகிறார். குடிநீர் இணைப்பு வேண்டிக் காத்திருந்த அவருக்கு இணைப்புக்கு கடிதம் வராமல் போகவே நகர் மன்றத் தலைவருக்கு புகார் மனு அனுப்பினார் அதில், நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. அம்மாசியிடம் குடிநீர் இணைப்பு வேண்டி ரூ. 2006ம் அஞ்சல் செலவிற்கு ரூ. 12ம் சேர்த்து நகராட்சி கவுண்டரில் கொடுக்க, அதற்கு அவர் ரசீது கொடுக்காததுடன், அலுவலகத்தில் உள்ள குடிநீர் இணைப்பிற் கான பட்டியலிலும் சேர்க்கவில்லை. (நகராட்சிக்குப் பணம் போயிருந்தால் தானே அலுவலக பட்டியலில் சேர்ந்திருக்கும்) எனவே தகுந்த நடவடிக்கை எடுத்து குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டு இருந்தார்.

புகார் மனு கிடைத்ததும் உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுத்து திரு. அம்மாசியைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்ததுடன், சம்மந்தப்பட்ட ரசீதையும் ஆவணங் களையும் 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்கப்படவில்லை என்றால் உடனடியாக காவல் துறையில் புகார் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உத்தரவிடப்பட்டது. உடனடியாக அப்பிரச்சனை தீர்க்கப்பட்டு இரவிச்சந்திரன் வீட்டுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. இதேபோல் திருட்டுத்தனமாகக் குடிநீர் இணைப்பு வழங்க முயற்சி செய்த வயலுரைச் சேர்ந்த ஒருவர் மீது ஆதாரத்துடன் காவல்துறையில் புகார் செய்யப் பட்டது.

முறையற்ற குடிநீர் இணைப்புகளைக் கண்டுபிடித்து அதை முறைப்படுத்தவும், அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் நகர்மன்றம் மூலம் தீர்மாணம் (எண். 714) போடப்பட்டது. தீர்மாணம் போட்டு என்ன பயன்? எந்தச்

செயல்பாடும் இல்லை. மக்களுக்கு நன்மை செய்யும் எந்தவொரு தீர்மானத்தையும் ஆணையரில் அதிகாரப் போக்கால், அமுல் படுத்த முடியாமல் செயலற்ற நிலையில் இருந்தது நகராட்சி. நகர் மன்றத் தலைவரால் மக்களுக்காக் கொண்டுவரும் தீர்மானங்களை நிறைவேற்றாமல் அலட்சியப் படுத்தும் ஆணையரை எதிர்த்துப் பூட்டுப்போடும் போராட்டம் நடத்தப் போவதாக மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் எழுதினார். யார்அப்பேர்ப்பட்ட ஆபத்பாந்தவன் என்கிறீர்களா...! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் மக்களுக்காகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனத் தொடர்ந்து குரல் கொடுப்பவருமான வள்ளுவன் தான்.

நகரப் பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்படாத ஆணையரை மட்டுமல்ல, ஒரு கடைநிலை ஊழியர் மீது கூட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பிற்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது தான் நிதர்சனம். இதனால் நகர் மன்றத் தலைவரே நேரிடையாகக் களத்தில் இறங்கிப் போராட வேண்டிய கட்டாயம். நகர் மன்றத் தலைவர் தனி முயற்சியால் குடிநீர் இணைப்பில் காலம் காலமாக இருந்து வந்த இலஞ்சம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு அதிலுள்ள முறைகேடுகளை நீக்கியதுடன், மக்களிடையே பெரும் விழிப்புணர்வை உண்டாக்கியவர் சொல்வதையும் அவர் கொண்டு வரும் தீர்மானத்தையும் இலஞ்சம் மட்டும் விரும்பும் அதிகாரிகள் எப்படி செயல்படுத்துவார்கள்?



**அனுமதியற்ற குடிநீர் இணைப்பு**

# சொத்து வரி

நகராட்சியின் முதுகெலும் பாகக் கருதப்படுவதுடன் முக்கிய வருவாயை ஈட்டக்கூடியது சொத்து வரி. கூறை வீடு, கல் ஓட்டு வீடு, மெத்தை வீடு, அடுக்கு மாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், அங்காடிகள், திருமண மண்டபங்கள், விடுதிகள், ஹோட்டல்கள் எனப் பல வகையான இடங்களுக்கு வரி எப்படி விதிக்கப் படுகிறது? எந்த அடிப் படையில் சொத்து வரி வசூலிக்கப் படுகிறது என்பது யாருக்கும் எதுவும் புரியாத புதிர். இன்னும் சொல்லப் போனால் தங்கள் தங்கள் வீட்டுக்கு வரி கட்டி வருகிறார் களே தவிர எதன் அடிப்படையில் வரி விதிக்கப் படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதில்லை. இராணுவ ரகசியம் போல் உள்ளது. யாரும் உண்மையைத் தெரிந்து கொள்ள அக்கறை காட்டுவதில்லை. அப்படியே ஓரிரண்டு பேர் கேட்டாலும் நிர்வாகம் சரியான பதிலைச் சொல்லுவதில்லை. இதுதான் உண்மை நிலை.

ஒரு வீட்டுக்குப் புதிதாக வீட்டு வரி கட்ட வேண்டும் என்றால்

யாரை அணுகுவது, யாரிடம் கேட்பது? அதற்கு எப்படிப்பட்ட விதிமுறைகள் என்பதை யாருக்கும் வெளிப்படையாக நிர்வாகம் கூறுவதே இல்லை எனலாம். இதனால் மக்கள் அலைகழிக்கப் படுவதுடன் நகராட்சி ஊழியர்கள் நாட்களைக் கடத்தி வேண்டுமென்றே காலதாமதம் ஏற்படுத்துகிறார்களோ? என்று பலமான சந்தேகம். இதற்கு முக்கிய காரணம் சொத்து வரி விதிப்பில் இலஞ்சம் பெறலாம் என்பதே!

இந்த நீண்ட நெடுங்கால மறைமுகத் தன்மையை உடைத்தெறிந்து, ஒளிவு மறைவற்ற வெளிப்படையான நிர்வாகத்தை வழங்க, வரிவிதிக்கும் முறையை "பாட்னா மாடல்" முறையில் எளிமையாக்கினார் வள்ளுவன்.

## பாட்னா மாடல்

கட்டடம் அமைந்துள்ள இடம், அதன் தன்மை, பயன்படு என மூன்று அம்சங்களைக் கொண்டு சொத்து வரி எளிமையாக்கப் பட்டதால், பாட்னாவின் ஆண்டு வருமானம் 4 கோடியிலிருந்து 17 கோடியாக உயர்ந்தது. இத்திட்டத்தை எஸ்.கே.கில் என்பவர் உருவாக்கினார். இதற்குத் துபாய் நாட்டின் சர்வதேச விருது கிடைத்துள்ளது. இதைத் தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஆந்திரம் போன்ற மாநிலங்கள் பின்பற்றியுள்ளன.

நகரசபை எல்லைகளை மூன்று மண்டலங்களாகப் பிரித்து, அவற்றில் உள்ள சொத்துக்களை அதன் உரிமையாளர் அல்லது வீட்டு உபயோகிப்பாளர் தருகின்ற தகவலின் அடிப்படையில் சொத்துவரி விதிக்கப் படிவங்கள் கொடுத்து அதன்படி 'ஏ' மண்டலம் சதுர அடிக்கு 70 காசும், 'பி' மண்டலம் 55 காசும், 'சி' மண்டலம் 40 காசும் என வரி விதிக்கப்படும் என்று தீர்மானித்து வரி விதிக்கப்பட்டது. இந்த நடைமுறை 1.10.1998 முதல் தமிழ் நாட்டில் அமுலில் இருந்தாலும் நகர பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப் படவில்லை எனலாம். இந்தச் சொத்துவரி விதிப்பு முறை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவு செய்த வள்ளுவன்,

27.10.2002இல் வீட்டுவரி விதிப்பு முறை குறித்து வரி செலுத்துவோரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரி விதிக்க, இவரும் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தினரும் '**பொதுமக்களும் ஏமாற வேண்டாம், நகராட்சியும் ஏமாற வேண்டாம்**' என்ற விளக்ங்கள் அடங்கிய பிட் நோட்டீஸ்களுடன் பிரச்சாரம் செய்தபடி வீடு வீடாகச் சென்று ஆய்வு நடத்தினர். இவர்கள் சென்ற ஒரு பகுதியில் மட்டும் பல வீடுகளுக்கு வரி விதிக்காமல் இருந்தது கண்டு பிடிக்கப் பட்டது. அதே சமயம் சம்மந்தப் பட்டவர்களோ வரி செலுத்தத் தயாராக இருக்கின்றனர் என்பதும் வரி விதிக்காததால் அப்பகுதியில் மட்டும் நகராட்சிக்கு முப்பதாயிரம் ரூபாய் இழப்பு என்றும் தெரிந்தது. இதேபோல் நகர் முழுக்க 1000 வீடுகள் அரசு மற்றும் தனியார் கட்டடங்களுக்கு வரி விதிக்காமல் இருந்ததால் ஆண்டுக்கு ரூ. 5 லட்சம் வருமானம் இழப்பு என்பது தெரிந்தது. நகராட்சிப் பகுதி முழுக்க எல்லா இடங்களையும் ஆய்வு நடத்தி, வரி செலுத்தாத அல்லது வரி வாங்காத இடமோ, நிலமோ இருக்கக் கூடாது என முடிவெடுத்து செயல்பட ஆரம்பித்தார். இதனால் நகராட்சிக்கு வருமானம் அதிகமானது. இலஞ்சம் முற்றிலும் இல்லாததால் வீட்டு வரியைத் தாங்களே முன்வந்து கட்ட ஆரம்பித்தனர். இதனால் நகராட்சிக்கு வருமானம் அதிகமானது.

இந்த ஆய்வின் போது கிருஷ்ணன் நகரில் உள்ள ஒரு டாக்டர் தன் சொந்த வீட்டிற்குக் கட்ட வேண்டிய அளவை விட அதிகப் படியான கூடுதல் தொகை கட்ட வேண்டும் என்று நகராட்சி ஊழியர் ஒருவர் எழுதிக் கொடுத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டு, அந்த டாக்டர் வீட்டுக்குச் சரியான வரி விதிக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

வீட்டு வரி விதிப்பு ஆய்வு செய்வதை வீடியோ எடுத்து அதை நகர கேபிள் டிவி மூலம் ஒளிபரப்பினார். வரி விதிப்பு முறைப் பற்றி பார்த்த மக்களிடையே மிகப் பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டது.





சொத்து வரி விதிப்பு

## நகராட்சி சான்றுகளுக்கு...

பிறப்பு, இறப்புச் சான்று, கட்டிட அனுமதிச் சான்றுகள், பெயர் மாற்றம் செய்வது, புதிய குடிநீர் இணைப்பு போன்றவைகளுக்காக ஒவ்வொரு குடிமகனும் நராட்சியை அணுகும் போது பல தடவை, பல நாட்கள் அலை கழிக்கப் படுகிறான். தான் செய்யும் தினசரி வேலையை விட்டு விட்டு, அரசு ஊழியராக இருந்தால் விடுப்பு எடுத்துக் கொண்டு அலைவது என்பது சர்வசாதாரணம். அப்படியும் காரியம் முடியுமா என்றால் முடியாது. காரணம் இலஞ்சம் என்று எதாவது கொடுத்தாலோ அல்லது உறுப்பி னர்கள் சிபாரிசாலோ முடியும். இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் உறுப்பினர்களில் சிலர், வந்தவர்களின் காரியத்தை முடித்துக் கொடுப் பதற்காக அவர்களிடமே இலஞ்சம் பெற்று, தானே அலுவலக ஊழியரிடம் கொடுத்து முடித்துக் கொடுப்பார். இன்னும் சிலர் இலஞ்சம் பெற்று தானே எடுத்துக் கொண்டு அலுவலக ஊழியர்களிடம் சொல்லி செய்து கொடுப்பார். சிலர் வாங்கிய இலஞ்சத்தைப் பாதிப் பாதியாகப் பிரித்துக் கொள்பவர்களும் உண்டு.

இதேபோல் பிறப்பு, இறப்பு சான்றுகள் பெற, புதிய குடிநீர் விண்ணப்பம் வேண்டி, கட்டட அனுமதி பெறுவது போன்றவற்றிற்காக முறைப்படியாக விண்ணப்பித்தால் ஆய்வு செய்து குறிப்பிட்ட நாட்களுக்குள் கிடைக்கும் என்ற கால வரையறையைக் கேபிள் டிவி மூலம் ஒளிபரப்பினர் வள்ளுவன்.

இது எல்லோருக்கும் தெரிந்து மக்களிடையே பெரும் விழிப்புணர்வு ஏற்பட்டுவிட்டால், சான்றுகள் கொடுக்க இலஞ்சம் வாங்க முடியாமல் போய்விட்டால் என்ன ஆவது! இதனைத் தடுத்து நிறுத்திட வேண்டும். காரணம் சாதாரண குடிமகன் எதையும் சுலபமாக இலஞ்சம் இல்லாமல் எந்தப் பலனும் அடைந்து விடக்கூடாது என்ற பரந்த நோக்கத்தில் கேபிள் டிவியில் ஒளிபரப்புவதை நிறுத்த ஏற்பாடு செய்தனர் சில ஊழல் மகாப் பேர்வழிகள். இச்செயலைத் தடுக்கும் நடவடிக்கையில் தானே ஈடுபட்டால் சமுதாயத்தில் கேவலமாக மதிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில், இதை ஒளிபரப்பக் கூடாது என உள்ளாட்சித் துறை அமைச்சர் தொலைபேசியில் தெரிவித்ததாக நகராட்சி ஆணையர் நகர் மன்றத் தலைவருக்குக் கடிதம் எழுதினார்.

கேபிள் டிவியில் ஒளிபரப்புவதை நிறுத்த வேண்டும் என்றால் நகர் மன்றத் தலைவருக்கு அல்லவா தொலைபேசியில் பேசி இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு இவர்களிடம் பேசினாராம் உள்ளாட்சித் துறை அமைச்சர். ஆமாம், இவர்கள் யார்? அதை நிறுத்த சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இந்த ஒளிபரப்பு நகராட்சி மக்களுக்குக் கேடு விளைவிப்பதா! அல்லது அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டி விடுவதா! உள்ளாட்சித் துறை அமைச்சர் எந்த அடிப்படையில் பேசமுடியும்? இவர்கள் தான் என்ன முழு அதிகாரம் படைத்தவர்களா?

உதாரணமாக, பிறப்பு அல்லது இறப்பு சான்று வேண்டும் என்று விண்ணப்பிக்கும் போது அதற்கான ஆவணங்களை இணைத்துத் தந்து, விண்ணப்பிப்பவர் தன் சுய முகவரி எழுதிய அஞ்சல் அட்டை (Post Card)யை அத்துடன் இணைத்து தந்துவிட வேண்டும். சான்று தயாரானதும், வீட்டு

முகவரிக்கு அஞ்சலட்டை வரும். அதில் அலுவலக நேரத்தில் எதையும் (இலஞ்சம்) கொடுக்காமல் வந்து வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கும். இதனால் காலதாமதம், அலைச்சல், சிபாரிசு, இலஞ்சம் என எதுவும் இல்லாமல் அரசு குறிப்பிடும் ஏழு தினங்களுக்குள் கிடைத்தது. அப்போது அங்குப் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்த நேர்மையாளர் திரு. நடராசன் இப்பணியைச் சிறப்பாக செய்து நகராட்சிக்கு நற்பெயர் ஈட்டினார். அவருக்கு ஊழல் எதிர்ப்பு இயக்கம் **நேர்மையாளர்** என்ற சான்றிதழ் வழங்கி சிறப்பு செய்தது.

அப்படிச் சான்று பெற்றவர்கள் மிகப் பெரிய ஆச்சரியம் அடைந்தனர். கேள்விப்பட்டாலும் நம்பமுடியாமலும் நம்பினர். இப்படி நடந்த நிகழ்வுகள் யாவும் மக்கள் இடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

சொத்து வரி விதிப்பில் நடந்த, நடந்து கொண்டிருந்த இலஞ்சம் ஒழிந்தது மட்டுமல்ல, மக்களும் இலஞ்சத்தை ஏற்காத வண்ணம் விழிப்புணர்வு அடைந்தனர். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், நகர் மன்றத் தலைவரின் தூய்மையான நடவடிக்கைகளும் செயல்பாடுகளுமே ஆகும்.

இந்த சொத்து வரிவிதிப்பில் ஒரு பில் கலெக்டர் செய்த ஊழல் (கவனிக்க... சாதாரண நிலையில் இருப்பவர்) விருத்தாசலம் தாஷ்காண்ட் நகர், 14வது வார்டு, 3வது தெருவில் குடியிருக்கும் இராமசாமி என்பவர், பிரபாகரன் என்ற பில் கலெக்டரிடம் தன் வீட்டுக்கான வீட்டு வரிக்காக ரூ. 1360/- கொடுத்து இருந்தார். வாங்கப்பட்ட பணத்துக்கு உரிய ரசீது கொடுக்காமல் காலம் கழித்து வந்தார். ஒரு வாரம் இரண்டு வாரமல்ல. சுமார் மூன்று மாதமாகியும் ரசீது வரவில்லை. அடிக்கடி கேட்டு தொல்லை படுத்தவே அவசர அவசரமாக 17.10.2003 அன்று இரவு ரூ. 351/-க்கு மட்டும் ரசீது தந்தார். வாங்கியது ரூ. 1360/- ரசீதில் உள்ளதோ ரூ. 351/- இடைப்பட்ட தொகையான ரூ. 1009/- வழக்கம் போல்தான் என்ற தைரியத்தில் கொடுத்து விட்டார்.

தப்பு செய்வர்கள் எந்த இடத்திலாவது மாட்டிக் கொள்வர் என்பது ஊரறிந்த இரகசியம். அதுபோல் அந்த ரசீதில் 20.10.2003 என மூன்று நாள் பின் தேதியிட்டு 17.10.2003 அன்று இரவே கொடுக்க, வாங்கிப் பார்த்த இராமசாமிக்குப் பெரிய அதிர்ச்சி. இந்த முறைகேடான செயலை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், அயோக்கியத்தனத்திற்கு ஒரு முடிவு கட்டி, தண்டனை வாங்கிதந்தால்தான் நல்லது என முடி வெடுத்தார். முடிவு எடுப்பவர்கள் எல்லாம் செயல்படுத்த துணிவதில்லை. ஆனால் இவர் உடனடியாக 18.10.2003ஆம் தேதி நகர் மன்றத் தலைவர் வள்ளுவனிடம் புகார் தந்தார். நகர் மன்றத் தலைவரோ தன் அலுவலகத்தில் வேலை செய்பவர் தானே என்று கொஞ்சமும் பட்சாதாபம் காட்டாமல் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார்.

அரசு ரசீது விருத்தாசலம் நகராட்சியின் சொத்து வரி ரசீது. அச்சு வரிசை எண் 19439ன் கார்பன் நகல். அதில் மதிப்பீடு எண் 9393ன் 2003-2004 முதல் அரை வருடவரி வசூல் தொகையை ரூ. 351/2 எனக் குறிப்பிட்டதுடன் அதில் 20.10.2003 தேதியிடப்பட்டு வரி தண்டலர் (வசூலிப்பவர்) எஸ். பிரபாகரனின் கையொப்பமும், ஆணையரின் ரப்பர் ஸ்டாம்ப் மாதிரி கையொப்பமும் இருந்தது. அதன் அடியில் ஆர். விஜயலெட்சுமி (இராமசாமி மனைவி) கையொப்பமும் இருந்தது.

நகர் மன்றத் தலைவர் புகார் மனு கார்பன் நகலின் பின் பக்கத்தில் மனு பெறப்பட்டது 18.10.2003 காலை 9.30 மணி எனக் குறிப்பிட்டு விட்டு மனுவின் மீது தக்க நடவடிக் கைக்காகப் பரிந்துரைக்கப்படுகிறது என எழுதி கையொப்ப மிட்டு அதன் அடியில் 18.10.2003 எனக் குறிப்பிட்டு, அதைப் பல நகல்கள் எடுத்து வைத்துக் கொண்டு, இதுபற்றி விருத்தாசலம் காவல் நிலைய ஆய்வாளருக்கு அன்றே அவருடைய லெட்டர் பேடில் புகாரை எழுதி கையொப்பம் இட்டதை பல நகல்கள் எடுத்துக் கொண்டபின் இராமசாமி யிடம் அளித்திருந்த புகார் மனு மற்றும் வரி ரசீது கார்பன் நகலையும் அன்றே கூரியர் மூலம் விருத்தாசலம் காவல்

துறைக்கு அனுப்பியதுடன், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை-9, கடலூர் இலஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகம் என அனுப்பினார்.

காவல்துறை உடனே நடவடிக்கை எடுத்துவிடுமா என்ன! வழக்கம் போல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கவே நகர் மன்றத் தலைவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்து, நடவடிக்கை எடுத்திட உத்தரவு பெற்றார். இந்த முயற்சியின் பலனாக அந்தப் பில் கலெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு ஆதாரப்பூர்வமான ஊழலின் மீது நடவடிக்கை எடுக்கக்கூட இவ்வளவு விடா முயற்சியையும், காலத்தையும் எடுத்துக் கொண்டு போராடியதால்தான் வெற்றி பெற முடிந்தது. ஒரு சின்ன ஊழலுக்கே இவ்வளவு போராட வேண்டும் என்றால் மற்ற மிகப் பெரிய ஊழலுக்குப் போராடி வெற்றி பெறுவது என்பது சாதாரண காரியமல்ல. அப்படிப் பட்டவைகளையும் விடாது முயற்சி செய்து வெற்றி பெற ஆரம்பித்தார் நகர் மன்றத் தலைவர்.

இது நகர்மன்ற அலுவலர்களிடம் மிகப் பெரிய அச்சத்தையும், மக்களிடையே ஊழலை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற விழிப்புணர்வையும் உண்டாக்கியது.

நகராட்சி ஆணையர், தன் பதவிக்கு உட்பட்டு நடக்காமல் நகர் மன்றத் தலைவருக்கு எதிரான செயலை நடத்தி வந்தவருக்குப் பில் கலெக்டர் பிரபாகரன் விவகாரம் அவருக்குப் பெரிய இழுக்கை ஏற்படுத்த தன் பதவி மூலம் எதிர்ப்பைக் காட்ட ஆரம்பித்தார்.

நகர் மன்றத்திற்கு வரும் எந்த அரசாணைகளையும் பார்த்து அதன்படி செயல்படுத்த அல்லது கடைப்பிடிக்க நகர் மன்றத் தலைவர் என்ற முறையில் காண்பிப்பது வழக்கம். ஆனால் ஆணையர் அலுவலகத்துக்கு வரும் எந்த அரசாணை

களையும் காண்பிக்காததுடன், அதைப் பற்றி சொல்லுவது கூட இல்லை. இதனால் நகராட்சியைப் பொறுத்தவரை அரசு என்ன ஆணை வெளியிடுகிறது என்பது தெரியாமல் போன நிலை. அத்துடன் வரிமேல் முறையீட்டுக் குழுக்கூட்டம் நடத்த உரிய ஒத்துழைப்பு அளிக்காமல் செயல்பட ஆரம்பித்தார்.

சொத்துவரி எவ்வாறு விதிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து செயல்பட்டதுடன் நகராட்சி எல்லைக்குள் இருக்கும் சொத்து வரி பட்டியலையும் மின் இணைப்புப் பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும். ஒவ்வொரு வார்டுகளிலும் நகராட்சி ஊழியர்களால் வரி விதிக்கப்படாத கட்டடங்கள் அதனால் நகராட்சிக்கு ஏற்பட்ட இழப்புகள் செய்து இருக்கும் ஊழல்களை ஆதாரத்துடன் குறிப்பிட்டு, வருவாய் இழப்பை ஏற்படுத்தும் ஊழியர்களிடம் ஆய்வு நடத்த வேண்டுமென மேல் அதிகாரிகளுக்கு புகார் எழுதினார். மேல் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்தால் உலக மகா அதிசயமாகக் கருதப்படும் என்று எண்ணியோ என்னவோ வழக்கம் போல் மவுனத்தைக் கடைப்பிடிக்க, வேறு வழி இன்றி ஊழல் தடுப்புக் கண் காணிப்புத் துறையில் புகார் செய்தார்.





## குத்தகை - வாடகை பாக்கி

விருத்தாசலம் நகராட்சிக்குச் சொந்தமான கடைகள். பேருந்து நிலையம் மற்றும் சில இடங்களிலும் இருந்தது. இதை உரிமம் எடுத்து கடைகளை நடத்தியவர்கள் மாத வாடகை செலுத்தாததுடன் தொடர்ந்து நடத்திக் கொண்டும் வந்தனர்.

மாத வாடகை உடனடியாக செலுத்தி விட வேண்டுமென்று பல அறிவிப்புகள் தொடர்ந்து கொடுத்தும் பலன் இல்லாமல் போனது. காரணம் என்ன செய்து விடப் போகிறார்கள் என்ற அலட்சியம். அதனால் சம்மந்தப் பட்டவர்கள் அதைப் பற்றிச் சிறிதும் பயப்படவோ அல்லது கவலைப் படவோ இல்லை.

இப்பிரச்சனையை இப்படியே விட்டால் நகர்மன்றத்திற்கு நிரந்தரமாக வரும் வருமானம் நின்று போவதுடன், இதையே மற்றவர்களும் பின்பற்றி நடக்க ஆரம்பித்தால் நாளடைவில் அந்த இடம் அவர்களுடையது என உரிமை கொண்டாடினாலும் கொண் டாடலாம். மீறி காலி செய்யச் சொல்லி வலியுறுத்தினால் நீதிமன்றம் சென்று, தடையுத்தரவு வாங்கி வந்து வழக்கு

முடியும் வரை தொடர்ந்து இருக்க நேரிடலாம். வழக்கு முடிந்து தீர்ப்பு வரும் வரும் காலத்தில் இப்போது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவர்கள் பதவிக் காலம் முடிந்து அடுத்தவர்கள் வர நேரிடலாம். அப்பொழுதும் இதே நிலை தொடர்ந்தால் சொந்த இடம் என உரிமை கொண்டாடுவதுடன் அவர்களுக்குப் பிறகு அவர்கள் சந்ததியினர் உரிமை கொண்டாட ஆரம்பிக்கலாம். இப்படிப் பட்ட நிலையை நீடிக்க விடக்கூடாது என்று கருதி உரிய தொகையை உரிய காலத்திற்குள் கட்டத் தவறினால் உரிமம் ரத்து செய்யப்படும் என்று நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனால் இவ்வளவு செயல்பாடுகளையும் தெரிந்த நகராட்சி நிர்வாகம், யார் செலுத்த வேண்டிய தொகையை முறைப்படி செலுத்தவில்லையோ, யாரால் நகராட்சிக்கு வரவேண்டிய வருமானம் வரவில்லையோ, யார் சட்டத்தை மதிக்காமல் நடந்து வருகின்றனரோ, அப்படிப்பட்ட தவறான உரிமைதாரர்களுக்கே மீண்டும் உரிமம் வழங்கி சிறப்பு செய்தது. நகர்மன்றத் தீர்மானத்துக்கு எதிராக நகராட்சி ஆணையர் இப்படிச் செயல்பட காரணம்! வேறு ஒன்றுமில்லை ஒரே காரணம்... ஊழல் செய்பவர்களை மேலும் ஊழல் செய்ய ஊக்குவித்து, அவர்கள் தரும் இலஞ்சத்தால் தன்னையும் தன் குடும்பங்களையும் செம்மைப்படுத்திக் கொள்ள இந்த ஆயுதத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தார். நகராட்சி ஆணையரைப் பொறுத்தவரை நகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் செயல்களோ, அவர்களால் நகர் மன்றத்தில் நிறைவேற்றும் தீர்மானங்கள் எல்லாம் காற்றில் கலந்த கற்பூரவாசனை போல்.

இதற்குச் சில அவமானகரமான உதாரணங்கள்.

2002 செப்டம்பர் முதல் 2002 நவம்பர் வரை மூன்று மாதங்களில் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய உரிமத் தொகை ரூ. 70.251/- அதை செலுத்தாததால் அந்த உரிமைதாரரின் உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று தீர்மானம் மூலம் கேட்டுக் கொள்ளப் பட்டது. ஆனால் பதவியின் அடையாளம்

ஊழல் செய்வதுதான் எனச் செயல்பட்டுக் கொண்டிருந்த ஆணையர், அந்த நபருக்கே உரிமம் தந்தார். இதனால் ரூ. 70251/- செலுத்த வேண்டிய பாக்கித் தொகையுடன், புதுப்பித்த உரிமத்துடன் செயல்பட்டதினால் கொஞ்ச காலத்தில் தர வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு தெரியுமா! வெறும் **'பத்தேகால் லட்சம்'** மட்டுமே! பத்தேகால் லட்சமா என ஆச்சரியப்படவோ, அதிசயப்படவோ வேண்டாம். இதெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்கும், நேர்மையானவர் களுக்கும் அதிசயமாக இருக்கலாம் ஆனால் ஊழல் செய்வதற்கென்று பதவியில் இருப்பவர்களுக்கு! சே... பத்தேகால் லட்சம் தானே! இதுவே பத்தேகால் கோடியாக இருந்தால் நன்றாக இருந்திருக்குமே! ம்... நமக்கு அவ்வளவு தான் விதி... என வருத்தப்பட்டிருப்பார் போலும்.

ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி தொழிலாளர்களை வைத்து தொழில் செய்து சம்பாதித்தாலும் தொழிலாளர் பிரச்சனை, தொழிலில் நஷ்டம் என ஏற்பட்டு, போட்ட முதலே கரைந்து தேய்பிறை போல் காணாமல் போக வாய்ப்புண்டு. ஆனால் இதன் மூலம் முதலீடு செய்யாமல் உழைப்பே இல்லாமல், வளர்பிறை போல் தினமும் வருமானம். இந்த வருமானம் எப்படி என்கிறீர்களா! பஸ் நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்குக் கட்டணம் வசூலித்ததில் உள்ள பாக்கித் தொகைதான். இதில் தினமும் வசூல் போய் சேர வேண்டிய நகராட்சிக்கு போய் சேராமல் உரிமம் கட்டாதவருக்கே உரிமை கொண்டாட வழி செய்தார் ஆணையர்.

அரசுக்குச் செய்யும் உயரிய பணி எனப் பாராட்டலாம்! இப்படி எல்லாவற்றிற்கும் செய்தால் வளர்ந்த, வளரும் நகரங்கள் எல்லாம் குறுகி, குறுகி, குக்கிராமங்கள் ஆகிவிடாதா! இது மகத்தான செயல் இல்லையா? இப்படிப்பட்ட யோசனை யாருக்கு வரும்? இது போன்ற அதிமேதாவிக்கல்லவா வரும் இது போன்ற செயல்களை மற்றவர்களும் பின்பற்றலாமே!

இப்படிப்பட்ட மகத்தான செயல்கள் மூலம் பயன்பெற்றவர் யார் தெரியுமா? நகர் மன்றத் துணைத்

தலைவராக பதவி வகித்ததுடன், அந்தக் காலத்தில் பதவி வழியில் இருந்து அரசு சொத்துக்களைத் தன் பரம்பரை சொத்துபோல் பாவித்து செயல்பட்டதுடன், அரசு டெலிபோன் இணைப்பை ஒப்படைக்காமலிருந்தவரின் கணவர்தான். டெலிபோன் இணைப்பை ஒப்படைக்க வேண்டுமா என்ன? டெலிபோன் இணைப்பை ஒப்படைக்காமலிருந்து அவர்தான் பதவி மூலம் மக்களுக்குச் சேவை செய்ய வந்தவராச்சே! இப்பேர்ப் பட்டவரின் கணவருக்கு இந்த பத்தேகால் லட்சத்தை எடுத்துக் கொள்ள உரிமை இல்லையா என்ன! எடுத்துக் கொள்ளலாம் என்று ஆணையரே ஏற்பாடு செய்த பின்பு, ஏன் விவாதம்? நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய உரிமத் தொகை ரூ. 70,251யைச் செலுத்தாமல் இருந்ததால் அதற்காக அவரை எந்த ஒப்பந்தப் புள்ளியிலும் சேர்க்காமலிருந்தால் அதுவே இப்போது பத்தேகால் லட்சமாகியிருக்குமா! எப்படிப்பட்ட யோசனையுடன் செயல்பட்ட ஆணையரின் அற்புதமான செயலைப் பாராட்டாமல் அவனமாப் படுத்துகிறார்களே.. இது நியாயமா! தர்மமா! தர்மம் நியாயம் என்றால் என்னவென்று தெரியுமா? என்று ஆணையர் மற்றும் பத்தேகால் லட்சம் கட்டாதவர் மனதிலும் உயர்ந்த சிந்தனை.

இந்த வருவாய் இழப்பைக் கேட்காமல் விட்டால் தான் என்ன! இப்பொழுதெல்லாம் எது எதற்கோ தள்ளுபடி தருகிறதே இன்னும் சொல்லப் போனால் வாங்கிய கடனையே தள்ளுபடி செய்து தம்பட்டம் அடித்துக் கொள்ளும் நாளில் தன் மனைவி நகர்மன்றத் துணைத் தலைவராக இருந்து மக்கள் சேவையே மகத்தான சேவை எனப் பேச்சளவில் சொல்லிக் கொண்டு, தன் குடும்பத் தேவையை மட்டும் வளரச் செய்து கொண்டு செயல் படுத்துபவரின் கணவரால் ஏற்பட்ட இழப்பைப் பெரிது படுத்தலாமா?

நகர் மன்றத் தலைவர் இதைப்போய் வசூலிக்க முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினார். எழுதியதைக் கேள்விப் பட்டதும் இதன் மூலமாக மட்டும் வருவாய் இழப்பு. எவ்வளவோ இருக்கு? யானை போகும் அளவு ஊழல்

நடந்துள்ள நகராட்சியில் எறும்பு எப்படிப் போகலாம் என்று கேள்வி கேட்பது என்ன நியாயம்? எந்த நடவடிக்கையும் வராது என்ற தைரியத்துன் சிறிதும் கவலைப்படாமல் இருந்தார்.

முதலமைச்சருக்கு எழுதியது போல் நேர்மையான ஆணையர் இல்லாததால் பணிகள் சரிவர நடக்கவில்லை, இயங்க வில்லை. நிர்வாகம் செயலிழந்த நிலையில் இருப்பதைக் கண்டு நேர்மையான ஆணையர் வேண்டும் என சம்மந்தப்பட்ட மேலதிகாரிக்குக் கடிதம் எழுதினார்.

கடிதம் எழுதினால் நேர்மையான அதிகாரியை மாறுதல் செய்து விடுவார்களா என்ன! அப்படிச் செய்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி நகராட்சியைச் செம்மையாக்கி விட்டால் என்னாவது! நகர் மன்றத் தலைவரை நல்ல பெயர் எடுக்கவிட்டு விடுவோமோ என்ன! அப்புறம் நாங்கள் எதற்கு அதிகாரியாக இருக்கிறோம்? மக்கள் மூலம் பதவிக்கு வந்தவர் ஐந்து ஆண்டுகளுக்குத் தான். ஆனால் நாங்களோ 58 வயது வரை பதவிக்கு நிரந்தரமானவர்கள். எனவே, அரசு அலுவலர்களுக்குள் என்றும் ஒற்றுமையாகவே இருப்போம். எங்காவது அத்திப்பூத்தது போல் இருக்கும் நல்ல அலுவலர்களை வேண்டும் என்று கேட்டால், அப்படிக் கொடுத்து விட்டால் இலஞ்சத்தை மட்டும் பிரதானத் தொழிலாகக் கொண்டு செயல்படும், எங்களைப் போன்றவர்கள் கதி...! இவர் கடிதம் எழுதினால் என்ன! என எதையும் செய்யாமல் மேல் அதிகாரிகள் கிணற்றுக்குள் போட்ட கல்லாகவே இருந்தனர்.

அதிகாரிகளால் நகராட்சியின் நிர்வாகம் சீரழிந்து வருவதையும், மக்களுக்கு எதையும் செய்ய முடியவில்லை என்பதையும், ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆதாரபூர்வமாகப் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காதது பற்றியும், நேர்மையான ஆணையர் வேண்டி கடிதம் எழுதியது என எல்லாவற்றையும் அரட்டை அரங்கத்தில் வள்ளுவன் உணர்வு பூர்வமாகவும்,

ஆவேசத்துடனும் பேசியதை ஆட்சியாளர்கள் முதல் அதிகாரிகள் வரை ஏன் தமிழ் பேசும் உலக மக்கள் அனைவரும் பார்த்தனர், கேட்டனர்.

தமிழ்நாட்டிலேயே தன்னிறைவு பெற்ற நகரமாக மாற்றுவேன் என அரட்டை அரங்கத்தில் பேசியதால் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு தன் தனித்தன்மையையும், முயற்சியையும் வெளியுலகுக்குத் தெரியப்படுத்திக் காட்டலாம் என்று நினைத்தவரின் நீண்ட கனவு, நீண்டதே தவிர முற்றுப் பெறவில்லை. முற்றுப்பெற்றால் என்னாவது?

இவரது கடிதங்களின் தொல்லை தாங்காமல் கொஞ்ச காலத்திற்குப் பின் ஒரு ஆணையரை மாற்றலில் அனுப்ப... உத்தரவு கிடைக்கப் பெற்ற ஆணையரோ வராமலே தன் செல்வாக்கு மூலம் வேறு ஊருக்கு மாறுதல் வாங்கிச் செல்ல, வேறொருவர் வந்து பணியில் சேர்ந்ததும், இங்குள்ள நிலைமை பற்றியோ, நடைமுறை பற்றியோ அறிந்து கொள்ளாமல் அக்கரையுடன் முயற்சி செய்து மாறுதலில் செல்ல மீண்டும் ஒருவர் வந்து பணியில் சேர்ந்தார்.

புதிய நகராட்சி ஆணையர், நகர் மன்றத் தலைவர் செயல்களைப் பார்த்ததும் துணிச்சலான ஒரு முடிவிற்கு வந்தார். அது என்ன முடிவு என்கிறீர்களா... சம்பாதிக்க வழி இல்லாத இடத்தில் இங்கு எனக்கென்ன வேலை என முடிவெடுத்து நீண்ட நாள் விடுப்பில் சென்று விட்டார். இதனால் அந்த இடத்திற்கு வேறு யாரும் வரமுடியாத நிலை.

இச்செயலால் நிர்வாகத்தில் தானும் செய்ய முடியாமல், அதிகாரிகள் மூலமும் செய்து வைக்க முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தார். வந்து கேட்பவர்களிடம் என்ன பதில் கூறுவது? நகராட்சிப் பணிகளில் முன்பே தேக்க நிலை இருந்தது. இப்பொழுது இன்னும் அதிகமாகிக் கொண்டே போனதுதான் மிச்சம்.



நகராட்சிக்குச் சொந்தமான கடைகளுக்கு வாடகை
செலுத்தாதவர்கள் பட்டியல் நகல்

# ஒத்துழையாமை

ஊழல் செய்தே பழக்கப்பட்ட சிலருக்கும், அவர்களுக்குக் கையாளாக இருந்து செயல்பட்டவர்களுக்கும், இந்த நகராட்சியில் ஊழல் செய்ய வழி இல்லை. அதனால் இலஞ்சம் பெற இடமில்லை. ஏன் வேலை செய்ய வேண்டும்... நமக்கு ஏதாவது கிடைக்காதா? என்று தினமும் ஏங்கித் தவிக்கும்படி நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் எல்லா வழிகளையும் அடைத்து விட்டதால், நகராட்சி அதிகாரிகள் தாங்கள் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல் மெத்தனம் காட்டினர். மெத்தனம் என்பதை விட செய்யாமல் இருக்க என்னென்ன வழிகள் இருக்கிறதோ அத்தனை வழிகளையும் கையாள ஆரம்பித்தனர். ஒரு சிலரோ வேறு நகராட்சிக்கு மாறுதல் வாங்கிச் சென்று விடலாம் என்று தங்களுக்குத் தெரிந்த பல வழிகளில் ஈடுபட ஆரம்பித்தனர். எப்பொழுது மாறுதலில் செல்லலாம் என்று இருப்பவர்கள் எப்படி முழு ஈடுபாட்டுடன் செயல்படுவர்?

அதிகாரியும் மற்றும் சில அலுவலர்களும் கூட்டம் நடத்த

ஒத்துழைக்காததுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை முழுமையாக அமுல்படுத்தவே இல்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றாததற்கு என்ன காரணம்? என யாராவது கேட்டால் ஒரே பதில்... நிதியில்லை என்பது தான்.

இலஞ்சம வாங்க முடியாமல் போனதால், வந்து கேட்கும் அனைவரிடமும் இவ்வளவுக்கும் நகர் மன்றத்தலைவர் தான் முழு காரணம் என்று பல இல்லாததையும், பொல்லாத தையும் நம்பும்படியாகச் சொல்லவேண்டிய விதத்தில் சொல்ல, கேட்பவர்களோ சரியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலும், என்ன ஏதுவென்று விசாரிக்காமலும், இதுதான் உண்மை போலும் என்று நம்பினர். நம்பியது மட்டுமல்ல பேசவும் செய்தனர். இதற்கு முடிவு...?

நகராட்சியின் நிர்வாக ஆணையருக்குக் கடிதம் எழுதியதுடன் எங்கும் நடக்காத, கேள்விப்படாத செயலைச் செய்ய ஆரம்பித்தார் நகர்மன்றத் தலைவர்.

தன் நிர்வாகத்தில் பணி செய்வதில் தொய்வை ஏற்படுத்தினாலும், பணி சரிவர செய்யாமல் இருந்தாலும் சம்மந்தப்பட்டவர்களை விடுமுறையில் போக வேண்டுமெனக் கட்டாயப் படுத்துவார்கள் மேல் அதிகாரிகள்.

ஆனால் இங்கு நிலைமை தலைகீழ்! ஊழியர்களைப் பணியில் சேர உத்தரவிட வேண்டும் என்று தினமும் ஒரு தந்தி. யாருக்கு யார் கொடுத்தது என்கிறீர்களா! உயர் அதிகாரி களுக்கு... நகர்மன்றத் தலைவர் தான். இப்படித் தினமும் ஒரு தந்தி வீதம் நான்கு நாள் ஐந்து நாள் அல்ல... இருபதுக்கும் மேற்பட்ட நாட்கள்... தந்திகள் தவறாமல் போய்க் கொண்டிருந்ததே தவிர அதனால் குண்டூசி முனை அளவுக்குக் கூட எந்தச் சிறு செயலும் நடக்கவில்லை. நடந்தால் தான் ஆச்சரியம் என்கிறீர்களா! அதுவும் சரிதான்.

அரசு இயந்திரம் எவ்வளவு வேகமாகவும், சுறுசுறுப் பாகவும் இயங்குகிறது என்பதற்கு இது ஒன்று போதாதா! விடுப்பில் உள்ள ஊழியர்கள் என்ன அசைந்து கொடுத்து

விடுவார்களா! அவர்கள் எத்தனை நகர் மன்றத் தலைவர்களைப் பார்த்தும் செயல்களைக் கண்டும் இருப்பார்கள். இதெல்லாம் புதுமையாக இருந்ததுவோ என்னவோ... பணியில் இருந்தால்தானே பதில் சொல்ல வேண்டிய நிலை. நமக்கு ஏன் வம்பு? என்று எதிலும் கலந்து கொள்ளாமல் நமக்குள்ள விடுப்பை நாம் எடுத்துக் கொள்கிறோம். என்ன செய்ய முடியும்? என்பது போல் வேண்டும் என்றே விடுப்பை நீட்டிப்பு செய்து கொள்ள ஆரம்பித்தனர்.

இது போன்று செய்தால் முன்னே குறிப்பிட்டது போல் அந்த இடத்திற்கு வேறு யாரும் வர முடியாமலும், பணியைச் செய்ய முடியாமலும் இருக்க செய்த சதி என்றே கூறலாம். அது தான் நடந்தது.

நகராட்சி செயல்பாடுகள் நாளுக்கு நாள் நலிவடைந்து வரும் நாளில் நேர்மையாக இருந்து செயல்பட்டு வரும் நகர் மன்றத் தலைவருக்கு, விடுப்பில் இல்லாமல் பணி புரிந்த மற்ற அனைத்து நகராட்சி ஊழியர்களும் 30.5.2003ல் ஒட்டு மொத்த விடுப்பு எடுத்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

ஒரு அரசு ஊழியர் அரசு திட்டங்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்பது விதி. ஒரு அலுவலகத்திலோ அல்லது பள்ளியிலோ அனைவரும் ஒட்டுமொத்தமாக விடுப்பு எடுக்கக் கூடாது என்பது விதி. அப்படி எல்லோரும் கேட்டால் முதலில் கேட்ட சிலருக்கு விடுப்பு அனுமதி கொடுத்துவிட்டு மற்ற வற்றை நிராகரித்துவிட வேண்டும் என்பது அரசுப் பணியிலுள்ள அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் நன்கு தெரிந்தும் இதைச் செய்துள்ளனர். அதை மேல் அதிகாரிகள் கண்டு கொள்ள வில்லை என்பதுதான் வேதனைக்குரிய விஷயம். விதியை மீறி செயல்படக் காரணம் நகர் மன்றத் தலைவரின் நேர்மை. நேர்மைக்கு எப்படிப்பட்ட சோதனை என்கிறீர்களா! ‘தர்மம் தனைச் சூது கவ்வும் மறுபடியும் தர்மம் வெல்லும்’ என்று பகவத் கீதையில் கூறியுள்ளது போல் கண்டிப்பாக நடக்கும் என்ற நம்பிக்கையிலும்... அதே பகவத்கீதையில் ‘கடமையைச் செய் பலனை எதிர்பாராதே’ என்று சொல்லியது போல் தன்

அடுத்தகட்ட முயற்சியை மேற்கொண்டார். இதற்கு முக்கிய காரணம் நாம் முன்பே குறிப்பட்டது போல் நகராட்சி செயல்படாமல் பணி தேங்க ஆரம்பித்ததுதான். திடீரென் ஒட்டு மொத்த ஊழியர்கள் விடுப்பு எடுத்ததற்கு என்ன காரணம் என்பதை அனைவரிடமும் விளக்கம் கேட்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியருக்குத் தொலைநகல் (Fax) அனுப்பினார் நகர் மன்றத் தலைவர்.

மாவட்டத்தைப் பொறுத்தவரை அனைத்து அரசுத் துறையும், மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும் என்பது சட்டம். அதன்படி இயங்கி வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும். தன் கட்டுப்பாட்டில இயங்கும் நகராட்சி அலுவலர் மீது விளக்கம் கேட்காமல் அந்தப் பிரச்சனையில் காலம் தாழ்த்தினால் நல்ல பலன் ஏற்படும் என்றோ அல்லது காலம் தாழ்த்தி திசை திருப்பி விடலாம் என்று கருதியோ என்னவோ அவர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு அனுப்பி விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இது எப்பேர்ப்பட்ட ஆக்கப்பூர்வமான செயல்! இது போன்ற யோசனை யாருக்கு வரும்? இப்படிப்பட்ட ஆட்சித் தலைவர்களுக்குத்தான் வருமோ!

சுமார் அறுபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வசிப்பதுடன் சுற்றியுள்ள கிராமங்களில் தினமும் பல்லாயிரக் கணக்கானோர் வந்து செல்வதுடன் பல அரசு அதிகாரிகள், தொழிலாளர்கள் என எப்பொழுதும் பரபரப்பாக இயங்கும் நகரத்தின் இதயத் துடிப்பு நகராட்சி எனலாம். அப்படிப்பட்ட நகராட்சியில் பணியாற்றும் ஊழியர்கள் பணி செய்யாததால் சாதாரண மக்கள் முதல், சமூகத்தில் அந்தஸ்துடன் வாழும் மக்கள் வரை அடையும் பாதிப்புகளுக்கு நிவாரணம் தேவை என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தொலை நகல் (Fax) கொடுத்தால் நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி விளக்க மளிக்குமாறு கேட்டால் எப்படி... அப்படியாவது முறையான விளக்கம் வந்ததா! ஊழியர்களைக் கண்டித்தார்களா என்றால்

இல்லை. காரணம் இருவருமே அரசு ஊழியர்கள் என்ற எண்ணமோ தெரியவில்லை. கேட்டதற்குப் பதில்... வழக்கம் போல்தான்!

சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகள் பிரச்சனைகள் என்ன என்பதையும், அதை எப்படித் தீர்க்கலாம் அல்லது உடனடி நடவடிக்கை எடுக்க என்ன வழி, எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தால் பிரச்சனைகளுக்கு ஒரு விடிவு ஏற்படும் என்று இல்லாமல், பிரச்சனைகளுக்கு நடவடிக்கை எடுத்தால் நமக்கு ஏதாவது பிரச்சனை வருமா! அப்படி வந்து நம் மீது நடவடிக்கை எடுத்தால் நம் எதிர்காலம்... என்ற நினைப்பில் ஒரு சிலரும், பிரச்சனைகளுக்கு நாம்தான் முடிவு கட்டணுமா, நமக்கு மேல் அலுவலர் பார்த்துக் கொள்வார் என்னும் ரீதியில் அப்பிரச்சனையை என்ன ஏது என்று கூட விசாரிக்காமல், அப்படியே மேலதிகாரிக்கு அனுப்பித் திசை திருப்பி விடுவது என்ற முறையில் சிலரும், எப்பொழுதும் எதைப்பற்றியம் எதற்காகவும் எள்ளளவு கூட கவலைப்படாமல் நமக்கு ஏதாவது கிடைக்காதா... முறையற்ற முறையில் வரும் வருமானம் தங்கு தடையின்றி வந்தால் போதும் என்ற மனப்பான்மையில் சிலரும் நடந்து கொண்டதால் ஊழல்வாதிகளுக்கு அரண்போல் பாதுகாப்பாக இருந்து கொண்டு தங்கள் கடமையாக (ஊழல் செய்வதை) முழு மூச்சுடன் செயல்பட்டு வந்தனர். அவர்கள் கடமைகளைச் (ஊழல்கள்) செய்யும் போது தப்பித்தவறி ஒரு சில சிறிய பலவகைப்பட்ட ஆபத்பாந்தவ அதிகாரிகள் தூண் போல் தாங்கிக் காப்பாற்றிக் கொண்டு இருக்க... எந்த நேர்மையான செயல்களையும் செய்ய முடியாமல் போனது.

ஒரு சந்தேகம், ஊழல் புரிவோரைத் தடுத்து மேற்கொண்டு ஊழல் செய்யாமல் இருக்கும்படி செய்யவும், ஊழல் செய்த ஊழியரை விசாரித்து தண்டனை வழங்குவதற்கும் மேல் அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. சட்டத்தில் இடமும் உண்டு. ஆனால் இதைச் செய்யாமல் இருந்து வந்த அதிகாரிகள் மீது யார் நடவடிக்கை எடுப்பது, எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது? இப்படிப்பட்டவர்கள் தான் தோன்றித் தனமாகச் செயல்படுவதைத் தடுத்து தண்டிக்க சட்டத்தில் இடமில்லையா!

நாம் நிரந்தர அரசு ஊழியர்கள். நம்மை யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற அகங்காரமா எனத் தெரியவில்லை.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் ஊழல் செய்தவர்களை, செய்து கொண்டிருப்பவர்களை மேல் அதிகாரிகள் நினைத்தால் காப்பாற்றி விடுவர். காப்பாற்றுவது மட்டுமல்ல அவர்களைப் பாராட்டிச் சான்றிதழ் கொடுத்தாலும் கொடுத்து விடுவார்கள். யாரும் ஒன்றும் செய்ய முடியாது. காரணம் அரசு யந்திரம் அவர்கள் கையில். வைத்ததுதான் சட்டம். இவர்கள் இப்படி இருப்பதால் தான் மக்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பெற முடியாமல் கஷ்டப் படுகிறார்கள்! சரி அப்படியே விட்டு விடுவதா... அப்படி விட்டால் யாருக்கு நஷ்டம்? மகக்களுக்குத்தான்! மக்களின் நலன் மீது அக்கறை செலுத்த வேண்டும் என்றுதானே பதவிக்கு வந்தோம். ஊழல் பேர்வழிகளும் அதற்கு உடந்தையாக செயல் பட்டுக் கொண்டிருக்கும் அரசு அதிகாரிகளும் சேர்ந்தால் எந்த உள்ளாட்சி நிர்வாகமும் செயல்படாது. செயல்படுத்த முடியாது என்று உணர்ந்து, இதை இப்படியே விட்டு விட்டால்... நகராட்சியின் நிலை மிகவும் மோசமாகும். மோசமாகும் என்பதை விட நிர்வாகம் சீர்கேட்டையும், அதனால் பாதிக்கப் படுவது நகரில் வாழும் சாதாரண மக்கள்தான்... என முடிவெடுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் வள்ளுவன்.

அதில் 'குடிநீர் சம்மந்தமான பிரச்சனையுடன் புதிய குடிநீர் இணைப்பு, மின் விளக்குகள், மின் விசிறி சம்மந்தப்பட்டது என மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விதத்தில் நகராட்சியில் ஏகமனதாகக் கொண்டு வந்த 729 தீர்மானங்களில் பல அத்தியாவசியமான, மக்களுக்குப் பயன்படக்கூடிய தீர்மானங்களை அமுல்படுத்த நிர்வாகத்திற்கு தேவையான வசதி இருந்தும் செய்யவில்லை.

சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவை ஆதாரத்துடன் எழுத்து மூலம் புகார் செய்தும், எந்தவித நடவடிக்கையும் இல்லை. இதனால் அரசுக்குப் பல லட்சம்

ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டதுடன், தொடர்ந்து ஏற்பட்டும் வருகிறது. இது குறித்து விசாரணை நடத்தி 100க்கு மேற்பட்ட தீர்மானங்களை அமுல் படுத்த உத்தரவிட வேண்டும்' என இருந்தது.

எதிர் மனுதாரர்களாக நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு, நகராட்சி ஆணையர் விருத்தாசலம் ஆகியோர்கள் சேர்க்கப் பட்டனர்.



விருத்தாசலம் நகராட்சி

கண்டிக்கிறோம்! கண்டிக்கிறோம்!! நகர்மன்ற தலைவரை கண்டிக்கிறோம்!!!

(30-5-2003)

விருத்தாசலம் நகராட்சி.

***நகர் மன்றத் தலைவரை கண்டித்து - விருத்தாசலம் நகராட்சி அனைத்து அலுவலர்கள், மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் வெளியிட்ட துண்டு அறிக்கை***

## தீர்மானங்களை அமுல்படுத்த வழக்கு

ந க ர் ம ன் ற த் தா ல் நிவைவேற்றப் பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (எண். 4153/04) தொடர்ந்தார் வள்ளுவன்.

இதில் என்ன ஒரு வேடிக்கை என்றால், நகர் மன்றத்துக்குத் தலை வராகத் எவர் தேர்ந்தெடுக்கப் பட்டாரோ அவரே தன் நகராட்சி நிர்வாகத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்த வேண்டும் என்பதற்காக... அப்படி யென்றால் மக்களால் தேர்ந்து எடுக்கப் பட்ட வருக்கு என்ன தான் அதிகாரம்? அதிகார மில்லாமல் இது பொம்மைக்கு ஒத்த பதவியா? மாநில மத்திய அமைச்சர்களுக்கு உள்ள அதிகாரத்தில் ஒரு பங்கு கூட இல்லையே... என்ன நியாயம்?

இப்படிப்பட்ட நிலையைப் பொது மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக **வழக்கு நிதி தாருங்கள்** என்ற தலைப்பில் பெருமதிப்பிற்கும், வணக்கத்திற்கும்

உரிய விருத்தாசலம் நகர மக்களுக்கு அன்பான வேண்டுகோளுடன் தொடர்கிறேன்... விருத்தாசலம் நகர் மன்றப் பிரச்சனைகள் சரி தவறு, நியாயம் அநியாயம், நேர்மை ஊழல், கண்டிப்பு தவற்றைக் கண்டும் காணாமல் போவது என்பதற்கிடையிலான போராட்டம் தான் தற்போது நடந்து வருவது.

நகராட்சியில் மக்கள் நலனை முன்னிட்டு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் சிக்கன செலவில், இலஞ்சமற்ற முறையில் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தவிர, வேறு எந்தத் தனிப்பட்ட கருத்து மாறுபடும் விரோதமும் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் எந்தத் தீர்மானங்களையும் அமுல்படுத்த மறுக்கிறார்கள். ஊழல் செய்து இருக்கிறார்கள் என்று கடந்த இரு வருடங்களாக உரிய மேல் அதிகாரிகளுக்குப் பல்வேறு புகார் மனுக்களை அனுப்பி உள்ளேன். விருத்தாசலம் நகர மக்களுக்குக் குடிநீர் பிரச்சனை கூட தீர்க்கப்படவில்லை. நகராட்சியில் நடைபெற்ற ஊழலைக் கண்டித்து நகராட்சி அலுவலகம் முன், நானே முன் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினேன். இது வரை எந்த முன்னேற்றமும் ஏற்பட வில்லை. நகராட்சி நஷ்டம் அடைந்துள்ளது.

நகர்மன்றத்தில் இது வரை நிறைவேற்றப்பட்ட 729 தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன். அதற்கு விருத்தாசலம் நகர் மக்களாகிய உங்களின் தார்மீக ஆதரவு தொடர்நது தர வேண்டுகிறேன். அவற்றில் சில...

நகராட்சிக்குச் சொந்தமான 30 நீர்மூழ்கி மோட்டார்கள், 3 ஜெட் மோட்டார்களில் பழுது ஏற்படும் போது பழுது நீக்கம் செய்வது-சக்தி நகர், பெரியார் நகரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி சம்மந்தமாகப் பிருந்தாவனம் நகர்ப் பகுதிக்கும் குடிநீர் வழங்குவது-487 புதிய மின் விளக்குகள் அமைப்பது-தெரு

விளக்குகள் பராமரிக்க உதிரிப் பொருட்கள் வாங்குவது-குப்பைகளை அகற்ற 2 புதிய மிதிவண்டி வாங்குவது-பொது சுகாதாரம் பினாயில், பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு வாங்க எனச் சிலவற்றைப் பட்டியலிட்டுவிட்டு பாராளுமன்றம், சட்டமன்றம் தீர்மானிப்பதை அரசு அதிகாரிகள், அலுவலர்கள் செயல் படுத்துகின்றனர். அதே போல் நகர் மன்றம் தீர்மானிப்பதை நகராட்சி அலுவலர்கள் செயல்படுத்த வேண்டும். ஆனால் மறுக்கிறார்கள்... சுமார் 100க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. மக்களாட்சி இம்மண்ணின் மகத்துவம் என்பதை நகராட்சி அலுவலர்களுக்கு உணர்த்திட, மக்களாகிய எஜமானர்கள் முன் வரவேண்டும். இது சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்ததைக் குறிப்பிட்டுவிட்டு "**விருத்தாசலம் நகர மக்களின் நலனுக்காக வழக்கு நிதியாக ஆளுக் கொரு ரூபாய் தாருங்கள்**" என வள்ளுவன் பெயர் பதவியுடன் அச்சடித்து பிட் நோட்டீஸ்களைப் பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு சென்றார்.

19.04.2004இல் புதுடெல்லி மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு நகராட்சியின் பரிதாப நிலையைத் தெரிவித்து, தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டு இருக்கிறேன். 'ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்' என இங்குள்ள நிலைமைகளைக் குறித்து வேண்டுகோள் விடுத்தார். இப்படிப்பட்ட வேண்டுகோள் விட்ட முதல் நகர்மன்றத் தலைவர் இவராகத்தான் இருக்க முடியும்.

வழக்கு தொடர்ந்ததால் வழக்கை விசாரித்த நீதிபதிகள், அரசுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப... விருத்தாசலம் நகரில் தெரு விளக்குகள் எரிந்தன. பிச்சைக்காரன் ஐம்பது பைசாவைக் கூட பிச்சை வாங்க தயக்கம் காட்டும் காலத்தில், ஒரு பைசா கூட இலஞ்சம் இல்லாமல் முன்னுரிமைப்படி குடிநீர் இணைப்புகள் கிடைத்தன. **E Governance** உள்ளிட்ட ஒரிரு தீர்மானங்கள் மட்டும் அமுல்படுத்தப்பட்டன.

வழக்கு தொடர்ந்ததால்தான் இதுவும் கூட. நேர்மையான முறையில் நகர்மன்றப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்பது தான் அவரின் குறிக்கோள்.



வழக்கு நிதி தாருங்கள்- துண்டறிக்கை

# வழக்கு நடத்த நிதி

மக்கள் நலனுக்காக சென்னை உயர்நீதி மன்றம் சென்றவர் செலவு செய்து வழக்கு நடத்த முடியாதா என்ன! நடத்த முடியம். நகராட்சி ஆணையருக்கும், நகர் மன்றத் தலைவருக்கும் ஏதோ தகராறு என்ன வென்றே தெரியல... என்றும் கண்டும் காணாமலும், கேட்டும் கேட்காமலும் பலருக்கும் தெரியாமல் போய்விடும். இதனால் இவரின் விடாமுயற்சி மக்களுக்குப் புரியாமலே போய் விடும்.

இதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் அவர்களும் நம்முடன் வந்து போராட வேண்டும் அவர்களால் உயர்நீதி மன்றம் வர முடியுமா? வர முடியாது...! அவர்கள் சேர்ந்து வழக்காட முடியுமா? முடியாது! அப்புறம் எப்படி அவர்களை இணைத்துக் கொள்வது? அதற்கு வழி... புதுமை யான வழியை உண்டாக் கினார். இதுவரை எந்த நகர் மன்றத் தலைவரோ அல்லது மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்டவர்களோ செய்யாதது.

‘வழக்கு நிதி தாருங்கள்’ என்ற தலைப்பில் நோட்டீஸ் அடித்து

நகராட்சியில் நடந்த செயல்கள் செயல்படுத்தாமல் இருக்கும் நிலையையும், நடந்த ஊழல்களில் சிலவற்றையும், நகர் மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்த உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு (எண். 4153/04) எனக் குறிப்பிட்டு விட்டு வேண்டுகோளாக, விருத்தாசலம் நகர மக்களின் நலனுக்காக வழக்கு நிதியாக ஆளுக்கொரு ரூபாய் தாருங்கள் என இருந்தது.

நகர்மன்றத் தலைவரே வழக்கு நிதி தாருங்கள் என வேண்டுகோள் விட்டதன் மூலம், நகராட்சியில் என்ன நடக்கிறது-அரசு அலுவலர் செயல்பாடுகளின் நிலை, நகர் மன்றத் தலைவர் விடா முயற்சியால் வழக்கு தொடர்ந்ததன் மூலம் நகராட்சியில் என்ன நடக்கிறது என்பது வெளிச்சத்துக்கு வந்தது.

வழக்குக்காக ஒரு ரூபாய் தானே கேட்கிறார்? ஒரு ரூபாயில் எப்படி வழக்கு நடத்த முடியம்? அதுவும் உயர்நீதி மன்றத்தில்... ஏன், என்ன, என இப்படி மக்கள் கேட்க ஆரம்பித்தனர். இதற்கு ஊழல் எதிர்ப்பு இயக்கத்தினர், குடியிருப்போர் நலச்சங்க உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் வழக்கு நிதியாக வழங்க ஆரம்பிக்க அதனுடைய வரவு செலவுகளைப் பதிவு செய்து செயல்பட ஆரம்பித்தார்.

இதைத்தான் நகர் மன்றத் தலைவர் எதிர்பார்த்தார். நகராட்சியில் நடப்பது எல்லாமும் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரிந்திருந்தால்தான் யாரும் இலஞ்சம் கேட்க முடியாது. கேட்டாலும் கொடுக்க மாட்டோம் என்று மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும். அப்படி இலஞ்சம் கேட்கும் வாய்ப்பு இருந்தால் மக்களே எஜமானர்களாகிக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் அவர்களே கொண்டு வந்து நிறுத்தத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தால் போதுமானது. இலஞ்சத்தை முழுமையாக ஒழித்து விடலாம் என்ற எண்ணத்தில் வழக்கு நிதி தாருங்கள் என்றார்.

பொது மக்கள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தபடாமல் இருப்பதற்கானக் காரணங்களைக் குறித்து விளக்கம் கேட்டு 2004ல் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

உயர்நீதி மன்றம் அனுப்பினால் உடனே பதில் கொடுத்து விட வேண்டுமா என்ன! நாங்கள் உச்சநீதி மன்ற நோட்டீசுக்கும் பயப்படமாட்டோம். உயர்நீதி மன்ற நோட்டீசுக்கா பதில் கொடுப்போம்? எங்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக் கொண்டதா இந்த உயர் நீதி மன்றம்! நாங்கள் பல நீதி மன்றங்களின் பல நோட்டீஸ்களைப் பல தடவைப் பெற்றுள்ளோம். இதற்காகப் பயப்படமாட்டோம் என்று அதிகாரிகள் அலட்சியத்தாலும், உயர்நீதிமன்ற வாய்தாக் களினாலும் வழக்கு நீ...ண்...ட...து. நாள் கணக்கோ அல்லது மாதக்கணக்கோ என்று குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது... வருடக்கணக்கில்தான்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது 3 மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 2007 ஆம் ஆண்டு உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்.

நகராட்சியில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துங்கள் என்று உத்தரவிட மூன்று வருடங்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்! நம்முடைய உள்ளாட்சித் துறைச் சட்டங்கள்! சாதாரணமாகக் கடிதங்கள், ஆர்ப்பாட்டங்கள் உண்ணாவிரதம் என இருந்திருந்தாலும் இருக்க முயற்சி செய்திருந்தாலும் ஒன்றும் நடந்திருக்காது. இது சம்மந்தமாக உயர்நீதிமன்றம் போனதால்தான் இந்த உத்தரவு இல்லை என்றால் அதுவும் இல்லை.

நகராட்சி நிர்வாக அலுவலரை எதிர்த்து, வெற்றி பெறுவது என்பது சாதாரண விஷயமில்லை. அப்பேர்ப்பட்ட வெற்றியைப் பெற்றதன் மூலம், இலஞ்சத்துக்கு எதிராக நேர்மைக்காகப் போராடுபவர் என்ற தனி முத்திரையைப் பதித்ததுடன் வெற்றியைக் கண்டார் வள்ளுவன்.

பார்ப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் இந்த வெற்றி சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் இவ்வெற்றி மிகப்பெரிய சாதனைதான். காலம் கடந்து வென்றாலும் இறுதி முடிவு தர்மத்தின் பக்கம் என்பது போல் இருந்தது இந்தத் தீர்ப்பு.

இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மக்கள் நலனுக்காகத் தீர்மானமிட்டு அதற்காக உயர்நீதிமன்ற வழக்குக்கு மக்களிடமே வழக்கு நிதியைக் கேட்க, அதற்கு மக்களும் வழங்க, வாதாடச் செய்து மகத்தான் வெற்றியைப் பெற்றது என்பது தனி மனித முயற்சி. இது சமுதாயத்துக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்லலாம். இந்த வெற்றியின் பின்னே, நேர்மை, உழைப்பு, சேவை மனப்பான்மை, விடாமுயற்சி எனப் பல...

நகராட்சி மக்களின் நலனுக்காக உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றிப் பெற்றது இதுதான் முதல் தடவை எனலாம்.

# நேரடி விசாரணை வேண்டி உண்ணாவிரதம்

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி விசாரணை கோரி உண்ணா விரதம். நகர் மன்றத் தலைவர் யாராவது நேரடி விசாரணை வேண்டும் என்று உண்ணாவிரம் இருப்பேன் என்று கோரிக்கை விடுவார்களா? விடமாட்டார்கள் என்பது உலகறிந்த இரகசியம், இலஞ்சத்தைப் பெறும், விரும்பும் அதிகாரிகள் எப்படிச் செயல் படுவார்கள்? அதனால் நகர் மன்றத் தலைவராக வள்ளுவன் பதவியேற்ற *25.10.2001* முதல் *30.09.2003* வரை சுமார் இரண்டு வருடங்களில் விருத்தாசலம் நகரத்தில் வசிக்கும் குடிமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வைக்க கொண்டு வந்த தீர்மானங்கள்- எப்படிப் பட்ட வழிகளை மேற் கொண்டால் கடனில் இருக்கும் நகராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என நகரின் முன்னேற்றத்திற்காக நகர் மன்றக் கூட்டங்களின் மூலம் *729* தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன. இதில் அடிப்படைத் தேவைகளான மக்களுக்குக் குடிநீர் வழங்குதல், புதிய குடி நீர் இணைப்புகள் வழங்குவது

மற்றும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை முறைப் படுத்துதல், புதிய மின் விளக்குகள் அமைப்பது குறித்து, பொது சுகாதாரம், உரிமைதாரர்கள் (குத்தகை தாரர்கள்) நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகை சம்மந்தமாக எடுக்கப்பட்ட முடிவு போன்ற அத்தியா வசியமானதும், அவசரமானதும் ஆகிய பண சம்மந்தமான 100க்கும் மேற்பட்ட தீர்மானங்களை அமுல் படுத்தாததுடன் அது பற்றிச் சின்ன நடவடிக்கை இல்லை.

பொது மக்கள் நியாயமான பிரச்சனைகளைக் கூட நிறைவேற்றாத அதிகாரிகளைத் தட்டிக்கேட்கவோ, செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தவோ முடியவில்லை. அதற்குக் காரணம் இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லை என்பதுடன் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இல்லை என்பதாலும் அதிகாரிகள் தன் இஷ்டம் போலச் செயல்பட ஆரம்பித்தனர்.

பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையில் தேர்தலில் நின்று மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவரால் அப்படி இருக்க முடியுமா! மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற எண்ணத்தில் பேச்சிலும் செயலிலும் காட்டி வந்த வள்ளுவன் வேறு வழியின்றி மாவட்ட ஆட்சியரின் நேரடி விசாரணை நடத்த வேண்டுமென முடிவெடுத்தார். அப்படி முடிவெடுக்கக் காரணம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி 1920 பிரிவு 35ன் படி, நகர மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நகராட்சி ஆணையர் நிறைவேற்றவில்லை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் இத்தீர்மானங்களை அமுல்படுத்த உத்தரவிடலாம் என்ற நோக்கத்துடன், நகர்மன்ற அலுவலகத்தில் உண்ணா விரதம் இருக்கப் போவதாக மூன்று வாரங்களுக்கு முன்பே 22.05.2004இல் முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பினார். நாட்கள் தான் கடந்ததே தவிர, இதற்காக மாவட்ட ஆட்சியர் நிர்வாகம் சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை என்பது நிதர்சனம்.

குறிப்பிட்டபடி *15.06.2004*இல் நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் தன் அலுவலக வளாகத்திற்குள் தனியே உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இவரது நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக ஊழல் எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 14 பேர் அலுவலகத்திற்கு வெளியே உண்ணா விரதம் இருந்தனர்.

உண்ணாவிரதம் தொடங்கிய சிறிது நேரத்திற்குப் பிறகு காவல் துறையினர் வந்து, ‘எப்படி உண்ணாவிரதம் இருக்கலாம்’ என்று கேட்க, “எங்கள் அலுவலக வளாகத்துக்குள் நான் உண்ணாவிரதம் இருக்கிறேன். வேண்டுமானால் அலுவலக அறையில் கூட உண்ணாவிரதம் இருப்பேன். நீங்கள் எப்படி என் அலுவலக வளாகத்துக்ககுள் வரலாம்? உங்களுக்கு யார் அனுமதி கொடுத்தது” வள்ளுவன் திரும்பக் கேட்டதும், கேட்டவர்கள் வழக்கம் போல் சென்று விட்டனர். மாலை வரை உண்ணாவிரதம் இருந்தது தான் மிச்சம் ‘ஏன் இப்படிச் செய்கிறீர்கள்... நான் வந்து பேசுகிறேன் அல்லது வேறு யாரையாவது வந்து பேசச்சொல்கிறேன்’ என்று மரியாதைக்குக் கூட சொல்லவில்லை மாவட்ட நிர்வாகம், தவறும் செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வருமே என்று அதிகாரிகளின் மீது உள்ள பாசமாகக்கூட இருக்கலாம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எவ்வளவுதான் நியாயமாகவும், நேர்மையாகவும் இருந்து, நியாயமான கோரிக்கைகளைச் செயல்படுத்த அலுவலர்களுக்குத் தீர்மானமிட்டு கொடுத்தும் செயல்படுத்த சட்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து பல நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், நடவடிக்கை எடுக்க வேண்டிய மாவட்ட ஆட்சித்தலைவர் கண்டு கொள்ள மாட்டார் என்பது போல் அவரது மௌனம்.

இந்த உண்ணாவிரதம் பற்றி அனைத்து தினசரி தமிழ், ஆங்கில நாளிதழ்களிலும், ஒரு சில வாரப்பத்திரிக்கைகளும் எழுதின. எது எழுதியும் எதுவும் நடக்கவில்லை என்பது தான் யதார்த்தம். காரணம் அரசு அதிகாரிகளின் அலட்சியப்

போக்கும், தமிழ் நாடு அரசும் கண்டு கொள்ளாததும் தான். அப்படி இருந்ததற்குச் சில காரணங்கள் உண்டு என்றாலும் அரசியலும் ஒன்று. இதற்கெல்லாம் நகராட்சி ஆணையரும், சில நகர்மன்ற உறுப்பினர்களும் சேர்ந்து, நிர்வாண நாட்டிலே கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன் என்பது போல், இவர் பதவியில் இருந்தால் தொடர்ந்து பிரச்சனை ஏற்படுத்திக் கொண்டு நம்மைச் சம்பாதிக்கவிடமாட்டார். நேர்மையாக இருக்கிறார். அவரை எப்படியும் வழிக்கு கொண்டு வரமுடியவில்லை என்று நினைத்தவர்கள் சிலர் சேர்ந்து மற்றும் சிலரைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டுக் கூட்டணியாக எதிர்க்கத் தொடங்கி வள்ளுவன் அவர்களைப் பற்றி அவதூறாக நோட்டீஸ் அச்சடித்துப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர். இது சம்மந்தமாக அவர்கள் மீது மான நஷ்ட வழக்கு போட்டு, வழக்கு நடந்து வருகிறது.

நகர் மன்றத் தலைவரைத் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 40Bன் கீழ் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தைக் கீழ்காணும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கொண்டு வருகிறோம். நகராட்சி நிர்வாக இயக்குநர் செங்கல்பட்டு இதன் மீது விசேஷ கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என 14 நகர் மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து கையொப்பமிட்டு 23.06.2003ல் அனுப்பினர். அம்முயற்சி பயனளிக்கவில்லை.

## கோப்புகளைக் கைப்பற்றுதல்

நகராட்சியில் கையாடல் செய்த அனைத்துக் கோப்புகளையும் தன்னிடம் வைத்துக்கொண்டு நகர்மன்றத் தலைவர் முழுமையான ஆய்வு செய்ய ஆரம்பித்தார். இவற்றை நகராட்சியில் ஒப்படைத்தால் பதவியில் இருந்தவர்களின் தவறுகள் அழிக்கப்படலாம் அல்லது அப்பக்கங்கள் கிழிக்கப் படலாம், ஒரு சமயம் கோப்புகள் காணாமல் போக வாய்ப்புண்டு என்று கருதி இதுபற்றி ஊழல் தடுப்பக்

கண்காணிப்புத் துறையில் புகார் செய்ததன் அடிப்படையில் ஒப்படைக்காமல் இருந்தார்.

இதுபற்றி விருத்தாசலம் வருவாய் கோட்டாட்சியருக்கு வள்ளுவன் 14.07.2003இல் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில்...

"...விரைவான, கனிவான, இலஞ்சமற்ற சேவையை முதல் இலக்காக நிர்ணயித்து செயல்பட்டு வருவதுடன் மக்களின் வரிப்பணம் முறையாகச் செயல்பட வேண்டும். நகராட்சியின் பணிகள் தரமாகச் செயல்படக் கண்காணிப்பதும், மக்களுக்குத் தரமான சேவை செய்ய உறுதி செய்வதும், மக்கள் பிரதி நிதிகளின் கடமையாகும். இலக்கு நிர்ணயித்து முறையாகத் திட்டமிட்டு விரைவான செயலாக்கம் செய்வதுடன் இடை விடாத கண்காணிப்பு போன்ற அம்சங்களை மையமாகக் கொண்டு மாதிரி நகராட்சியாக..."

நகராட்சிக்கு வரும் அனைத்துக் கடிதங்களையும் நகராட்சியில் இருந்து அரசுக்கு அனுப்பப்படும் கடிதங்களும் நகர்மன்றத் தலைவர் கவனத்திற்குக் கொண்டு வரப்படுவது இல்லை. நகர் மன்றத் தலைவரின் பதிவேட்டில் பதியப்பட்டு கொடுக்கப்படும் குறிப்புகள் மற்றும் கடிதங்களுக்கு முக்கியத்துவம் தராததுடன், கேட்கப்படும் விளக்கங்களுக்கு உரிய விளக்கம் தரப்படுவதும் இல்லை. நகர் மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பல வகை முக்கிய தீர்மானங்களைச் செயல்படுத்தாததால் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, பொது சுகாதாரம் போன்றவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு பெரும் வருவாய் இழப்பையும் ஏற்படுத்தியது.

1999-2000 ஆண்டின் தணிக்கையறிக்கையின் படி இந்த நகராட்சியில் ரூ. 6 கோடியே 95 லட்சம் அளவிற்குத் தணிக்கைத் தடைகள் சுட்டிக் காட்டப்பட்டும் அவை மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை, என்பதுடன் முறை கேடுகள் உள்ள பல பதிவேடுகள் காணடிக்கப் பட்டிருக்கலாம்

என அஞ்சப்படுகிறது. அவை ஊழல்களுக்கான ஆதாரங்கள் எனவும் கருதப்படுகிறது. எனவே முறைகேடு எனக் கண்டறியப்பட்ட பதிவேடுகளையும், கோப்புகளையும் முறைகேடுகள் செய்தவர்களிடமே ஒப்படைத்தல் நகராட்சி நலனுக்கு உகந்ததல்ல...

எனது ஆய்வில் கண்டறியப்பட்ட முறைகேடுகளைத் தங்களிடம் நேரில் விளக்கிட விரும்புகின்றேன். எனவே தங்களது தலைமையில் சட்ட மன்ற உறுப்பினர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகர் மன்றத் துணைத் தலைவர், ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என எழுதி, இதன் நகலை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், சிதம்பரம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், விருத்தாசலம் நகர் மன்றத் துணைத் தலைவர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை ஆகியோருக்கு அனுப்பினார்.

காலங்கள் கடந்தும் இது சம்மந்தமாக எந்த ஒரு நடவடிக்கையோ, சிறு செயல்களோ நடக்கவில்லை. மாவட்ட ஆட்சியரோ, நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்ட மேல் அதிகாரிகளோ, எதையும் செய்யாமல் மவுனம் காக்கவே...

இந்தக் கோப்புகளும், நடவடிக்கை நோட்டுகளும் நகர்மன்றத் தலைவரிடம் இருந்தால், அது என்றும் நமக்கு ஆபத்து. நாம் செய்த ஊழல்கள் வெளிச்சத்துக்கு வந்து விடும் என ஊழல் செய்த ஜாம்பவான்களும், இதற்குத் துணை நின்றவர்களும் எப்படியாவது திரும்பப் பெற பகீரத முயற்சியைப் பல வகையில் கையாள ஆரம்பித்தனர்.

2002-2003இல் மின்சாதன பொருள் வாங்கியது, 2002-2003, 2003-2004 தெருவிளக்கு தனியார் வசம் ஒப்படைத்தது, மின் சாதனப் பொருள் இருப்புப் பதிவேடு, குடிநீர் தளவாட சாமான் இருப்புப் பதிவேடு, கொசு ஒழிப்புப்

பூச்சிக்கொல்லி மருந்து சம்மந்தப்பட்ட கோப்புகள் அனைத்தையும் நகராட்சியில் ஒப்படிக்கத் தவறினால் காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்க நேரிடும் என மிரட்டல் விட்டனர். இச்செயலுக்கு நகராட்சி நிர்வாகம் முழு உடந்தையாக இருந்தது என்பதை விட சம்மந்தப்பட்டவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தது என்றே கூறலாம்.

ஊழல்களைச் செய்ததுடன் அதைக் காட்டிக் கொடுக்கும் கோப்புகளை எந்த முறையிலாவது திரும்ப வாங்கி அவற்றை அழித்துவிட்டு, தாங்கள் உத்தமர் போல் காட்டிக்கொள்ள முயலவே மேற்படி கோப்புகள் மீது அதிக அக்கறைக் காட்டுகின்றனர் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்தது நகர் மன்றத் தலைவருக்கு. உடனே அவர் இவைகள் மீது விரைவான விசாரணை நடத்த வேண்டும் என்று ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைக்குக் கடிதம் எழுதினார்.

## ஊழல் தடுப்புக் கண்காணிப்புத்துறை - ஹானஸ்ட் அம்பிகாபதி

கடலூர் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையில் ஆய்வாளராக இருந்து நேர்மையான முறையில் பணி செய்த 'ஹானஸ்ட் அம்பிகாபதி' அவர்கள் நகர்மன்றத் தலைவரை சந்தித்து விசாரணை நடத்தியதில் உண்மை இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு விரிவான விசாரணை நடத்த அனுமதி வேண்டுமென அரசுக்குக் கடிதம் எழுதினார்.

அதன் அடிப்படையில் சுமார் ஓர் ஆண்டு கழிந்து அரசு அளித்த அனுமதியின் பேரில் கடலூர் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை ஆய்வாளர் திரு. ஜி. பன்னீர்செல்வம் அலுவலகக் கடித எண். 53/2004/LB/CL நாள் : 30.09.2004ன் படி நகராட்சியில் நடக்கும் முறையற்ற செயல்கள் மற்றும் நடந்த ஊழல்கள் குறித்தும் கடலூர் மாவட்ட ஊழல் தடுப்புக் கண் காணிப்புத் துறைக்கு அவ்வப்போது புகார்களை அனுப்பி வந்தார் நகர் மன்றத் தலைவர். எனவே விருத்தாசலம் முன்னாள்

ஆணையர் உள்ளிட்ட இருவர் மீது சென்னை இலஞ்ச ஒழிப்புக் கண்காணிப்புத்துறை உத்தரவுப்படி விரிவான விசாரணை நடத்த வேண்டியுள்ளது. எனவே முன்னாள் ஆணையர், முன்னாள் பொறியாளர்களின் அலுவலக டைரி போன்ற 26 ஆவணக் கோப்புகளை உடனே அனுப்பி வைக்குமாறு விருத்தாசலம் நகராட்சி ஆணையருக்கு ஒரு அவசரக் கடிதம் அனுப்பினார்.

அதன் அடிப்படையில் குறிப்பிட்டிருந்த அனைத்து கோப்புகளுகம் ஒப்படைக்கப் பட்டன. அதன் மீது விசாரணை நடத்த வேண்டுமெனப் பல நினைவூட்டுக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார் வள்ளுவன். அப்படியாவது உண்மையை உலகுக்குத் தெரிவித்து ஊழல்வாதிகளை அடையாளம் காட்டலாம் என்ற நம்பிக்கையில்...




**மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி விசாரணை வேண்டி நகர் மன்றத் தலைவர் வள்ளுவன் உண்ணாவிரதம்**



**கடலூர் ஊழல் தடுப்புக் கண்காணிப்பத் துறை ஆய்வாளர் திரு. ஜி. பன்னீர்செல்வம் 26 ஆவண கோப்புகளை அனுப்பி வைக்க விருத்தாசலம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய கடித நகல்**

## வாழ்வுரிமை இல்லாமல் வாக்குரிமை ஏன்?

நகரங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இதன் அடிப்படையில் நகரத்தைச் சுற்றி காலம் காலமாய் ஒட்டியிருந்த சின்ன கிராமங்கள் கூட காணாமல் போய், நகர எல்லைக்குள் நகரத்தின் ஓர் பகுதியாய் மின்ன ஆரம்பித்தன. எனவே இன்றைய நகர வளர்ச்சி என்பது வெகு வேகமாகவும், விரை வாகவும் நடந்து கொண்டி ருக்கிறது.

என்னதான் நகரத்துடன் இணைந்தது போல் இருந்தாலும் அப்பகுதிகள் முழுமையாகச் சேர்ந்து -ள்ளதா என்றால் இல்லை. காரணம் குடியிருப் போருக்கும், குடியேறிய வர்களுக்கும் போதிய வசதி செய்து தரப்படாததே. இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால் புதிய நகர்கள் தோன்றி, அதில் வீடு கட்டி வசித்து வருபர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட மாட்டாது என்பதே உண்மை. இது ஒரு நகரத்தில் மட்டும் இருப்பதில்லை. ஏறக்குறைய வளர்ந்து வரும் அநேக நகரங்களின் நிலையும் இதுதான்.

இதே போன்ற நிலை விருத்தாசலம் நகரப் பகுதியியல் புதிய குடியிருப்புகள் (நகர்கள்) ஏற்பட்டு விரிவடைந்தது. புதிய பகுதிகளில் உருவாக்கப்பட்ட பலதரப்பட்ட வீடுகளில் மக்கள் வசித்து வந்தாலும், அப்பகுதிகளுக்குச் சாலை வசதிகளோ, தெரு விளக்குகளோ இல்லை என்றே கூறவேண்டும். ஏனென்றால் அந்த வீடுகளுக்கு வரி விதிப்பு விதித்தால்தான் நகராட்சியில் இணைந்ததற்கான அங்கீகாரம். அதன் பிறகு குடிநீர், சாலை, தெரு விளக்கு போன்றவைகளுக்கு வாய்ப்பு ஏற்படும். எனவே அப்பகுதியில் வசிப்பர்வகள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு வரி விதிக்க வேண்டி நகராட்சி அலுவலகத்துக்கு அடிக்கடி படையெடுப்பார்கள். எந்தப் படைபெடுப்பை எத்தனை தடவை எடுத்தாலும் மலையைக் கல்லி எலி பிடித்த கதைததான்.

புதிய பகுதிகளுக்குத் தெரு விளக்குகள், சாலை வசதிகள் செய்யச் சொல்லி அந்தந்தப் பகுதி மக்கள் அமைச்சர்களிடமும், சம்மந்தப் பட்ட அதிகாரிகளிடமும் புகார் மனு கொடுப்பர். சாலை மறியல் போன்ற போராட்டங்களில் சில சமயம் ஈடுபட்டாலும், பேச்சு வார்த்தைக்கு வரும் அதிகாரிகளிடமும், மக்களிடமும் நகராட்சி அதிகாரிகள் ரத்ன சுருக்கமாக ஒரே வரி பதில். அந்த பதில் என்ன தெரியுமா?

‘இந்தப் பகுதி அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு. எனவே இங்குத் தெருவிளக்கு, சாலை வசதி செய்து தர முடியாது’ என்பது தான். சாலை மறியல் செய்த மக்களும், பேச்சுவார்த்தைக்கு வந்த அதிகாரிகளும் அத்தோடு சரி. எதுவும் பேசமுடியாமல் சென்று விடுவர். நகராட்சி அலுவலர் முன் இவர்கள் கூட்டமும், கூச்சலும் எடுபடாமல் போய்க் கொண்டிருந்தது. எல்லோரும் இப்படியே போனால் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களுக்கு அடிப்படைத் தேவைக்கு எப்பொழுது தான் விடிவு? இப்பிரச்சனைக்கு முடிவுதான் என்ன? யார்தான் முடிவு கட்டுவது?

நகர்மன்றத் தலைவர் வள்ளுவன் இதைப்பற்றி சிந்தித்து, இதுவரை யாரும் செய்யத் துணியாத செயலைச் செய்தால்தான்

விடிவு ஏற்படும். இதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பார்களா; தன் பின்னால் அனைவரும் வந்து நிற்பார்களா; என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல், தனித்து நின்று போராட்டத்தை ஆரம்பித்தார்.

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் என்ற காரணத் தினால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. **அடிப்படை வசதி கூட பெற முடியாமல் வாழ்வுரிமை அளிக்கப் படாத போது இவர்களுக்கு எதற்கு வாக்குரிமை? அங்கீகரிக்கப் படாத மனைப் பிரிவுகளில் வசிப்பவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கு** என்ற கோரிக்கையை முன் வைத்து விருத்தாசலம் தாசில்தார் அலுவலகம் முன் 13.07.2005 அன்று தனித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக முறைப்படி அறிவித்தார்.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பாதிக்கப் பட்ட பிரச்சனைக்காக மக்கள்தான் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், சாலை மறியல் என்று போராடுவர். அதற்குத் தலைமை தாங்க, துவக்கி வைக்க, முடித்து வைக்க அல்லது சிறப்புரையாற்ற என்றுதான் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், அரசியலைச் சார்ந்தவர்களும், தன்னார்வ அமைப்பினரும் வந்து பேசிவிட்டு போய் விடுவர். எங்காவது மக்கள் பிரச்சனைக்காக இப்படி அத்திபூத்தாற்போல் போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மேலே சொன்னவர்கள் பாதிக்கப்பட்ட மக்களையும் இணைத்துக் கொண்டு போராடுவதைத்தான் நாம் அனைவரும் கண்டும், கேள்விப்பட்டும் இருக்கின்றோம். அதேசமயம் குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் மக்கள் பிரச்சனைகளுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தனித்து உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்ற அறிவிப்பைக் கேட்டவர்களுக்கு ஆச்சரியமாகவும் வினோதமாகவும் இருந்தது. ஏன் என்றால் இதுவரை யாரும் இப்படி அறிவிப்பு செய்ததில்லை.

நகர் மன்றத் தலைவர் தனித்து உண்ணாவிரதம், பிரச்சனையுள்ள மக்களை இணைத்துக் கொள்ளாமல். இந்தக் கோரிக்கையைப் பற்றி, பல ஆண்டுகள் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருந்த அரசு அலுவலர்களுக்கு, எந்த விதத்திலாவது முடிக்க வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

விருத்தாசலம் தாசில்தார் நடராஜன் தலைமையில் அமைதிப் பேச்சு வார்த்தை, அதில் நகர் மன்றத் தலைவர், நகராட்சி ஊழியர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், குடியிருப் -போர் நலச் சங்க நிர்வாகிகள், காவல் துறை உதவி ஆய்வாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். பலதரப்பு வாதங்களுக்குப் பின் **அன்றைய தினத்திலிருந்து 45 தினங்களுக்குள் நகராட்சி எல்லைக்குள் அங்கீகரிக்கப் பட்ட மனைப் பிரிவுகள் அங்கீ கரிக்கப்படாத மனைப் பிரிவுகள் பற்றிய விபரங்களை நகர் மன்றத் தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும் என இறுதி முடிவு எடுக்கப்பட்டது. அதன் பிறகு அனைத்துப் பகுதிகளுக்கும் வசதிகள் கிடைத்தன.**

இதனால் ஒரு பொதுப் பிரச்சனைக்காகத் தனித்து உண்ணாவிரதம் இருப்பேன் என்று அறிவித்த போராட்டத்தை இல்லை என அறிவித்தார். நீண்ட நெடுங்காலப் பிரச்சனை



**வாழ்வுரிமை இல்லாமல் வாக்குரிமை ஏன்? பேச்சுவார்த்தை - தாசில்தார் நடராஜன்**

இவ்வளவு விரைவாகவும், சுலபமாகவும் நடக்குமென யாரும் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை என்பது தான் நிதர்சனம்.

ஆண்டாண்டு காலமாக அங்கீகரிக்கப் படாத மனைகளில் குடியிருக்கும் மக்களுக்கு இப்பேச்சு வார்த்தை முடிவு விடி வெள்ளி போல் அமைந்தது. நகர் மன்றத் தலைவர் எடுத்த தனித்து உண்ணாவிரத அறிவிப்பு என்றதால்தான், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை அங்கீகரிக்க ஒரு நேர்மையான வழி கிடைத்தது என்று மகிழ்ச்சியடைந்தனர். அதிக மகிழ்ச்சி யாருக்கு என்றால் அப்பகுதியில் குடியிருப் போருக்கும் குடியிருப்பு நலச்சங்கத்தினருக்கும் தான்.

இச்செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களை விட வருத்தப் பட்டவர்களும், விரக்தியடைந்தவர்களும் தான் அதிகம். 'இப்படி நாமும் செய்து பாதிக்கப்பட்ட மக்களிடம் நல்ல பெயர் எடுத்து இருக்கலாமே இந்த வழி தெரியாமல் போச்சே!' என ஆதங்கப் பட்டனர். என்ன செய்வது! பதவியில் இருப்பவர் பதவி இருக்கும் வரை பொதுமக்களுக்கு என்ன பிரச்சனை என்பதையே தெரிந்து கொள்ளாதவர்கள்தான் பலர். அப்படியே தெரிந்தாலும் முழுமையாகத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆர்வம் காட்டாமல் இருந்தால் பிரச்சனை தீர என்ன செய்யலாம் என்றா யோசிப்பர்! சிலர் இந்தப் பதவியில் இருக்கும் போதே எப்படிச் சம்பாதிக்கலாம்! மக்களிடம் எதைச் சொன்னால் நம்புவார்கள்? எப்படிக் காண்டிராக்ட் எடுக்கலாம்? அப்படி எடுத்தால் நாமே செய்யலாமா அல்லது பர்சன்டேஜ்சில் தள்ளிவிடலாமா இப்படிப் பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் நிலையில் இருப்பர்வகளுக்கு எங்கே மக்களைப் பற்றி சிந்திக்க நேரம் இருக்கிறது?

ஆனால் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு பதவியில் இருந்த காரணத்தினால் தான், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு அதனால் ஏற்படும் இழப்பு இவற்றை நிரந்தரமாகப் போக்க, என்ன வழி எனச் சிந்தித்துச் செயல்பட்டு தனித்து உண்ணாவிரதப் போராட்டம் என அறிவித்ததன் பலன்

பேச்சுவார்த்தை. 'மக்கள் நலனே மகேசன் நலன்' எனச் செயல்பட்டார் வள்ளுவன்.

நகராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிகளை முறைப் படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு பல ஆணைகளை வெளியிட்டுள்ளது. அவற்றில்...

"மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளில் 75% குறைந்தது 20 அடி அகலத்திற்குச் சாலைகள் இருப்பதுடன் திறந்தவெளி பொது ஒதுக்கீட்டுப் பகுதிகளை மனு தாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும் சாலைகள், குடிநீர், தெரு விளக்கு அமைத்தும் மற்றும் வடிகால் வசதிகளை செய்தும் மனைப்பிரிவு முழுமையான பிரிவினை செய்து அதனை உள்ளாட்சிக்கு முறைப்படி ஒப்படைத்த பின்னர், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறையைப் பின்பற்றியும் நகராட்சி மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே இம்மனைப் பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்."

விருத்தாசலம் நகராட்சி திரு. என். முத்தையன் மனைப்பிரிவுக்கு நகராட்சி கடிதம் பார்வை ந.க. எண். 7568/ 2003 சி1 நாள் 11.8.2005ன் படி நகர்மன்றம் ஒப்புதல் வழங்கலாம் என ஆணையர் திரு. தி.கு. கண்ணன் ஒப்புதல் கோரினார்.

அதற்கு நகர் மன்றத் தலைவர் வள்ளுவன், மனைப்பிரிவு அங்கீகாரம் பெற அரசு சுட்டியுள்ள நிபந்தனைகளை மீறிப் பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறந்த வெளி பொது ஒதுக்கீட்டுப் பகுதிகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும் சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளைச் செய்து மனைப் பிரிவை முழுமையான பிரிவு செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னர், மேலும் அரசு ஆணையில் கண்டுள்ள... இதற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து அம்சங்களும் பின் பற்றப்படவில்லை என்பதுடன், இது சம்மந்தமாகக் கேட்கப்பட்ட சிலவற்றிற்கு ஆணையர் விளக்கம் தர மறுத்ததுடன் நகர்மன்றம் ஒப்புதல் அளிக்க

வேண்டுமென வற்புறுத்துகிறார். இதனால் நகராட்சிக்குப் பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் நிலை. மேலிட பார்வையாளர் மூலம் இக்கோப்பினை ஆய்வு செய்து, நகர் மன்றத்திற்குச் சரியான வழிக்காட்டுதல் அளிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலக இணைவகம், சேப்பாக்கம், சென்னை -5க்கு 16.8.2005ல் கடிதம் எழுதி அதன் நகல்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு, அரசுச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தலைமைச் செயலகம் சென்னை-9 ஆகியோருக்கு அனுப்பியும், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

மனைப்பிரிவு அங்கீகாரம் பெற, அரசு சுட்டியுள்ள நிபந்தனைகளை மீறி நகராட்சி ஆணையர் செயல்பட்டதை 24.02.2006ல் இமெயில் மூலம் விஜிலென்ஸ் கமிஷ்னர், நிர்வாக சீர்திருத்தத் துறை தலைமைச் செயலகம் சென்னைக்கு முறையீடு செய்தார்.

24.7.2006ல் நடைபெற்ற மனைப்பிரிவு அங்கீகாரம் பற்றி... மனை, மனைப் பிரிவு உரிமையாளர்கள், கட்டடக்கலை நிபுணர்கள், நுகர்வோர் அமைப்பு, குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள், நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், நகராட்சி ஆணையர், பொறியாளர், உதவிப் பொறியாளர், நகர அமைப்பு ஆய்வர், நகர அளவியர் அழைத்துக் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி அதை ஆடியோ மற்றும் வீடியோவில் பதிவு செய்து மற்றவர்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கினார்.

அதன் பின்னர் இதைப்பற்றி தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் படி கேள்வி கேட்க, இது சம்மந்தமாக ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறை இயக்குநரகக் கடித எண் : 247.LB/2006 CL 23.11.2006ன் படி அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது என்று கடிதம் வந்தது.

இந்நிலையில் புதிதாகப் பதவியேற்ற நகர்மன்றம் பிரச்சனைக்குரிய மனைப்பிரிவுகளுக்கு முறையற்ற வகையில்

ஒப்புதல் அளித்துள்ளதாக 29.12.2006 தினமலர் (புதுச்சேரி பதிப்பு) நாளேட்டில் செய்தி வெளியானது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீ சாய்ராம் எஸ்டேட் என்னும் பெயரில் உள்ள மனைப் பிரிவுகளுக்கு CNC. முத்தையா செட்டியார், N. கோமேதகம் செட்டியார், N. குபேர செட்டியார் 6/47 ஜெயில் தெரு விருத்தாசலம் என்ற முகவரியில் உள்ளவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது என விருத்தாசலம் சிவா பிரிண்டர்சிஸ் அச்சடிக்கப்பட்ட பிரசுரம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசு நிபந்தனைகளுக்கு உட்படவில்லை என்று கடிதம் மூலம் தெரியப்படுத்தி மனைப்பிரிவு பற்றி உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி கடலூர் ஊழல் தடுப்புக் காவல் துணை கண்காணிப்பாளருக்கு 14.3.2007ல் கடிதம் எழுதியதுடன் சென்னை தலைமைச் செயலாளர் (பொதுத் துறை) க்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் படி விண்ணப்பித்தும் இது நாள் வரை எந்தப் பதிலும் இல்லை.

ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறை மற்றும் தமிழக அரசின் செயலற்ற தன்மையால் இந்நகராட்சிக்கு சுமார் ரூ. 30 லட்சத்துக்கு மேல் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது

எனவே தான் ஊழல் தடுப்புக் கண்காணிப்பு ஆணையம் நேர்மையான வல்லுநர்களை உறுப்பினர்களாக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.



திரு. என். முத்தையன் அவர்களின் மனைப்பிரிவுக்கு நகர் மன்றம் ஒப்புதல் அளிக்க, மேலிடப் பார்வையாளர் மூலம் ஆய்வு செய்திடவும் சரியான வழிகாட்டுதல் அளிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு நகர் மன்றத் தலைவர் எழுதிய கடித நகல்

# குடிநீர் மேல்நிலைத் தொட்டி

எந்த ஒரு திட்டம் போட்டாலும் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். இல்லை என்றால் எந்தத் திட்டத்தையும் முழுமையாகச் செயல்படுத்தினாலும் அத்திட்டம் நீண்ட காலப் பயன் தராது. எனவே திட்டம் போடும் போதே நீண்ட காலத் தேவையைக் கணக்கிட்டு செயல் படுத்த வேண்டும்

விருத்தாசலம் நகராட்சியின் மக்கள் தொகை 60 ஆயிரமாக இருப்பது அடுத்த 15 வருடங்களில் மக்கள் தொகை சுமார் 95,000 ஆக உயரும் என்பதைக் கணக்கிட்டுக் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செயல் பட்டார். இதற்கு முன்பு நகராட்சியில் தொலை நோக்குப் பார்வையில் செயல்படாத காரணத்தால் குடிநீர் பற்றாக்குறை. நீண்ட நெடுங்காலமாக உள்ள பிரச்சனை. அதுவும் கோடைக் காலங்களில் கேட்கவே வேண்டாம். எனவே தொலை நோக்குப் பார்வையில் இப்பிரச்சினையைப் போக்க முடி வெடுத்தார் நகர் மன்றத் தலைவர்.

நகரில் உள்ள பழைய ஐந்து மேல்நிலைத் தொட்டியின் பயன்பாடு 100 சதவீதத்திலிருந்து 150 சதவீதமாகத் தீர்மானிக்கப் பட்டது. அவைகளின் பயன்பாட்டைக் கூட்டும் விதத்தில் 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியில் மேலும் ஒரு மோட்டார் இணைத்து, அதிலிருந்து மேலும் ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர் கூடுதலாக மொத்தம் மூன்று லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கலாம் என்று எண்ணி, அதற்கானவற்றைச் செய்து முடித்தார். அதன்படி ஜங்ஷன் ரோடு, அண்ணா நகர், பெரியார் நகர் வடக்கு, பெரியார் நகர் தெற்கு மற்றோரிடம் என ஐந்து குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளை மேற்படி முறையில் செய்யத் தீர்மானமிட்டு, அதன்படி ஜங்ஷன் ரோடு, அண்ணா நகர், பெரியார் நகர் தெற்கு செய்து முடிக்கப் பட்டது. (மற்ற இரண்டும் செய்ய முடியாததற்கு நகராட்சி நிர்வாகம் ஒத்துழைக்காதது தான்) இதனால் ஒரு மேல் நிலைத் தொட்டி கட்டும் செலவும், பராமரிப்புச் செலவும் இல்லாததுடன் குறைவான செலவில் 50 சதவீதம் கூடுதலான பயன் கிடைத்தது.

காலையில் 2 மணி நேரமும் மாலையில் 2 மணி நேரமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதே வேளையில் இரண்டு மோட்டார்களையும் இயக்குவதால் 2 மணி நேரத்தில் கூடுதலாக 1 லட்சம் லிட்டர் (மணிக்கு 50 ஆயிரம் லிட்டர்)அதாவது 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியின் மூலம் 3 லட்சம் லிட்டர் குடிநீர் மக்களுக்கு விநியோகிக்க முடிந்தது. இதனால் 2016 ஆம் ஆண்டு வரை இந்நகருக்குக் குடிநீர் தட்டுப் பாடு வராது என்பது மிகப் பெரிய சாதனை.

இன்னும் நான்கு மேல்நிலைத் தொட்டிகள் கட்ட தமிழ்நாடு அரசு ரூ. 137/- லட்சம் ஒதுக்கியதற்காக 24.08.2003ல் நகர் மன்றம் மூலம் தீர்மானம் நிவைவேற்றப் பட்டது.

காட்டுக்கூடலூர் ரோடு, வயலூர், பூதாமூர், ஆலிச்சிக்குடி ரோடு என நான்கு இடங்களில் கட்டுவதற்கான இடங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் பார்வையிட்டு, மண் பரிசோதனை செய்து, தேர்வு செய்தனர்.

அதன்படி காட்டுக்கூடலூர் ரோடு, வயலூர், பூதாமூர் ஆகிய இடங்களில் கட்டுமான பணி துவங்கி முடியும் நிலையில், கடைசியாக ஆலிச்சிக்குடி ரோடு, கடை வீதி மற்றும் அப்பகுதியில் குடியிருக்கும் மக்களுக்குப் பெரிதும் பயன்படும் விதத்தில், 50 ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சி சொந்தமாக பயன்படுத்தி வந்த மாட்டுக்கொட்டகை இருந்த இடத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்ட ஜனவரி 2005ல் பூமி பூஜை போடப்பட்டது. அதன்பிறகு அஸ்திவாரம் தோண்டும் போது சிலர் திடீரென, அந்த இடம் கோயில் நிர்வாகத்திற்குச் சொந்தமானது பின்னால் பிரச்சனை வரும் என எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தனர்.

நகராட்சியில் தீர்மானம் போட்ட போதோ, மேல் நிலைத் தொட்டி கட்ட நிதி ஒதுக்கியபோதோ, குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் பார்வையிட்டுத் தேர்வு செய்த போதோ, பூமி பூஜை போட்ட போதோ இல்லாத எதிர்ப்பு இப்பொழுது வரக்காரணம் நகர் மன்றத் தலைவருக்கும், நகர்மன்றத்திற்கும் நல்ல பெயர் வந்து விடக்கூடாதே என்ற பரந்த மனப்பான்மையில் எதிர்க்க, இந்த இடத்தில் தான் கட்ட வேண்டும் மாற்று இடத்தில் கட்டக் கூடாது எனப் பல நகர் மன்ற உறுப்பினர்கள் உறுதியாகக் கூறியதால் பிரச்சனை பெரிதாகப் போய்விட்டது. இந்து அறநிலையத் துறை இணை ஆணையர் வந்து பார்வையிட்டு அவர் எங்கு கட்டச் சொல் கிறாரோ அங்கே கட்டலாம் என இரு தரப்பும் முடி வெடுத்து அதன்படி அஸ்திவாரம் தோண்டும் பணி தற்காலிகமாக நிறுத்தப் பட்டது.

கட்ட அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வரும் நகர் மன்றத் தலைவரையோ, வேறு இடத்தில் கட்டக் கூடாது அங்கு தான் கட்ட வேண்டும் எனக் குரல் கொடுத்தவர்களையோ, இடத்தைப் பார்வையிட்டு சோதனை செய்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துறையினரையோ அது ஏன்? அப்பகுதியில் வசிக்கும், குடியிருக்கும் மக்களையோ என யாரையும் எதுவும் கலந்து பேசாமல் ஆணையர் தானே ராஜா, தானே மந்திரி என்பது போல், வேறு இடத்தைத் தேர்வு செய்து விட்டோம் எனப்

பார்வையிடுவதாக இருந்த இணை ஆணையருக்கு உடனடியாகப் போன் செய்து நகர் மன்றச் செயலுக்கு எதிராகக் கூறினார்.

ஆகா! எப்பேர்ப்பட்ட ஆணையர் என்கிறீர்களா! ஆமாம் இப்படிப்பட்டவர்தான் இருக்க வேண்டும். மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளையும், நன்மைகளையும் பெற்று விடக் கூடாது என்பதில் விரைந்து செயல்பட்டு முடிப்பவர்களில் இவர் தான் முதல் நபர். அதனால் தான் உடனடியாகப் போன் மூலம் தகவல் தந்து ஒரு சிலருக்குத் தன் விசுவாசத்தையும் எந்த நகராட்சியில் பணி செய்து கொண்டு மாதாமாதம் ஊதியம் வாங்குகின்றரோ, அந்த நகர்மன்றத் தீர்மானத்தைப் பிரயாசப் பட்டு நிறைவேற்றவிடாமல் மிகப் பெரிய துரோகத்தைச் செய்தார்.

மக்களுக்குப் பயன்படும் விதத்தில் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது என்பது பெரிய விஷயம். அரசு நிதி ஒதுக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து செய்து, செயல்படுத்த முயல்வது என்பது பகீரத முயற்சி. படிப்படியாகப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வந்த முயற்சி, ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்பது போல் இத்திட்டத்துக்கு ஒரு போன் மட்டுமே.

ஆணையர் தனக்குத் தெரிந்ததைக் காட்டினால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களோடு மக்களாக வாழ்ந்து வரும் நகர் மன்றத் தலைவருக்குத் தெரியாதா என்ன! தனக்குத் தெரிந்ததைச் செயலில் காட்ட ஆரம்பித்தார். அதன்படி நின்று போன இத்திட்டத்தைக் குறித்து விசாரணை வேண்டும் எனக் கூறினார். விசாரணை விரைவாக முடிந்தது. அதன்படி எந்த இடத்தைப் பற்றி விசாரணை செய்ய வரும் இணை ஆணையருக்கு நகர்மன்றத் தீர்மானத்துக்கு எதிராக, எந்த நகராட்சியில் மாதாமாதம் சம்பளம் வாங்கும் ஆணையர், வேறு இடம் தேர்வு செய்துவிட்டோம் என அவசரமாகப் போனில் சொன்னாரோ அந்த இடம். கோயில் இடம் என எதிர்ப்பு தெரிவித்தனரோ... அதே இடத்தில், அதே திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் மேற் பார்வையில் *30.11.2005*க்குள் கட்டி முடிக்க வேண்டும் என்று

கேட்டுக்கொள்ள, அதன்படி குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப் பட்டதுடன் திறப்பு விழாவும் நடந்து மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

மக்களுக்கு நன்மை செய்ய போனால் கூட எவ்வளவு எதிர்ப்பு? அதுவும் நிர்வகித்து வரும் நகராட்சி ஆணையரால் இது எப்படி இருக்கிறது என்றால் தான் வசிக்கும் கூரை வீட்டுக்கு தானே தீ வைப்பது போல... எப்பேர்ப்பட்ட அறிவு ஜீவி! இப்படிப் பட்டவர்கள் எதிர்த்தும் என்ன நடந்தது? சற்று காலதாமதம் ஆனது. அவ்வளவு தான் நடக்காமல் போகவில்லை, போகவிடவும் இல்லை. இதற்குக் காரணம் செயலில் நேர்மையும், துணிவும் தான்.



**ஆலிச்சிக்குடி சாலை - மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது - நகர்மன்ற தீர்மானத்துக்கு எதிராகத் தவறான தகவல் கூறிய கமிஷ்னர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியது 27.7.2005 தினமலர் செய்தி நகல்**

## வழக்குத் தொடர அனுமதி மறுப்பு

நகர்மன்றத் தலைவரின் ஊழலற்ற நேர்மையான நடவடிக்கையால், ஊழல் செய்த அதிகாரிகளும் ஊழலுக்குத் துணையாய் இருந்தவர்களும் ஒன்று சேர்ந்து எழுதப்படாத சட்டமாக, நகர் மன்றத் தலைவரின் நற்செயலுக்கு எந்த விதத்திலும் ஒத்துழைக்க மறுத்தனர். மறுத்தனர் என்பதை விட அவரின் ஒவ்வொரு நற்செயலுக்கும் எதிர்ப்பாக நடக்க ஆரம்பித்தனர்.

நகர்மன்றத்திற்கு ஒருவரை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவதன் நோக்கம், அவர் நகர மக்களின் பிரதிநிதியாக இருப்பதுடன் மக்களின் அடிப்படை வசதிகளை ஆணையர் மறறும் அலுவலர்கள் மூலம் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையில் தான். பதவியில் இருந்து கொண்டு நேர்மையைக் கடைபிடித்து மக்களின் நலனுக்காகவும், மற்றும் நகரத்தின் மேம்பாட்டிற்காகவும் இவரின் நியாயமான கேள்விகளுக்குக் கூட ஆணையர் பதில் தருவது இல்லை. மற்ற சில அரசியல் வாதிகள் போல் இவரும் இருந்திருந்தால் கேட்காத

கேள்விகளுக்கும் வலிய சென்று பதில் தந்து இருப்பார். என்ன செய்வது! ஊழல் செய்யாமல் நேர்மையாக இருந்து கொண்டு யாரையும் இலஞ்சம் வாங்க விடாமல் அனைத்து வழிகளையும் அடைத்துவிட்டு கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

பதவியேற்றப் புதிதில் நகராட்சி முன்னேற்றத்திற்கு நல்லத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்றால், நகராட்சி கடனில் இருக்கிறது; நிதி இல்லை என்றவர்கள் நிதி நிலை உயர்ந்த பின்பு செய்ய மறுத்து விட்டனர். காரணம் இவரது நேர்மைதான் இவரது செயலுக்கு எதிராக இருந்தது.

நகர் மன்றத் தலைவர் கடிதம் மூலம்... புதிய குடிநீர் இணைப்புகளின் வைப்புத் தொகை செலுத்தியோர் பட்டியல்; 2001-2003 வரை அலுவலக ஆணையர் மற்றும் பதவியில் இருந்தோர் பயன்படுத்தியதால் செலுத்தப்பட்ட தொலைபேசிக் கட்டண ரசீதுகள்; 2001-2004 வரை அலுவலக மற்றும் ஆணையர் பதவியிலிருந்தவர்களின் வாகனங்களுக்குப் பயன்படுத்திய டீசல் பயன்பாடு செலவு ரசீதுகள் எல்லாம் நகர் மன்றப் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று கேட்டதுடன், நகர் மன்றத் தலைவரின் மூலமாகக் கடிதப் போக்குவரத்து செய்யாததற்கான காரணம். குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்களின் விவரம் அவற்றில் தீர்வு கண்டது, தீர்வு காணாமல் நிலுவையில் இருப்பதற்கான காரணம் என்னவென்று எழுத்து மூலம் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

அதேபோல் “வருவாய் ஈட்டக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமென்றும், வரி விதிக்கப்படாத அரசுக் கட்டடங்களுக்கு வரி விதித்தால் வருமானம் வரும் அப்படி ஏன் செய்யவில்லை எனவும், 32, 33 வார்டு உறுப்பினர்களின் அனுமதியற்ற குடிநீர் இணைப்பு மூலம் நிலுவைத் தொகையைச் செலுத்தாததால் அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன” என அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டார்.

கனரா வங்கி (எண். 552) யில் குடிநீருக்காக வைப்புத் தொகையாக ரூ. 15,30,403/- உள்ளது. இத்தொகையால் வரும்

வட்டியைவிட நகராட்சி இதற்காக வாங்கிய கடனுக்குக் கட்டும் வட்டி அதிகம். எனவே நடப்புக் கணக்கில் உள்ளத் தொகையைக் குடிநீர் திட்டத்துக்காக வாங்கப்பட்ட கடனுக்குத் திருப்பிச் செலுத்தினால் வட்டி குறைவதுடன் அசலும் படிப்படியாக அடைந்து வரும். இதனால் ஏற்படும் நஷ்டம் குறையும். எனவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென எழுத்து மூலம் கேட்டார்.

இப்படிக் கேள்வி கேட்டால் உடனே செயல்படுத்தி விடுவார்களா... இவர் கேட்டதாலேயே எதையும் செய்யாமல் பத்தை எட்டாக்கப் படாதபாடு பட்டுக் கொண்டு இருந்தனர் நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழல் செய்பவர்கள். நகர் மன்றம் நஷ்டத்தில் இயங்கினால்தான் பலருக்கும் நல்லது என நினைத்து அதன்படிச் செய்து கொண்டிருப்பர்கள். இவரின் கடிதங்களையோ, யோசனைகளையோ எப்படி கேட்பார்கள்...

இவர் எழுதிய அனைத்துக் கடிதங்களின் நகல்களையும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை என மூன்று அலுவல கங்களுக்கு அனுப்பியபடி இருந்தார்.

சென்ற கடிதங்கள் யாவும் ஒரு வழிப்பாதைகள்தான். எந்த நடவடிக்கையுமில்லை. குறைந்தபட்சம் பதில் கூட இல்லை என்பது தான் வேடிக்கை. மாதச் சம்பளம் பெற்றுக்கொண்டு தன் கடமையைச் செய்யாத அதிகாரிகள், நகராட்சிக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் அலுவலர்கள், இலஞ்சத்தையும் ஊழலையும் இரு கண்கள் போல் பாவித்து நகராட்சி வருவாய் இழப்பிற்குப் பெரிதும் காரணமாய் இருக்கும் இவர்கள் மீது வழக்குத் தொடர அரசின் அனுமதிக்கு முயற்சி செய்தார் நகர் மன்றத் தலைவர்.

ஒரு அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடர வேண்டுமானால் இது ஒன்றும் எளிதான காரியமல்ல. அரசின் அனுமதி பெற்றுதான் நீதிமன்றத்தில்

வழக்குத் தொடர முடியும். சம்மந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர அரசுச் செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் சேர்த்து அனுமதி வேண்டி 3.3.2005ல் கடிதம் எழுதினார். அதனைத் தொடர்ந்து பல கடிதங்கள்.

நகர் மன்ற நிர்வாகத்திற்குப் பல கடிதங்கள் எழுதிப் பதில் இல்லாததுடன் எந்த வழக்குத் தொடரவும் அனுமதி தராமல் மறுக்கப்பட்டது. உயர் அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களைக் காப்பாற்றும் நோக்கத்தில் செயல்பட்டனரே தவிர உண்மையை உலகுக்குக் கொண்டு வர யாரும் எண்ண வில்லை. செய்ய வில்லை. அதை மீறி செயல்படுத்தவோ, அல்லது தன்னிச்சையாக நேர்மையான முடிவை எடுக்கவோ, குறைந்த பட்சம் அவர்களைக் கேட்கவோ, அப்படிக் கேட்டால் பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டாயத்தில் இல்லை என்பதும் கண்கூடாகத் தெரிந்தது. தெரிந்து என்ன செய்வது! தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் பிரதிநிதிகள்தானே தவிர அவர்கள் அலுவலர்கள் அல்ல! எனவே அலுவலர்கள் செய்வதை வேடிக்கைப் பார்க்கத் தான் முடிந்தது! அப்படித்தான் உள்ளது உள்ளாட்சி நிர்வாகம்.



**அரசு அதிகாரிகள் மீது வழக்குத் தொடர நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் அவர்களுக்கு, நகர் மன்றத் தலைவர் எழுதிய பல கடிதங்களில் 13.08.2005 நாளிட்ட கடித நகல்**

## சுயாட்சி கோரி உண்ணாவிரம்

ஊழலற்ற இலஞ்சம் இல்லாத அதே சமயம் மக்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், சாலைகள், மின்சாரம் போன்றவைகளை ஏற்படுத்தி கொடுக்க உள்ளாட்சி அமைப்பு களுக்குச் சுயாட்சி அல்லது போதுமான அதிகாரங்கள் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மக்களுக்காகச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் பதவிக்கு வந்து நேர்மையாக செயல் பட்டு வருபவர்களுக்கு எழுச்சியைக் கொடுப்பதுடன், வழிகாட்டி யாகவும் அமையும். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு பதவிக்கு வந்த, வரும் மற்றவர் களுக்கும் இது மிகவும் பயனு டையதாக இருக்கும் எனக் கருதி உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சுயாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் எனத் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்க, விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகம் முன் 18.7.2006ல் தனி நபர் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று சம்மந்தப்பட்டவர்களுக்கு முறைப் படித் தெரிவித்தார்.

ஒரு நகர் மன்றத் தலைவர் மக்களின் நலன் வேண்டி பொதுப் பிரச்சனைக்காகத் தனி நபர் உண்ணா விரதம் இருக்க போகிறாரே! என்ன செய்யலாம்? அவர் கேட்பது நியாயமானதா! நியாயமானது என்றால் அதை எப்படி நடைமுறைப் படுத்தலாம்; தனக்குள்ள அதிகாரம் மூலம் தீர்த்து வைக்க முடியுமா அல்லது தன் மேல் அதிகாரிகளின் வழிகாட்டு தலோடு முடிவெடுக்கலாமா... முடிவுக்குக் கொண்டு வர என்ன செய்யலாம், யாரை அணுகலாம் என்று சிந்தித்துக் கோட்டாட்சியரும் மற்றவர்களும் செயல்பட்டு இருந்தால் இது இந்தியாவா அல்லது வேறு நாடா என ஆச்சரியப் பட்டிருப்போம்!

இந்தியா எப்பொழுதும் யாருக்காகவும் எதற்காகவும் தன்னை மாற்றிக் கொள்ளாது. அதன் வழி தனி வழி என்று சொல்லிக் கொள்வது போல் இங்கு உள்ள அதிகாரிகள் யாருக் காகவும் எதற்காகவும் மாற்றிக் கொண்டால்... தன் தனித்தன்மை வெளிப்பட்டு அரசுக்கு எதிராப் போய்விட்டால்; தன் எதிர்காலம் என்ன ஆவது என்ற பெருந்தன்மையுடன் நகர் மன்றத் தலைவர் அனுப்பிய உண்ணா விரத அறிவிப்பைப் பற்றி கொஞ்சமும் கவலைப் படாமல் இருக்க...

குறிப்பிட்ட நாளில் உண்ணாவிரதத்தை மேற் கொண்டார் வள்ளுவன். தனி நபரான அவரின் கோரிக்கைகள் மற்ற எல்லோருக்கும் பயன்படும் விதத்தில் பொதுவானவைகள். நகர்மன்றம் நிறைவேற்றுகின்ற அனைத்துத் தீர்மானங்களிலும் நகராட்சி ஆணையர் உள்ளிட்ட அலுவலர்கள் பாகுபாடின்றி அமுல்படுத்தாததுடன் அரசியல் காரணங்களாலும், அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்காலும் நகராட்சிக்கு ரூ. 3 கோடி இழப்பு. நகர் மன்றத் தீர்மானங்களை அமுல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி விசாரணை வேண்டும் என முன்பே உண்ணாவிரதம் இருந்தும் எந்தப் பலனும் இல்லை.

இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்த உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவற்றுக் கெல்லாம் அடிப்படைக் காரணம் உள்ளாட்சி அமைப்பு களுக்குப் போதிய அதிகாரம் வழங்கப் படாததுதான்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் மீது எந்த ஒரு சின்னக் காரணத்திற்காகவும் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். அதே போல் நகர் மன்ற உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால்... தவறு செய்யும் அதிகாரிகள் மீதும், கடமையை வேண்டும் என்றே செய்யத் தவறும் அலுவலர் மீதும், நகராட்சியில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்தாததுடன், அதற்கு எதிரான முடிவை எடுத்துச் செயல்படுத்தும் ஆணையர் மற்றும் அலுவலர்கள் மீது யார் நடவடிக்கை எடுப்பது? இதை யார் கேட்பது! அதிகாரிகளை மட்டுமல்ல தவறு செய்யும் கடைநிலை ஊழியரைக்கூட கேள்வி கேட்கவோ, தவறு செய்து இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக்கு வந்த நகர் மன்றத் தலைவருக்குத் துளி கூட அதிகாரம் இல்லை. தவறு செய்யும் அலுவலர் மீது எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப் படவில்லை. எனவே மத்திய அரசு வழங்கியுள்ள அனைத்து அதிகாரங்களையும் அரசியல் அமைப்புச் சட்டப்படி வழங்கி ஜனநாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

உண்ணாவிரதம் என்பது வெறும் சடங்காகக் காலை 10.00 மணிக்கு வந்து மாலை 4.00 மணிக்கே போவது, இடையிடையே தெரிந்தம் தெரியாமலும் தண்ணீர் என்ற பெயரில் ஜூசும் குளுகோசும் குடிக்கும் நாளில்... அப்படியல்ல இவர் உண்ணாவிரதம். முறைப்படி துவக்கி முறைப்படி முடித்தார்.

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் (அன்றைய தேதியில்) சுமார் 1,40,000 பிரதிநிதிகள். இவர்களுள்

உள்ளாட்சி அமைப்புகளுக்கு, சுயாட்சி அதிகாரம் தேவை எனப் புகார் கடிதங்கள், உயர்நீதி மன்ற வழக்கு, உண்ணாவிரம் எனத் தனி மனிதரான விருத்தாசலம் வள்ளுவன் ஒருவர்தான், தமிழக அரசின் கவனத்தை ஈர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பராட்டடத்தக்கது.




**உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சுயாட்சி அதிகாரம் வழங்கக் கோரி நகர்மன்றத் தலைவர் டாக்டர் மு. வள்ளுவன் உண்ணாவிரதம்**

## எழுதுபொருள் ஊழல் - முறியடிப்பு

விருத்தாசலம் நகர மன்றத்தில் ஒரு தீர்மானம் 31.01.2005ல் நிறைவேற்றி நகர மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது சம்மந்தமாக 14.08.2006ல் ஒரு விசாரணைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் நகர் மன்ற நிதிக் குழு உறுப்பினர்கள், ஊழல் எதிர்ப்பு இயக்கத்தினர், குடியிருப்போர் சங்க நிர்வாகிகள், நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புப் பேரவைச் செயலாளர் என நகர மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

எழுது பொருள் மற்றும் இதர பதிவேடுகள் உள்ளிட்ட 33 இனங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 2,50,000/- (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்)த்துக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது. அதில் தாம்பரம் மகளிர் கூட்டுறவு சங்கத்தில் இருந்து பொருட்கள் பெறப் பட்டதற்கான தொகைக்காக, அச்சங்கத்திற்குப் பட்டு வாடா செய்ய நகர் மன்றத்தின் ஒப்புதல் கேட்டுப் பதிவுகள் இருந்தன.

இதில் என்ன விசாரணை வேண்டியுள்ளது. பட்டு வாடா

செய்ததை ஒப்புதல் அளிக்க வேண்டியது தானே என மேலோட்டமாகப் பார்த்தால் இதில் எந்தத் தவறும் நடக்கவில்லை எனலாம். ஆனால் இது சம்மந்தப் பட்டவைகளைக் கவனமாகப் பார்த்தால் தெரியும்! அதில் நடந்துள்ள ஊழல்கள். எங்கேனும் ஒரு தவறு என்று இருந்தால் கவனக்குறைவு என்று சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இங்கு நடந்துள்ளதோ...

தாம்பரம் மகளிர் கூட்டுறவு சங்கத்தால் வழங்கப்பட்ட ரசீதுகளில் அடித்தல், திருத்தல்கள். அத்துடன் 33 இனங்களுக்குப் பதிலாக 37 இனங்கள் எனத் திருத்தப்பட்டதுடன், நகர் மன்றத்தால் தீர்மானமிட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டத் தொகையோ ரூ. 2,50,000/- ஆனால் ரசீதுகளில் ரூ. 18,570/-ஐ சேர்த்து ரூ. 2,68,570/- என நகர்மன்ற ஒப்புதலுக்குக் கோரப் பட்டிருந்தது.

எவ்வித முகாந்திரமும் இன்றி ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாகக் கேட்டதால் சந்தேகம் வந்து, அத் தொகைக்கான செலவினங்களையும், அந்தத் தொகைக்காக வாங்கப் பட்ட பொருள்களின் இருப்புப் பட்டியலையும் கேட்டு ஆணையருக்குக் கடிதம் எழுதினார். எந்த வித பதிலும் வராமல் போகவே, நகர் மன்ற விசாரணைக் கூட்டத்திற்கு வந்து விளக்கம் தரும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. உடனடியாக வந்து விளக்கிக் கூறிவிட்டார்கள் என்கிறீர்களா! அதுதான் இல்லை. எங்களை விசாரிக்க இவர்கள் யார்? மக்கள் பிரதிநிதிகள் என்றால் எதை வேண்டுமானாலும் கேட்பார்களா? பதில் சொல்ல வேண்டுமா? எனப் பல விமர்சனங்கள் செய்யப்பட்டதே தவிர, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணைக் கூட்டத்திற்கே வரவில்லை. வராததில் இருந்தே தெரிந்தது இது ஒரு வகையான கையாடல் முயற்சி என்பது.

ஒரு பொருள் வாங்கும் போது குறைந்தது மூன்று நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப் புள்ளி கோரியிருக்க வேண்டும். அந்த மூன்றில் எந்த நிறுவனம் குறைந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதோ, அந்த நிறுவனத்திற்கே ஒப்பந்தம்

செய்யப் பட்டு இருக்க வேண்டும். அது போல மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப் புள்ளி கோரப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளி இல்லாமல் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மட்டும் எப்படிக் கொடுக்கப்பட்டது?

தீர்மானத்தில் 33 இனங்கள் என்பது பில்லில் (ரசீதில்) 37 என எதன் அடிப்படையில் திருத்தப்பட்டது? குறிப்பிட்ட ரசீதில் அடித்தல் திருத்தல்களுடன் இரட்டைப் பதிவும், ஒரு பக்தத்தில் ஒரு தொகையைக் குறிப்பிட்டு விட்டு மறு பக்கத்தில் வேறு தொகை குறிப்பிட்டுள்ளது எப்படி? எந்தத் தொகை உண்மையானது?

இதையெல்லாம் விட முக்கியமான சந்தேகம் எழுது பொருட்கள் யாவும் தாம்பரத்தில் இருந்து 6.7.2005ல் ABT பார்சல் சர்வீஸ் மூலம் Booking செய்யப்பட்டு, அன்றே அதாவது 6.7.2005ஆம் தேதியே விருத்தாசலம் நகராட்சிக்கு வந்துள்ளது. இது எப்படி முடிந்தது. இப்படியும் நடக்குமா என்று சந்தேகப் பட்டால் நடந்திருக்கு என்னும் ஆதாரத்துடன் விருத்தாசலம் நகராட்சி இருக்கிறது. ஆணையர் செயலை அதிகாரிகளும் அவர் செயலுக்குத் துணை போகிறவர்களும் ஏற்றுக் கொண்டு இருக்கும்போது களங்கப் படுத்த வேண்டும் என்றே கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படும் நகர் மன்றத் தலைவர் மற்றும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சந்தேகம் கிளப்பி விசாரணை செய்கிறார்களே! என்ன நியாயம்!

மேலே கூறப்பட்ட நியாயமான சந்தேகங்களைப் பாற்றி நேரில் வந்து கூறுங்கன் என நகர்மன்ற விசாரணைக் கூட்டம் கேட்டது.

இவர்கள் என்ன கேட்பது! நாம் என்ன பதில் சொல்வது! நாம் அதிகாரிகள். இவர்கள் கேட்கும் அற்பமான கேள்வி களுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டு இருந்தால், நாளைக்கு ரோட்டில் போவோர் வருவோர்க்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணியோ என்னவோ வரவில்லை. வராததுடன் தபால் மூலமாவாது பதிலைத் தெரியப்படுத்தி

யிருக்கலாம். அதுவும் செய்யவில்லை சர்வ வல்லமை படைத்த அதிகாரிகள்.

எழுது பொருள் ஒப்பந்தப் புள்ளி திருத்தியது மற்றும் தொகை வித்தியாசம், பதிவு (Booking) செய்த அன்றே தாம்பரத்தில் இருந்து விருத்தாசலத்திற்குப் பொருட்கள் வந்தது. இப்படிப் பலவற்றையும் ஆராய்ந்து விசாரணைக் குழு ஒரு முடிவுக்கு வந்தது.

இப்பொழுது இந்தத் தீர்மானத்திற்கு ஒப்புதல் தர மறுத்து விட்டால், பின்னால் நடக்கப் போகும் நகர்மன்றக் கூட்டத்தில் எந்த வகையிலாவது சரிசெய்து, எதிர்ப்பு இல்லாமல் இத்தொகையை எடுத்துக் கொள்ள வாய்ப்புண்டு. மேற்படித் தொகையை எடுத்துக் கொண்டபின் எந்தச் சந்தேகத்தையும் எழுப்பி எதுவும் ஆகப்போவது இல்லை. எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் இந்த நகர்மன்றத்தில் நடக்கக் கூடாது. அதே சமயம் சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளி தப்பிக்க விடக் கூடாது என்ற எண்ணத்தில் கூட்டப்பட்ட விசாரணைக் குழுவிற்கு எந்த வகையிலும் அதிகாரிகள் ஒத்துழைக்காததால் நடந்து உள்ள முறைகேடு முயற்சி உண்மையானது எனத் தீர்மானித்தது.

நகர் மன்றத்தில் பணிபுரியும் பணியாளர்களால் ஆணைகளை நிறைவேற்றுவதில் உதாசினப்படுத்துவோர் மீதும், ஊழல் புரிவோர் மீதும், கீழ்ப்படிய மறுப்போர் மீதும் நடவடிக்கை எடுக்கப் போலீஸ் ஒத்துழைக்க வேண்டும் என்ற தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 355 (1) (பி) பிரிவின்படி வழக்குப் பதிவு செய்ய, புகார் செய்வது என ஒரு மனதாக முடிவெடுத்து அதன்படி 15.9.2006ல் விருத்தாசலம் காவல்துறை உதவி ஆய்வாளரிடம் புகார் செய்யப்பட்டது.

அடுத்த நாள் காவல்துறையில் இருந்து நகர் மன்றத்துக்கு வந்து புகார் சம்மந்தப்பட்ட விளக்கங்களைக் குறித்துச் சென்றனர். அதே சமயம் வழக்குப் பதிவு செய்யப்பட வில்லை காவல்துறை தன் கடமையைச் சட்டப்படி செய்யாமல், காவல் நிலையத்துக்கு வரும் பல புகார்களில் இரு பக்கமும் பணம்

வாங்கிக் கொண்டு சமாதானம் என்ற பெயரில் கட்டப் பஞ்சாயத்து செய்வது போல் அறிவுரை கூறியது. யாருக்குத் தெரியுமா? நகர் மன்றத் தலைவரான வள்ளுவனுக்கு. அதுவும் எப்படி என்கிறீர்களா...! கொடுத்த புகாரை விசாரித்து இறுதி முடிவெடுக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 எனக் குறித்து புகார் கொடுத்தும் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்குச் சிலபல வழிகளில் அனுசரணையாக நடந்து கொண்டது.

ஒருவன் இந்தந்த வழிகளினல் தவறு செய்துள்ளான். அவைகள் யாவும் சட்ட விதிகளின் படி குற்றம். அதை விசாரணை செய்து நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று ஆதாரபூர்வமாகப் புகார் கொடுத்தால், அதற்கான வழிமுறைகளைச் செய்யாமல் காவல் நிலையம் என்றாலே கட்டப்பஞ்சாயத்து தான் என்று பொது மக்களும் நீதி மன்றங்களும் சேர்ந்து முடிவு செய்ததை நாங்கள் மீறுவோமா! நாங்கள் பொதுமக்களுக்கும் நீதிமன்றத்திற்கும் என்றும் தலை வணங்குபவர்கள். எனவே அந்த நம்பிக்கையை மெய்ப்பிக்கும் விதத்தில் நாகரீகமாக செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்குப் புகார் கொடுங்கள் என்றது.

விசாரணைக்காகப் புகார் கொடுத்தால் அதையே புகாராக்கி, புகார் கொடுத்த வினோதம். இப்படிப் பட்டவை எல்லாம் காவல் துறையில் தான் அதிகம் நடக்கும் என்பர். அதற்கு இதுவும் ஒரு உதாரணம். அது சரி! இப்படிப்பட்ட யோசனை காவல்துறைக்கு எப்படி வந்தது என்கிறீர்களா! பணம் கொடுத்தால் அவர்கள் பாலுக்கும் காவலாகப் பூனைக்கும் தோழனாக இருப்பார்கள். இருப்பார்கள் என்ன! இருக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.

ஒவ்வொரு ஆண்டும் தணிக்கைக்குரிய ஆவணங்களைச் சட்டப்படி உட்படுத்த வேண்டும். தணிக்கைக்கு உட்படுத்த வில்லை என்று தணிக்கையறிக் கைகள் வந்த வண்ணம் இருந்தன. இப்படிப்பட்ட நிலையில் தான் புகார். இதற்கும் சேர்த்து தான் ஆலோசனை என்ற பேரில் அறிவுரை செய்யச் சொன்னது காவல்துறை.

எந்த அடிப்படையில் இந்த அறிவுரை வழங்கினீர்கள் என்றும், சட்டத்தைச் சுட்டிக்காட்டியும் வழக்குப் பதிவு செய்யப் படவில்லையே ஏன் என சர்வ வல்லமை படைத்த காவல் துறையிடம் சட்டம் பேசலாமா! அப்படிப் பேசினாலும் வழக்குப் பதிய வேண்டும் என்று கட்டாயமா? அப்படியே கட்டாய நிலை ஏற்பட்டாலும் இது சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டு இருக்கிறோம். விசாரித்து உண்மை இருக்குமானால் வழக்குப் பதிவு செய்கிறோம் என்று கூறிக்கொள்ளலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை காவல் துறைக்கு.

விருத்தாசலம் காவல் துறையினரை வழக்குப் பதிவு செய்ய, உத்தரவிட வேண்டி கடலூர் காவல் துறைக் கண்காணிப்பாளரிடம் புகர் செய்தார் வள்ளுவன். கடலூர் காவல் துறைக் கண்காணிப்பாளர் பதிவு செய்து விடுமாறு உடனே உத்தரவுப் பிறப்பித்தாரா... அப்படி நடந்தது என்றால் இச்செயல் நேர்மைக்குக் கிடைத்த பரிசு என்றாகிவிடுமோ என்று எண்ணியோ என்னவோ கிடப்பில் போட்டார். காவல்துறையில் எப்படிப்பட்ட தவறுகள் நடந்தாலும் செய்தாலும் தவறே இல்லையென சாதனை படைப்பார்கள். இவர்கள் சொன்னதை வேதவாக்காக எடுத்துக் கொண்டு அதையே கடைப்பிடிப்பர் காவல்துறை மேல் அதிகாரிகள். இது தான் நாளும் நடக்கும் நடைமுறை. இதானாலேயே பல நியாயங்கள் அநியாயங் -களாகவும், பல உண்மைகள் பொய்யானவை களாகவும் சித்தரிக்கப்பட்டடு (ஜோடிக்கப்பட்டு) நடத்திக் கொண்டு இருப்பது, நடப்பது நாடு அறிந்த உண்மை. இந்நிலையில் இருக்கும் காவல்துறை, காட்டிக் கொடுத்து விடுமா என்ன... இது என்ன இராணுவமா சொன்னதைச் செய்ய வேண்டும் என்று! எப்படி வேண்டுமானாலும் குறிப்பாக ஆளும் அரசியல் வாதிகளுக்குச் சலாம் போடவும், அவர்கள் முகக் குறிப்பை உணர்ந்து அதற்கு ஏற்றார் போல் செயல்பட்டுக் கொண்டு இருப்பதும், மேல் மட்ட காவல்துறையின் கண் அசைவுக்குத் தக்கபடி சேவை என்ற பெயரில், அவர்களின் தேவைகளைக் கவனிக்கவே நேரம் இல்லாத போது இதெல்லாம் ஒரு பிரச்சனையா! யார் எக்கேடுக் கெட்டு போனால் என்ன?

புகார் கொடுத்தவர் புகார் மனுவை எப்படியாவது பதிவு செய்ய வைக்க அடுத்த கட்ட நடவடிக்கையாக முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்பினார்.

மாநில அளவில் தினமும் ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்த வண்ணம் உள்ளது. வாங்கி வைக்கவோ நேரம் சரியாக இருக்கிறது. (கவனிக்கவும்... படிப்பதற்கல்ல) படித்தால் தானே தெரியும். வாங்கி வைக்கவே நேரம் இல்லாத போது படிக்க நேரம்! அப்படியே படித்தாலும் எந்தத் துறை சம்மந்தப் பட்டது? என்ன பிரச்சனை, யார் மீது என்ன நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமல் வழக்கம் போல் இருக்க... காலமும் நேரமும் நிற்காமல் தன் வேலையை எப்பொழுதும் செய்து கொண்டே இருக்க நாட்கள் வளர்ந்து வளர்ந்து வளர்பிறையானது.

மக்களின் வரிப்பணம் ஒரு ரூபாய் கூட, ஊழல் செய்பவரிடம் செல்லக்கூடாது என்றெண்ணி தனியாகவும், நேர்மையாகவும் மிகுந்த துணிச்சலுடன் செயல்பட்டுக் கொண்டு இருந்த வள்ளுவன்,ள ஜனநாயகத்தின் நான்குத் தூண்களில் ஒன்றான நீதித் துறையை நாடினார். ஊழல் செய்ததற்கான ஆதாரம் இருக்கிறது. அதற்கான சட்டங்களைச் சொல்லி புகார் செய்தால், புகாரைப் பதிவு செய்யக் காவல்துறை மறுக்கிறது. இந்நிலையில் இந்த ஆதார கோப்புகளை நகராட்சியிடம் ஒப்படைத்தால் பிக்பாக்கெட் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து, பகல் கொள்ளைக்காரனிடம் ஒப்படைத்த கதையாகி விடும். பின்பு இருவருமே தொழில் அடிப்படையில், ஒன்றாக இணைந்து கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைமையேற்று செயல்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. எனவே இப்படிப் பட்டவர்களின் நிலையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன் தகுந்த தண்டனையும் பெற்றுத் தர வேண்டும் என்ற முனைப்புடன் உயர்நீதி மன்றத்தில் புகாரைப் பதிவு செய்து விசாரணை மேற் கொள்ள உத்தரவிட வேண்டும் என வழக்குத் தொடுத்தார்.

உயர்நீதி மன்றத்தில் இந்த ஒரு வழக்குதானா! உடனே நடவடிக்கை எடுக்க! வழக்கின் தன்மைக்கு முன்னுரிமை கொடுத்தும், வரிசைப்படியும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என்பது நீதிமன்றத்தின் செயல்பாட்டு முறை. இது அனைவரும் அறிந்த ஒன்று.



**தாம்பரம் மகளிர் கூட்டுறவு சங்கத்தில் இருந்து வந்த கடித நகல்**

## பதவிக்காலமும் - உள்ளாட்சித் தேர்தலும்

*24.10.2006* அன்று விருத்தாசலம் நகராட்சியில் ஊழல் செய்பவர்களுக்கும், இலஞ்சம் வாங்கிய, வாங்கும் சில நகர் மன்ற உறுப்பினர்களுக்கும் மிகவும் பொன்னான நாள்! அப்படி என்ன அந்த நாளில் என்கிறீர்களா!

அன்றுதான் "இலஞ்சம் கொடுக்கவும் மாட்டேன்! இலஞ்சம் வாங்கவும் விடமாட்டேன்! மக்களே எஜமானர்கள், மக்களுக்குச் சேவை செய்யவே பதவிக்கு வந்துள்ளேன்" என்று சொன்னதைக் குண்டூசி முனை கூட பிசகாமல் செயலில் செய்து காட்டியதுடன் தன் பதவிக்குத் தமிழ்நாட்டு அளவில் ஏன் இந்திய அளவில் என்று கூடச் சொல்லலாம் அந்த அளவுக்கு, அந்தப் பதவிக்குப் பெருமை சேர்த்த வள்ளுவன் பதவிக் காலம் முடிந்த தினம்.

அன்றைய தினத்தை ஊழல் செய்யும், செய்த விருத்தாசலம் நகராட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் பொன்னான நாளாகக் கொண்டாட மாட்டார்களா என்ன!

அப்படிப் பட்டவர்கள் மகிழ்ச்சியில், மயக்கத்தில் கொண்டாடினார்கள் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்த உள்ளாட்சித் தேர்தல். தமிழகமெங்கும் ஜனநாயக முறையில் சாத்வீகமாக அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழியில் அம்பேத்காரின் சட்ட திட்ட நெறிமுறைகளின் படி, இதுவரை இப்படிப்பட்ட முறையில் நடந்தது இல்லை எனத் தனி முத்திரைப் பதித்து நடந்த உள்ளாட்சித் தேர்தல். இந்தத் தேர்தலைப் பற்றி செய்தித்தாள்கள் மூலம் படித்தவர்களும், தொலைக்காட்சி ஊடகங்களில் நேரில் பார்த்தவர்களும், பங்கு கொண்டு அனுபவித்தவர்களும், கேட்டவர்களும் ஆகா! எப்பேர்ப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க உள்ளாட்சித் தேர்தல்...

தமிழ்நாட்டில் பல இடங்களில் கள்ள ஓட்டு போட்டது, வாக்காளர் தன் வாக்கை வாக்குசாவடிக்குச் சென்று போட கஷ்டப்படக்கூடாது என்பதற்காக, அடியாட்கள் மூலம் போடச் செய்தது, ஒரே சமயத்தில் ஒரே சின்னத்தில் குத்தி ஒன்றாக மடித்து பெட்டிக்குள் போட முயன்றது. தடுத்த பலரின் கை கால்களை ஒடித்தது. மண்டை உடைந்து இரத்தம் சொட்டச் சொட்ட ஓடியவர்களை விரட்டி விரட்டி அடித்தது; அடி, உதைப் பட்ட சிலர் பாதுகாப்பு வேண்டி காவல்துறையை நாட, பாவம் காவல்துறை கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்த்தது, பாதிக்கப் பட்டவர்கள் பாதுகாப்பு வேண்டி, காவல் துறையை நாட சில அரசியல் கட்சிகளின் பாதுகாப்புக்காக மேலும் அடித்து இரத்தத்தை ஓடச் செய்தது. ஒரு அரசியல் கட்சி மாவட்ட பெண் பொறுப்பாளர் தங்களை ஆதரிக்காத வர்களைக் கழியால் சிலம்பாட்டம் ஆடியது... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்படி நடப்பதைப் போனில் சொல்ல முயன்ற போது, எனக்கு வயிற்றுப் போக்கு ஒன்றும் தெரியாது என மாநிலத் தேர்தல் ஆணையர் அடக்கமான அறிக்கை விட காலம் கடந்துவிட்டது. எந்தெந்தக் கட்சிக்கு எந்தெந்த ஊரில் பதவி என்று பேசி முடிவெடுத்தாலும், அதிகாரம், காவல்துறையின் துணை கொண்டு பதவிகளைப்

பறித்துத் துரோகம் செய்தது... ஏன் இப்படி? என்று பத்திரிக்கையாளர் கேட்க "ஜனநாயக நாட்டில் இங்கொன்றும் அங்கொன்றும் இப்படி நடக்கத்தான் செய்யும்" என ஆளும் தலைமை அக்கறையுடன் ஆக்கபூர்வமான அறிக்கை விட்டது.

இப்படிப்பட்ட சூழலில் விருத்தாசலம் நகராட்சி மக்களும் மற்றவர்களும் இருக்க வள்ளுவன் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவை மறந்தே போயினர். காலத்தின் கட்டாயமோ என்னவோ! உயர்நீதி மன்றம் தன் கடமையைச் செவ்வனே செய்தது.

வள்ளுவன் நகர் மன்றத் தலைவராக இருந்த காலத்தில் தாக்கல் செய்த மனு மீது 15.2.2007ல் வழக்கு பதிவு செய்து, ஆவணங்களைக் கைப்பற்றி உரிய விசாரணை செய்து ஆறு மாதத்திற்குள் குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று, புகார் கொடுத்தும் வழக்குப் பதிவு செய்யப்படாமல் இருந்த காவல்துறைக்கு உத்தரவிட்டது. இப்படி ஒரு புகார் மனு இருப்பதை ஏறக்குறைய எல்லோரும் மறந்திருந்த நிலையில், உயர் நீதி மன்றம் இப்படிப்பட்ட உத்தரவைத் திடீரெனப் பிறப்பிக்கும் என்று யாரும் கனவில் கூட நினைக்கவில்லை.

இந்த உத்தரவு 5.3.2007ல் அதிகாரபூர்வமாகக் காவல் துறைக்கு வந்தது. எந்தக் காவல்துறை எதுவும் செய்யாமல் கையைக் கட்டி கொண்டு மௌனமாக காட்சியளித்ததோ அந்தக் காவல்துறை, உயர் நீதி மன்ற உத்தரவை அலட்சியப் படுத்த முடியாமல் செயல்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் செயல்படுத்த முயன்றது. இல்லையென்றால் நீதிமன்ற அவமதிப்புக்குக் காவல்துறை ஆளாகி அவமானப் பட நேரிடுமோ என அஞ்சியோ என்னவோ, உடனடியாகச் சம்மந்தப் பட்ட முன்னாள் நகராட்சி ஆணையர், பொறியாளர் என ஐவர் மீதும் சட்டப்பிரிவு 467, 468, 491, 409 IPC என நான்கு பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டு உரிய ஆவணங்கள் பெற்று வேறு வழியில்லாமல் விசாரணையைத் தொடங்கியது காவல்துறை.

இவ்வளவுக்கும் காரணம் வள்ளுவன். எங்குதான் ஊழல் இல்லை! இவர்தான் கண்டுபிடித்து நாட்டைத் திருத்தப் போகிறாரோ! இவரை மடக்க ஒரே வழி... இவர் மீது ஏதாவது கேஸ் போட்டுப் பிரச்சனையைத் திசைத் திருப்பிவிடலாம் என்று எண்ணி எரிச்சலடைந்த நகராட்சி, செயலில் காட்ட ஆரம்பிக்க, 'கண்ணியம் மிக்கது' என்று தனக்குத்தானே சான்று கொடுத்துத் தம்பட்டம் அடித்தும் கொள்ளும் காவல்துறை துணைக்குப் போனது.

நகராட்சி நிர்வாகம் காவல்துறையிடம் வள்ளுவன் மீது ஒரு புகார் கொடுக்க, உண்மையா, பொய்யா அதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்று விசாரிக்காமல் உடனே பதிவு செய்தது. ஆகா! என்ன பொறுப்புணர்ச்சி!

பதவிக்காலம் முடிந்த பின்பும் எழுதுப் பொருட்கள் தொடர்பான ஆவணங்களை விருத்தாசலம் காவல் ஆய்வாளரிடம் உயர்நீதி மன்ற உத்தரவுப்படி வள்ளுவன் ஒப்படைத்த பின்னர்... ஆவணங்களை வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தி அந்த ஆவணங்களை, திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று நகராட்சி கொடுத்த புகார் மீது பதிவு செய்தது காவல்துறை.

எப்படிப்பட்ட அறிவு பூர்வமான சிந்தனை! ஊழல் செய்தவர்களை எந்த ஆவணங்கள் மூலம் அடையாளம் கண்டு பிடிக்கப் பட்டதோ அந்த ஆவணங்களை ஒப்படைக்க வேண்டுமாம். அதுவும் எங்கு தெரியுமா? எந்த நகராட்சியில் ஊழல் நடந்துள்ளது எனப் புகார் கொடுத்தும் வழக்குப் பதியாத காவல்துறை, மேலே புகார் கொடுத்தும் கண்டு கொள்ளாத மாவட்ட காவல் துறை, உயர் நீதிமன்றம் சென்றதால் வழக்குப் பதிவு செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற ஆவணத்தை அப்பேர்ப்பட்ட நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமாம். எப்படி இருக்கிறது ஜனநாயகம் பார்த்தீர்களா!

தன் பங்குக்கு ஏதாவது ஊழல் செய்பவர்களிடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்ள வேண்டாமா என்று எண்ணிய

காவல்துறை உடனே துரிதமாகச் சுறுசுறுப்புடன் செயல்பட்டு, நகராட்சி கொடுத்த பொய்யான புகாரைப் பதிவு செய்து கொண்டது. ஒரு நியாயமான வழக்கைச் சட்டவிதிகளின்படி பதிவு செய்ய கொடுத்த புகார் மனு மீது, பதிவு செய்ய மறுத்த காவல்துறை, ஒரு பொய்யான வழக்கைப் பதிவு செய்ய கொஞ்சமும் தயங்கவில்லை.

இதனைத் தெரிந்த வள்ளுவன் மற்ற சிலர்போல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, காவல் துறையினரிடம் தூது விட்டு சிபாரிசு செய்யச் சொல்லாமல், காவல்துறை தன் மீது வழக்குப் பதிவு செய்ததற்கான ஆவணங்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் படி கேட்டுப் பெற்றார்.



**நகர் மன்றத் தீர்மானங்களை அமுல்படுத்தக்கோரி வழக்கு - தீர்ப்பு = கடித நகல்கள்**

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

இந்தியாவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ல் அமுல் படுத்தப் பட்டது. அதன்படி நாட்டின் பாதுகாப்பு, நீதிமன்ற நடவடிக்கை போன்றவற்றைத் தவிர நாட்டிலுள்ள அனைத்துப் பொது அலுவலக நடைமுறைகள், மத்திய மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல் படுத்திய விவரம், தனியார் நிறுவனங்கள் அதன் செயல்கள் எனப் பலவற்றைப் பற்றியும், இந்திய குடிமக்கள் யார் வேண்டுமானாலும் யாரைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ள உதவக் கூடிய அற்புதமான சட்டம். இதன் மூலம் பல திறை மறைவு ஊழலையும், இலஞ்சங்களையும் மிகச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. இச் சட்டத்தைப் பொது மக்கள் அனைவரும் பயன் படுத்தித் தகவல் பெற்றால் நாட்டில் ஊழலும், இலஞ்சமும் குறைய வாய்ப்புண்டு. குறையும் என்ன! முற்றிலும் ஒழிந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. பயன்படுத்த வேண்டும்.

பொது அமைப்பின் பணி களில் உள்ள உண்மை விவரங்

களையும் மற்றும் அப்பணிக் குறித்த செயல் பாடுகளையும் இதன் மூலம் பொதுத் தகவல் அலுவலரிடமும் கோரும் தகவல்களை, சம்மந்தப் பட்ட அலுவலர் 30 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். உதவி பொதுத் தகவல் அலுவலரிடம் கேட்கப் படும் தகவல்களை அளிக்க கூடுதலாக 5 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்.

நாம் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான தகவல்கள் கிடைக்கப் பெறாத போது, மேல் முறையீடு செய்தும், நமக்குச் சரியான தகவல் கிடைக்கவில்லை எனில் தமிழ்நாடு முதன்மை தகவல் ஆணையர் பார்வைக்குக் கொண்டு செல்லலாம்.

விண்ணப்பித்தவருக்கும் சம்மந்தப்பட்ட அலுவலர் களுக்கும் சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப் படும். விசாரணையில் அலுவலர்கள் அனுப்பிய தகவல்கள் முழுமையானதாக இல்லையெனில் தகவல்களை அனுப்பி வைக்க ஆணையம் உத்தரவிடும். தண்டனையளிக்கும், அபராதம் விதிக்கும். தாமதப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ. 250/- அபராதமாக வசூலிக்கப்படும். இத்தொகை அரசுக்குப் போய்ச்சேரும்.

இச்சட்டத்தின்படி விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வீட்டு வரி, குடி நீர் வரி, திடக்கழிவு மேலாண்மை, மின் ஆளுமை, தணிக்கையறிக்கை உள்ளிட்டவை கேட்கப்பட்டது.

## திடக்கழிவு மேலாண்மை

நகராட்சி நிர்வாகத்தில், நகரத் தூய்மை என்பது மிக முக்கியமான ஒன்று. எனவே நகரத்தைத் தூய்மையாக வைத்து இருப்பதற்குப் படிப்படியான வழிகளைக் கையாள ஆரம்பித்தார். பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் எந்த நகரத்தையும் தூய்மையாக வைத்திருக்க முடியும். அதற்குப் பதவியில் இருப்பவர்கள் முன் மாதிரியாக நடக்க வேண்டும் என்று கருதிச் செயல்பட ஆரம்பித்தார். எப்படி என்கிறீர்களா...! ஆச்சரியப்படாதீர்கள். இக்காலத்தில் பதவியில் இருந்த,

இருக்கும், வார்டு, பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி என்று பெரும்பான்மையான உறுப்பினர்கள் கூட இப்படிச் செய்ய மாட்டார்கள். செய்திருக்க மாட்டார்கள். செய்யவும் துணிய மாட்டார்கள் என்பது திடமான நம்பிக்கை.

வள்ளுவன் செய்தார். பிரதான சாலைகளில் மண் சேருவதால், சாலைகளின் தூய்மை கெடுவதுடன் விபத்துகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றன. தெருக்களாக இருந்தால், தெருவில் வசிப்போரும், கடைவீதியாக இருந்தால் கடை உரிமையாளர்களும் தங்கள் பகுதியைச் சுத்தமாக வைத்துக் கொள்வர். ஆனால் பாலம்...

பாலத்தை எல்லோரும் அதிக தடவைப் பயன் படுத்தினாலும், அதைச் சுத்தம் செய்ய யாரும் முன் வருவதில்லை. நகரத்தின் மையத்தில் இருக்கும் பாலத்தின் (பழைய பாலம்) இருபுறமும் டூ வீலர்கள், பேருந்துகள், லாரிகள், டிராக்டர்கள் எனப் பலதரப்பட்ட வாகனங்கள் செல்வதால் பாலத்தின் இரு ஓரங்களில் மற்றும் இரு முகப்புகளிலும் மண் குவியல்களாகச் சேர்வதால் விபத்துகள் அடிக்கடி நடந்தன என்பதை ஆதாரத்துடன் தெரிந்து கொண்டு பாலத்தில் மண் ஏற்படுவதைத் தடுக்க வழி செய்தார்.

அதன்படி ஒவ்வொரு செவ்வாய்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு இவர் தலைமையில் என்.சி.சி. மாணவர்கள், ஜுனியர் ரெட் கிராஸ் அமைப்பினர், தன்னார்வ ஆர்வலர்கள் சேர்ந்து பெருக்கி சுத்தம் செய்தனர். இவர் சுத்தம் செய்வது நகர மக்கள் அனைவரும் அறிந்த ஒன்று. இச்செயலுக்குப் பல வகை விமர்சனங்கள் வந்தும் தன் செயலை நிறுத்தவில்லை.

100 வருடம் பழைமை வாய்ந்த அந்த மணிமுத்தாறு பாலம் சில வருடங்களுக்கு முன் உள்வாங்கியதால் அது முழுமையாக இடிக்கப்பட்டு புதிய பாலம் கட்டி தற்போது போக்கு வரத்துக்குப் பயன்படுகிறது.

நகரத்தில் உள்ள 33 வார்டுகளுக்கும் டிரை சைக்கிள் வழங்கப்பட்டது. மேலும் தொடர்ந்து தூய்மையாக வைத்துக்

கொள்ளும் விதத்தில் சில வாகனங்கள், குப்பைக் கூடைகள் மற்றும் அதற்கு வேண்டிய சில உபகரணங்கள் வாங்க வேண்டும் என்று 26.6.2005ல் தீர்மானம் (எண் 1446) நிறைவேற்றப் பட்டது.

அதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதப்படி மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 148.98/- லட்சத்தில் Principle Clearance அளிக்கப் பட்டும், இத்திட்டத்தை அமுல்படுத்த வில்லை நகராட்சி நிர்வாகம். காரணம் நகரம் எப்பொழுதும் தூய்மையாக இருந்து விட்டால் அந்த நல்ல பெயர் கூட வள்ளுவனுக்குக் கிடைக்கக் கூடாது என்ற பெருந்தன்மையோ என்னவோ!

காலம் கடப்பதை தெரிந்து இத்திட்டத்தின் செயலாக்க நிலையைத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமா நகராட்சி பொதுத் தகவல் அலுவலரிடம் தகவல்கள் கேட்டார். தராமல் போகவே மேல்முறையீடு செய்தார். கேட்ட கேள்விகளுக்கு முழுமையான பதில் இல்லாததால் சென்னை தகவல் ஆணையத்திடம் முறையிட, நிர்வாக தரப்புக்குச் சம்மன் அனுப்பி விசாரணை மேற்கொண்டது. விசாரணையில் சரியாகத் தகல்கள் வழங்கப்படவில்லை என ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டியதால் 15 நாட்களுக்குள் சரியான தகவல் வழங்க ஆணையம் உத்தரவிட்டது.

இதனால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வாங்கப் படாத வாகனங்கள் மற்றும் உபகரணங்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தியதால், வாங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு இருப்பதற்கு மூலக் காரணம் வள்ளுவன். தன் பதவிக் காலத்தில் போடப்பட்ட தீர்மானத் துடன் அதைச் செயல்படுத்த வைக்க அவரது விடாத முயற்சியே காரணம் என்பது நகர மக்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே சொல்லலாம்.

## மின் ஆளுமை

நகராட்சியின் முக்கிய அம்சங்களான சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் போன்ற அனைத்துச்

செயல்களையும் கணினி மயமாக்கி ஒளிவு மறைவற்ற தூய்மையான நிர்வாகமாக இயங்குவதுடன் இலஞ்சம் வாங்கவும், கொடுக்கவும் வழியில்லாமல் போகும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் Online வசதி செயல்படுத்த 19.9.2003ல் தீர்மானம் (எண்: 1144) நிறைவேற்றி 2.10.2003 முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றி நாள், வாரம், மாதம், ஆண்டுகள் எனக் கடந்தும் நிறைவேற்றப் படவில்லை. இதனால் நகராட்சியின் செயல்பாடுகள் பற்றி Online மூலம் அறிய இயலாமல் போகவே, இச்சட்டம் மூலம் தகவல்களைக் கேட்டுப் பெற்றதில் உரிய தகவல்கள் கிடைக்காத காரணத்தினால் மேல் முறையீடு செய்தும் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. எனவே தகவல் ஆணையத்தை நாட, வள்ளுவனுக்கும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் சம்மன் அனுப்பப் பட்டது.

விசாரணையில் தனக்குச் சரியான தகவல்கள் அளிக்கப் படாததை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டியதும், குறிப்பிட்ட நாட்களுக்குள் சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்று தகவல் ஆணையம் உத்தரவிட்டது. விருத்தாசலம் நகராட்சியில் 19 இனங்கள் உள்ள செயல்பாடு முதலில் பத்துக்கு மட்டுமே Online வசதி செயல்படுத்தப் படுவதாகத் தகவல் கிடைக்கப் பெற்றார். மேல் முறையீடு, அதனைத் தொடர்ந்து தகவல் ஆணையம் விசாரணை மற்றும் உத்தரவுக்குப் பின் மீதமுள்ள 9 இனங்களுக்கு Online வசதி செயல்படுத்தப்படுவதாகத் தகவல் தெரிவிக்கப் பட்டது. இதனால் நகராட்சியைப் பொறுத்தவரை மிக முக்கியமான சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் உள்ளிட்ட அனைத்து இனங்களுக்கும் Online வசதி செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

நகராட்சி நிர்வாகத்தில் இலஞ்சம் யாரும் வாங்க முடியாமல் செய்ததுடன், கொடுக்கவும் வழியில்லாமல் நேர்மையான நிர்வாகம் நடக்க மிகப்பெரிய சாதனை நடந்தது. இச்சட்டத்தைப் பயன்படுத்தித் தொடர்ந்து செயல் பட்டதால்தான் இதனைச் சாதிக்க முடிந்தது.

# தணிக்கையறிக்கை

1999-2000 ஆண்டிற்கான நகராட்சியின் தணிக்கை யறிக்கை பெறப்பட்ட இரு மாதங்களுக்குள் நகர் மன்றத்திலன் ஒப்புதல் பெற்று அதற்கான பதில்கலை அனுப்பி வைக்கும் படி பத்தி 200ல் குறிப்பிடப் பட்டிருந்தது. பத்தி 201ல் 1945 எண்ணிக்கையுள்ள தணிக்கைத் தடை நிலுவையிலுள்ள ரூ. 6,95,03,439க் கானதை நிவர்த்தி செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

விருத்தாசலம் நகராட்சி தணிக் கைத் தடைப்பட்டியல் 1965ல் ரூ. 100ல் ஆரம்பித்து 1000, 10000, லட்சம் என வளர்ந்து ‘தினத்தந்தியில்’ வரும் கன்னித் தீவு படக்கதைப்போல் சுமார் 2000ஆம் ஆண்டில் 1945 எண்ணிக்கையுள்ள தணிக்கைத் தடை களில் மட்டும் ரூ. 6,95,03,439/- (சுமார் 7 கோடி). 1965ல் தணிக்கைத் தடை ரூ. 100/- ஆக இருந்த போதே அந்த ஆண்டில் பணிபுரிந்த அதிகாரிகள் மீது அபராதமோ, அல்லது சம்மந்தப் பட்டவர்கள் ஊதியத்தில் பிடித்தம்

செய்யவோ நடவடிக்கை மேற் கொண்டிருந்தால் இன்று சுமார் 7 கோடியை எட்டியிருக்குமா?

இத்தனை கோடி ரூபாய் தணிக்கைத் தடை ஏற்பட்டது ஒருவராலோ அல்லது ஒரே சமயத்திலோ ஏற்பட்டதில்லை. இது கடந்த 35 ஆண்டுகளில் பல நகராட்சி ஆணையர்கள், அரசு ஊழியர்கள், நகர் மன்றத் தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள் என அனைவரும் பங்கு கொண்டு செய்ததன் பலன் தான் ஏழு கோடி. இந்த நடுத்தரமான நகராட்சியில், ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளோ, மிகப் பெரிய கல்வி நிறுவனங்களோ, உயர்தரமான மருத்துவ மனைகளோ, நட்சத்திர விடுதிகளோ இல்லாத இந்த நகராட்சியில் மட்டும் தணிக்கைத் தடை ஏழு கோடி என்றால், நாம் மேலே குறிப்பிட்டபடி உள்ள நகராட்சிகளின் நிலை எப்படி இருக்கும்? மாநகராட்சிகளின் தணிக்கைத் தடை மில்லியன் கணக்கில் வருமோ என்னவோ யார் கண்டது? எல்லாம் தணிக்கை செய்யும் அதிகாரிகளுக்கே வெளிச்சம்... ஆட்சியைப் பிடிக்க என்ன செய்யலாம் என்ற உயர்ந்த சிந்தனையில் இருப்பவர்களுக்கு இது தான் வேலையா?

தணிக்கைக்கான பதில்களைக் கேட்டு ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதி, இல்லையில்லை பல கடிதம் எழுதினார் வள்ளுவன். நகராட்சி ஆணையர் பதில் கொடுப்பாரா என்ன! கொடுக்காமல் போகவே மாண்புமிகு முதலமைச்சருக்கும், கடலூர் உள்ளாட்சி நிதி கணக்குத் துறைக்கும் கடிதம் எழுதினார். பதில் வழக்கம்போல்...

தணிக்கை அறிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுக்காததுடன் வருவாய் இழப்பிற்குக் காரணமானவர்கள் மீதும் எந்தவொரு சின்ன நடவடிக்கையும் இல்லை.

விருத்தாசலம் நகராட்சியில் பல ஆண்டுகளாகத் தணிக்கை செய்யப் பட்டு ஒப்புதல் பெறப்படாமல் நிலுவையில் உள்ள 7 கோடி ரூபாய் குறித்துத் தணிக்கைத் துறையில் சொல்லி இருக்கின்ற தவறுகளைக் களைய வேண்டும் எனப் பண்ருட்டி

தொகுதி எம்.எல்.ஏ. தி. வேல்முருகன் இது சம்மந்தமான கேள்வியை 8.4.2005ல் தமிழக சட்டசபைக் கூட்டத்தில் கேட்டுப் பதிவு செய்தார்.

சட்டசபையில் பதிவு செய்தால் என்ன அல்லது பார்லிமெண்டில் பதிவு செய்தால் என்ன! ஆள்பர்களும், அரசு ஊழியர்களும் அக்கரையுடன் செயல்பட்டாலே முழுமையான தீர்வு காண முடியாது. இதற்குப் போய் தீர்வு கண்டு தாங்களே மாட்டிக் கொள்வார்களா என்ன! கிணற்றில் போடப்பட்ட கல்லில் இருந்தாவது, அதில் இருக்கும் நுண்துளைகளில் உள்ள காற்று குமிழ்களாக வெளியே வரும். ஆனால் இங்கு அதற்குக் கூட வழியில்லை. அந்த அளவுக்கு விபரம் தெரியாதவர்களா ஆள்பவர்களும் அரசு உயர் அதிகாரிகளும்.

வள்ளுவன் 1945 எண்ணிக்கையுள்ள தணிக்கைத் தடையின் மீது எடுத்த நடவடிக்கை, ஏதேனும் தொகை வசூலிக்கப்பட்டுப் பொதுநிதியில் சேர்க்கப் பட்டுள்ளதா, வருவாய் இழப்பிற்குப் பொறுப்பானர்வள் பெயர் மற்றும் முகவரி பட்டியல், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் என அடுக்கடுக்கான கேள்விகளைத் தகவல்களாகக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர்க்கு விண்ணப்பித்தார்.

நான்கு மாதங்களுக்கு மேலாகியும் எந்தவித தகவலும் அளிக்காத நிலையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 31.08.2005ல் மேல் முறையீடு செய்ததானால் பதில்கள் வந்தன. தாமதமாக வந்ததுடன் முழுமையாகப் பதிலாக இல்லாததால் இதைக் காரணம் காட்டி தகவல் ஆணையத்துக்குச் சென்றார். அதன் பேரில் மனுதாரரான வள்ளுவன், விருத்தாசலம் நகராட்சி ஆணையர், சென்னை நிர்வாக ஆணையர் என மூவருக்கும் சம்மன் அனுப்பப் பட்டது.

6.6.2007ல் சென்னையில் முதன்மைத் தகவல் ஆணையர், தகவல் ஆணையர், மக்கள் பொதுத் தகவல் அலுவலர் முன்னிலையில் நடந்த விசாரணையில், மனுதாரரான வள்ளுவன் தான் கேட்ட தகவல்களுக்கு முழுமையான

தகவல்கள் அளிக்காததுடன் உரிய காலத்துக்குள் பதில்கள் வராததையும் சுட்டிக் காட்டி, '35 வருடங்களாத் தணிக்கைத் தடை ஏற்பட்டதற்கு என்ன காரணம்?' எனக் கேட்க 'ஒருங்கிணைப்புக் கூட்டம் (Joint Meeting) போடவில்லை' என்று நகராட்சி அதிகாரிகள் கூறினர்.

'எப்பொழுது ஒருங்கிணைப்புக் கூட்டம் (Joint Meeting) போடுவீர்கள்?' ஆணையத்தின் சார்பில் கேட்க, 'விரைவில்' என்று ஏனோதானோ வென்று பதில் அளித்தனர்.

'ஒரு நகராட்சிக்கு மட்டும் தணிக்கைத்தடையாக 7 கோடி ரூபாய் என்றால் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் எத்தனை கோடி தணிக்கைத் தடைகள் இருக்கும்?' என்ற கேள்வியை வள்ளுவன் கேட்டதும் கேள்வியின் முக்கியத்து வத்தையும் ஆழத்தையும் உணரந்த தகவல் ஆணையம், 'இந்த விஷயம் வருந்தத்தக்கது' என்று சொன்னதுடன், 'தனிப்படை ஒன்றை அமைத்தாவது தணிக்கைத் தடைகள் சரி செய்யப்பட வேண்டும்' என்று தீர்ப்பு அளித்தது. தகவல்கள் தாமதமாக அனுப்பியதாலும் சரியான தகவல்களை அனுப்பாததாலும் வள்ளுவன் செலுத்திய தொகையை அவருக்குத் திரும்ப ஒப்படைத்து, அவர் கேட்ட சரியான தகவல்களை அவரது வீட்டுக்குச் சென்று கொடுத்து ஒப்புதல் கையொப்பம் பெற்று ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது தகவல் ஆணையம்.

இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால், ஒவ்வொரு நகராட்சிக்கும் தேவையான நிதி அந்தந்த நகராட்சியிலேயே உள்ளது. நகராட்சி நேர்மையாகச் செயல்பட்டால் அந்தந்த நகராட்சிகளும் தன்னிறைவு பெறும். நகராட்சி முன்னேற்றத்துக் காகவோ அல்லது புதிய திட்டங்கள் செல்படுத்தவோ உலக வங்கியில் கடன் வாங்க வேண்டிய அவசியம் கண்டிப்பாக வராது. பக்கத்தில் உள்ள கிராமங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கூட மேம்படுத்தலாம். நகராட்சி நிர்வாகம் நேர்மையாகச் செயல்பட்டால் தான் இந்த நிலை ஏற்படும். இந்த

உண்மையைத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாகவும் தன் விடாமுயற்சியாலும் கண்டறிந்தார் வள்ளுவன்.



ரூ. 6,95,03,439/- (சுமார் 7 கோடி) தணிக்கையறிக்கை நகல்

## TUFIDCO

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு மேம் பாட்டுக் கழகம் (Tamil Nadu Urban Finance and Infrastructure Development Co-op limited) என்பதன் சுருக்கம் தான் TUFIDCO . இது என்னவென்றோ, இதனால் பொது மக்கள் எப்படிப் பட்ட பயன்கள் அடைய வழி செய்ய முடியும் என்றோ பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை என்றே கூறலாம்.

சிறிய, நடுத்தர நகரங்களின் அனைத்துத் தேவை களுக்காகத் தொலைநோக்கு அடிப் படையில் குடிநீர், வடிகால் வசதி, பொது சுகாதாரம், நீர் நிலைகளைப் பாது காத்தல், திடக் கழிவு மேலாண்மை, புதிய சாலைகளை அமைத்தல், சாலைகளின் தரம் உயர்த்துதல், வாகன நிறுத்துமிடங்கள் அமைத்தல், வழி பாட்டுத் தலங்கள், சுற்றுலா மேம்பாடு போன்றவைகளை 90% மானியத்துடன் மேம்படுத்திக் கொள்ளலாம். அதே சமயம் தனது பங்காக நகராட்சி 10% தொகைதான் செலுத்த வேண்டும். இத் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் தன்னிறைவு பெற்ற நகராட்சியாக மாற்றி விட முடியும்.

இத்திட்டம் மூலம் நகர மக்கள் பயன் பெற வேண்டும் என்ற உயர்ந்த தொலைநோக்குப் பார்வையுடன், அடிப்படை வசதிகள் செய்ய 207 பணிகளுக்காக ரூ. 882.50/- லட்சம் மதிப்பீட்டில் தீர்மான எண் 1982ன் படி நகராட்சியில் தீர்மானமிட்டு, உள்ளாட்சித் துறை அமைச்சரைச் சந்திக்க அனுமதி கோரி நகராட்சி ஆணையரால் கடிதம் எழுத ஏற்பாடு செய்து இருந்தார்.

இத்திட்டத்தில் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால், திட்ட மொத்த மதிப்பில் 90% அரசு மான்யம், நகராட்சி நிதி 10% மட்டுமே ரு. 882.50/- லட்சத் திட்டத்துக்கு நகராட்சி நிதி ஒதுக்கப்போவது வெறும் ரூ. 88/- லட்சம் தான். இதனால் கிடைக்கப் போவது ரூ. 9 கோடி. அதுவும் மான்யம். திரும்பக் கட்டவே வேண்டாம்.

உள்ளாட்சித் துறை அமைச்சரைச் சந்திக்க எழுதியது தான் மிச்சம். பதில் வழக்கம் போல் மௌனம் காக்க, வள்ளுவனும் வழக்கம் போல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம், இந்த மனுவின் மீது எடுக்கப்ட்ட நடவடிக்கைகள் பற்றி விபரம் கேட்டு உள்ளாட்சித்துறை பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்ய, குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பதில் வராமல் போகவே மேல் முறையீடு செய்தார். இப்படிப் பட்டத் திட்டத்தைக் கொண்டு வந்து, அந்த நிதி மூலம் நகராட்சி மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து விடலாம் என்று தன் பதவிக் காலம் முடிந்த பின்பும் செயல்பட்டார்.

மேல்முறையீட்டைப் பார்த்த உள்ளாட்சி நிர்வாகம் திட்டத்தைச் செயல்படுத்த வழி செய்யாமல், பதில் தர வேண்டுமே என்ற நிர்பந்தத்தில் அதையும் இதையும் எழுதி திசை திருப்பும் நோக்கத்துடன், நகராட்சி ஆணையர் தகவல் கடித மனு முழுமையாக இல்லை, வழிகாட்டுதல் படி அமைய வில்லை என்றும், சாலை, வடிகால் மற்றும் பிற பணிகளைச் செய்ய நகர்ப்புற ஒருங்கிணைந்த மேம்பாட்டு நிதி ரூ. 882.50/- லட்சம் மதிப்பீட்டிலான TUFIDCO நிறுவனத்தைக் கலந்து ஆலோசித்து, விரிவான திட்ட அறிக்கையை அனுப்பும்படி

நகராட்சி ஆணையருக்குக் கடிதம் மூலம் அறுவுறுத்தப் பட்டதாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் ஆணையர் அதற்கான திட்ட அறிக்கையைத் தயாரித்து அனுப்பவில்லை.

மேலே குறிப்பிட்ட திட்ட அறிக்கையைத் தயாரித்து அனுப்பியிருந்தால் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு, அரசு மான்யம் 90% கிடைத்து, பின்னாளிலாவது நகராட்சி மக்கள் பலன் பெற்றிருப்பர். நகராட்சி மக்களுக்கு இதைக்கூட செய்ய முடியாத அதிகாரிகள், இத்திட்டம் மூலம் மக்கள் பயன் பெறக் கூடாது என்று நினைத்தார்களோ என்னவோ! பொதுமக்கள் அடிப்படை வசதிகள் பெற்று வாழ்வதால் அரசு அதிகாரி களுக்கு என்ன பயன்? தங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதாவது கிடைத்தால், இத்திட்ட அறிக்கையைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து அனுப்பிச் செயல்பட்டு இருப்பார்களோ என்னவோ!

பொதுவாகப் பல அதிகாரிகள் வாங்கும் மாத ஊதியத்தை விட, ஊழல் மூலம் வாங்கும் ஊதியம் அதிகம். மாத ஊதியம் மாத்தின் கடைசி நாள் மட்டுமே! அதுவும் கணக்கிட்டு. ஆனால் மற்ற வழிகளில் வரும் ஊதியம் என்று வரும்! எப்படி வரும்! எத்தனை தடவை வரும்! எவ்வளவு வரும்! என்று யாரும் உறுதியாகச் சொல்ல முடியாது. அதே போல் வாங்கு பவர்களைக் கணக்கிலிட்டாலும், கொடுப்ப வர்களையும் கொடுக்கும் தொகையை கணக்கிட முடியாது.

பொதுமக்களுக்கு வசதி கிடைத்தால் என்ன, கிடைக்கா விட்டால் என்ன! தங்களுக்குக் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்துடன் பணிகளைச் செய்பவர்கள் எப்படித் திட்டப் பணிகளை மேற்கொள்வர்! இப்படிப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் ஆதாரத்துடன் கொண்டு வந்து நிறுத்தினாலும் அவருக்கு மேல் உள்ள உயர் அதிகாரிகள், விசாரணை என்ற பெயரில் சட்டத்தின் ஓட்டை வழியே தப்பிக்க வைத்து விடுவர். அதையும் மீறினால் இருக்கவே இருக்கிறது இடமாற்றம்! அதைச் செய்து அவர் மேல் உள்ள குற்றச்சாட்டுகளை அப்படியே குழிதோண்டிப் புதைத்து, ஒரு செடியை நட்டு, நீர் ஊற்றாமல்

‘மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்’ என்று எழுதிய பலகையைச் செடியின் கழுத்தில் மாட்டி அதையும் வளரவிடாமல் சாகடித்து விடுவர். அடுத்த வருடம் அதே இடத்தில் புதிய செடியை நட்டு வழக்கம் போல்... இதே நிலைதான் ஊழல் அதிகாரிகளின் அன்றாட நடைமுறை. அணுவளவும் மாறாது.ள சில சமயம் இப்படிப் பட்டவருக்கும் அரசியலில் உள்ளவருக்கும் கூட்டணி அமைத்து ஒருவருக்கு ஒருவர் ஆதரவு தந்து ஆதாயம் தேடிக் கொள்வர்.



tufidco

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகக் கடித நகல்**

## நகராட்சி வருவாயும் பணியும்

நகராட்சிக்கு ஆண்டுக் குத்தகை, வார காய்கறிச் சந்தை, வார கால்நடைச் சந்தை, தினசரி காய்கறி அங்காடி, கட்டணக் கழிவறைகள், பேருந்து நிலைய வசூல் போன்ற வற்றின் மூலமும், நகராட்சிக் கடைகள் மற்றும் பெட்டிக் (பங்க்) கடைகளின் வாடகை, மர மகசூல் குத்தகை, மீன் வளர்ப்பு ஆகியவற்றாலும், முத்திரைத் தாள் கட்டணம், கேளிக்கை வரி, கனிம வரி, அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் தொழில்கள் மூலமாகத் தொழில் வரி, State Finance Commission மூலம் கால் ஆண்டுக்கு ரூ. 15 லட்சம் வீதம் ஆண்டுக்குச் சுமார் ரூ. 60 லட்சம் வருமானம், ஆண்டு உரிமக் கட்டணம் (Licence Fee), சொத்து வரி, குடிநீர் வரி, காலி மனை வரி (Vacant Site Tax), அங்கீகரிக்கப் பட்ட மனைப் பிரிவு கட்டணம் (Plan Approval Fees) அங்கீகரிக்கப் பட்ட மனைப் பிரிவு (Layout) கட்டணம், BSNL, Airtel, Aircel, Reliance போன்ற தொலைத் தொடர்பு நிறுவனங் களினால் நகராட்சி எல்லை க்குள் பதிக்கப்பட்டுள்ள Cell Tower பொருத்துக் கட்டணத்தாலும், இதர நிதிகளான

NSD தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டு நிதி, வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரண நிதி, சட்ட மன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி, மாவட்ட ஆட்சியர் நிதி, சிறப்புத் திட்டங்கள் மூலம் அவ்வப்போது ஒதுக்கப்படும் நிதி போன்றவை நகராட்சிக்குக் கிடைக்கிறது.

இவற்றைச் சரியான முறையில் வரி வசூல் செய்தும், மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கும் நிதியையும் வைத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றிவிடலாம். மக்களுக்கு நன்மை செய்யும் தீர்மானங்களை நிறைவேற்றுவது நகரசபை. அதை அமுல்படுத்தும் நகராட்சி அதிகாரிகள் பாரபட்சமின்றி நிறைவேற்ற வேண்டும்.

ஒரு நகராட்சியில் எல்லா குடியிருப்புகளுக்கும் தண்ணீர் வசதி, சுகாதாரம், மின் விளக்கு, கழிவு நீர்க் கால்வாய், சாலை வசதி என ஐந்து தீர்மானங்களையும் நிறைவேற்றி செயல் படுத்தினாலே போதும். 5 வருடத்தில் அனைத்துப் பணிகளும் முடிந்து தன்னிறைவு பெற்ற நகரமாக மாறி விடும். ஆனால் ஊழல் செய்யும் அதிகாரிகள் எப்படி செயல்படுவார்கள்?

அரசு ஊழியர்களாகப் பணியில் சேரும் இவர்களில் சிலர் பணியில் அமர்ந்தவுடன் வியாபாரிகளாகவும், பணி நடப்பது போல் பாவனை செய்து கொண்டு, மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பது பொது மக்களுக்கும் தெரியும். மக்களுக்கு இலஞ்சம் கொடுக்க மனமில்லை தான். இருந்தாலும் கொடுக்கிறார்கள். இலஞ்சத்தையும், ஊழலையும் எவ்வாறு எதிர்ப்பது, எங்குப் புகாராகக் கொண்டு செல்வது, எங்குச் சென்றால் நியாயம் கிடைக்கும் என்ற விவரங்கள் தெரிவதில்லை. காவல்துறை இருக்கிறதே என்று நினைக்கலாம். ஆனால் காவல்துறை சிறப்பாகவும் நேர்மையாகவும் செயல் படுகிறதா என்றால் அதுவும் சந்தேகம் தான். இந்த நகராட்சி மன்றச் செயலில் கையாடல், மோசடி, ஊழல் செய்ய முயற்சி செய்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய மறுத்ததும் காவல் துறைதான்.

ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறை இருக்கிறதே

என்று கேள்வி எழலாம். 25 லட்சம் மதிப்புள்ள கொசு மருந்து பயன்பாட்டில் ஊழலைக் கண்டுபிடித்து அனைத்து ஆவணங்களையும் ஒப்படைத்து 5 வருடங்களாக விசாரணை மந்தமாகத்தான் நடந்து வருகிறது. இந்த விசாரணை முடிவதற்குள் அதிகாரிகளின் பணிக்காலமே முடிந்து விடலாம். அது மட்டுமல்ல அந்த அதிகாரிகள் வேறு நகராட்சிக்கு மாறுதல் சென்று பணி செய்து அங்கும் அவர்களின் ஊழல் தொடரலாம்.

பொதுவாக மக்கள் இலஞ்சத்தையும் ஊழலையும் வெறுக்கிறார்கள். ஆனால் எங்கும் முறையிடுவதில்லை. காரணம் எங்கு நியாயம் கேட்டு சென்றாலும் தாமதம்! தாமதம்!! தாமதம்!!! எனவே மக்கள் இலஞ்சத்தையும் ஊழலையும் எதிர்ப்பது வீண் வேலையாகக் கருதுகிறார்கள். காரணம் கையும் களவுமாகப் பிடிப்பட்ட இலஞ்சப் பேர்வழிகள் தண்டிக்கப் படுவதில்லை. இறுதியில் ஊழலைச் செய்த பெரும்பான்மை யானவர்கள் காப்பாற்றப் படுகிறார்கள் என்பதே உண்மை. அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்பது போலத்தான் அரசு அவர்களுக்கு வழங்கும் தண்டனையும் உள்ளது.

அரசு அமைத்த அனைத்து அமைப்புகளும் சரிவர விரைந்து செயல்பட்டாலே போதும். ஊழல் ஒழிந்து விடும். ஒரு வேளை அங்கேயும் ஊழல் வைரஸ் பரவிட்டதோ!

## ஊழலை ஒழிக்க - வள்ளுவனின் யோசனைகளும் சாதனைகளும்

இப்போது உள்ள ஊழல் தடுப்பு அமைப்புகளின் செயல் பாடுகள் திருப்தியாக இல்லை என்ற நிலையில், ஊழலைத் தடுக்க டாக்டர் மு. வள்ளுவன் கூறுவது...

❖ உள்ளாட்சித் தேர்தல்களில் நேர்மையான மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் ஊழல் குறையும். உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்க, தேர்தல் ஆணையம் போன்று தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பு தேவை.

❖ ஊழல் தடுப்புக் கண்காணிப்பு ஆணையத்தில் பல துறையைச் சார்ந்த நேர்மையான வல்லுநர்களையும், நேர்மைக்காகக் குரல் கொடுக்கும் தன்னார்வ அமைப்புப் பிரதிநிதிகளையும் (NGO) உறுப்பினர்களாக்கித் திட்டச் செயல் பாடுகளைக் கண்காணித்தாலே ஊழல் பெருமளவு குறைக்கப் பட்டுவிடும்.

❖ ஒவ்வொரு புகாருக்கும் காலவரையறை நிர்ணயிப்துடன் *3* முதல் *6* மாதத்திற்குள் விசாரணை செய்து முடிக்கப்பட வேண்டும். தற்காலிகப் பணி நீக்கம் போன்ற கண் துடைப்பு நடவடிக்கை இச்சட்டத்தில் இடம் பெறாமல், இராணுவ நீதி மன்றம் போலத் தண்டனை கடுமையாக இருக்க வேண்டும்.

ஆனையத்தின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் நேர்மை யாளர்கள் சாதிக்க முடியும் என்று, தான் சாதித்ததைப் பட்டியலிடுகிறார் டாக்டர் மு. வள்ளுவன்.

## சாதனைகள்...

- ❋ பல குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்கி, ஒளிவு மறைவற்ற உள்ளாட்சி நிர்வாகம் பற்றி எடுத்துரைத்து, பொதுமக்களை விழிப்புணர்வு பெறச் செய்தது.
- ❋ மாதந்தோறும் நடைபெறும் நகர் மன்றக் கூட்டங்களில் குடியிருப்போர் நலச்சங்கப் பிரதிநிதிகளைப் பங்கேற்கச் செய்து ஒளிவுமறைவற்ற நகர்மன்ற விவாதங்களைக் கண்காணிக்கச் செய்தது.
- ❋ நகராட்சி நிதிநிலை வங்கிக் கணக்குகளை ஒவ்வொரு மாதமும் அறிக்கையாக வெளியிட்டு, நகர்மன்ற உறுப்பினர்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் வெளிப் படையான நிலையை உருவாக்கியது.
- ❋ ரூ. 115 லட்சம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை அமுல்படுத்தியது.
- ❋ மின் ஆளுமை E.Governance செயல்படுகிறது.
- ❋ ஒவ்வொரு குடியிருப்போர் நலச்சங்க செயலாளரையும் மக்கள் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களாக நியமித்து ரூ. 137 லட்ச குடிநீர்த் திட்டப் பணிகளைக் கண்காணிக்கச் செய்தது.
- ❋ குடியிருப்போல் நலச்சங்கப் பிரதிநிதிகள், சம்மந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர், நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை நிர்வாகிகள், அப்பகுதிப் பயனாளிகள் முன்னிலையில் சாலைகளின் தரத்தை சோதனை செய்து தரத்தை உறுதி செய்தது.
- ❋ கல்வி நிதி மேலாண்மையில் முறையாகச் செயல்பட பண்ணிரெண்டு நகராட்சிப் பள்ளிகளில், வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஒன்றைத் தவிர மற்ற பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டி முடித்தது.

- ❊ பிறப்பு, இறப்புச் சான்றிதழ், கட்டடி அனுமதி போன்றவை இலஞ்சம் இல்லாமல் குறிப்பிட்ட நாட்களுக்குள் கிடைக்கும்படி நிர்வாகத்தை நடத்தியது.

- ❊ சொத்து வரிவிதிப்பு முறையை எளிமையாக்கி, தங்கள் சொத்துக்களுக்குத் தாங்களே வரியைக் கணக்கிட மக்களுக்கு விழிப்புணர்வு செய்து முறைகேடு முயற்சிகளைத் தடுத்து நகராட்சிக்கு வருவாயை அதிகமாக்கியது.

- ❊ 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல் தேக்க தொட்டியில் கூடுதலாக 1 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்து 50% கூடுதல் செயல்திறன் அளித்தது.

- ❊ குடிநீர் இணைப்பில் நிலவிய இலஞ்சம் ஒழிக்கப்பட்டு அரசு நிர்ணயித்த தொகை மட்டுமே செலுத்தி மக்களுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கியது.

- ❊ நகரம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட மின் விளக்குகள் பொருத்தப் பட்டு 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய இருளை விலக்கியது.

- ❊ நகர்மன்ற கூட்டங்களை ஒளிப்பதிவு செய்து உள்ளூர் கேபிள் டி.வி. மூலம் ஒளிபரப்பி ஒளிவு மறைவில்லாத நிர்வாகம் நடத்தியது.

- ❊ நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், பெரியார் நகர்ப் பகுதிகளில் கணினி மையங்களை உருவாக்கி நிர்வாகத்தைக் கணினி மயமாக்கியது.

- ❊ நகர் மன்றக் கூட்ட அரங்கைப் புதிதாகக் கட்டி ஒலி பெருக்கி வசதியுடன் நவீன மயமாக்கியது.

- ❊ ரூ. 25 லட்சம் அளவிலான கொசுமருந்து, மின் உதிரிப் பாகங்கள், குடிநீர்த் தளவாட சாமான்கள் பயன்பாட்டில் ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு, ஊழல் தடுப்புக் கண் காணிப்புத் துறை மூலம் விசாரணையில் இருப்பது.

* ரூ. 2.5 லட்சம் மதிப்பிலான எழுது பொருள் முறைகேடு முயற்சி முறியடிக்கப்பட்டு வழக்கு தொடர்ந்தது.

* 1965ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 35 ஆண்டுக் கால தணிக்கைத் தடை ரூ. 6 கோடியே 95 லட்சம் சரி செய்வதற்குத் தகவல் ஆணையத்தை நாடியிருப்பது.

* மக்கள் தங்கள் தேவைகள் சம்மந்தமாக நகராட்சி ஊழியர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ள, மக்கள் வரிப்பணத்தின் மூலம் அதிகாரிகளுக்கும், பிற ஊழியர்களுக்கும் 14 செல்போன்கள் வழங்கப்பட்டது. நகராட்சி ஆணையர் 9345790443, நகர் மன்றத் தலைவர் 9345790445, நகர் மன்றத் துணைத் தலைவர் 9345790446, நகராட்சிப் பொறியாளர் 9345790455, நகராட்சி உதவிப் பொறியாளர் 9345790447, நகராட்சி மேலாளர் 9345790448, சுகாதார அலுவலர் (S.O) 9345790449, சுகாதார ஆய்வாளர் (S.I) 9345790450, கட்டட ஆய்வாளர் (B.I) 9345790451, வருவாய் ஆய்வாளர் (R.I) 9345790452, மின்சாரப் பணியாளர் (Ele) 9345790454, நகர் மன்ற எழுத்தர் 9345790453, பொருத்துநர் (Fitter) 9345790456, குழாய் பொருத்துநர் (Plumber) 9345790457. இந்தச் செல்போன் எண்களை நோட்டீஸ் அச்சடித்து பொது மக்களுக்கு வழங்கியது.

2001ல் பதவியேற்ற போது '**ரூ. 50 லட்சம் கடனும் நகராட்சி ஊழியர்களுக்கு 5 மாதச் சம்பள பாக்கி**' என்ற நிலையில் இருந்த விருத்தாசலம் நகராட்சியின் நிதி நிலையை உயர்த்தி, 2006ம் ஆண்டு பதவிக்காலம் முடியும் போது '**2 கோடியே 40 லட்சம் வரை நிதி நிலையை உயர்த்தியது...**' எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

பல நேர்மையற்ற நகர்மன்ற உறுப்பினர்கள், ஒத்துழைக்க மறுத்த ஒட்டு மொத்த நகராட்சி அதிகாரிகள், இவர்களை ஊக்குவிக்கும் மேலதிகாரிகள், அரசியல் தலையீடு, தீய

சக்திகளின் எதிர்ப்புகள். இவற்றின் மத்தியில் இவ்வளவு சாதிக்க முடிந்தது என்றால அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும், அலுவலர்களும் முறையாகப் பணி செய்திருந்தால் எவ்வளவோ சாதித்திருக்கலாம். இவர்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதைவிட தவறு செய்யாமல் மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். மக்கள் முடிந்தவரை நேர்மையான நகர்மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசு அதிகாரிகளைக் கண்காணிக்க, தண்டிக்க, நடவடிக்கை மேற்கொள்ள, தன்னாட்சி அதிகாரம் கொண்ட, ஊழல் தடுப்புக் கண்காணிப்பு ஆணையம் ஒன்று கண்டிப்பாக வேண்டும். அதற்குண்டான சட்டத்தை இயற்றி அமுல் படுத்தினாலே போதும். ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலிருந்து மெல்ல மெல்ல நாம் வெளியேறலாம். அது மட்டுமல்ல நாம் உலக வங்கியில் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழித்தால் நம் நகராட்சி சில கிராமங்களைத் தத்தெடுத்து உதவலாம். இந்தியா இலஞ்சம் ஊழலற்ற நாடானால் தானாகவே வல்லரசாக உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**நேர்மையால் சாதிக்க முடியும் என்று சாதித்துக் காட்டிய டாக்டர் மு. வள்ளுவன் அவர்களின் நகராட்சிப் பணிகள் மற்றவர்களுக்கு வழிகாட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை.**

எல்லாம் சரி... எல்லோரும் வள்ளுவன்களாக மாறி விடுவார்களா என்ன! மாறவேண்டும் என்பது தான் நம் அனைவரின் எண்ணம்! எண்ணம் நிறைவேற எல்லோரும் வாழ்த்துவோம்.

✵ ✵ ✵ ✵ ✵ ✵

# வழி காட்டும்

# வள்ளுவன்

**புவனகிரி செயபாலன்**

**தமிழ்ச்செல்வி பதிப்பகம்**
*10/88, மாரியம்மன் கோயில் தெரு*
***விருத்தாசலம் - 606 001,*** *தமிழ்நாடு*

## நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **வழி காட்டும் வள்ளுவன்** |
| ஆசிரியர் | : | புவனகிரி செயபாலன் |
| பொருள் | : | ஆவணங்களின் தொகுப்பு |
| முதல் பதிப்பு | : | மார்ச்சு 2009 |
| இரண்டாம் பதிப்பு | : | 2013 |
| பதிப்புரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| தாள் | : | 18.6 Kg. (White Maplitho) |
| எழுத்து | : | 12 புள்ளி |
| நூல் அளவு | : | டெம்மி (Demmy) 1x8 |
| பிரதிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. **100** |
| பதிப்பகம் | : | **தமிழ்ச்செல்வி பதிப்பகம்**<br>10/88, மாரியம்மன் கோயில் தெரு<br>**விருத்தாசலம்-606 001** தமிழ்நாடு<br>கைப்பேசி : **99445 85744** |
| கணினி வடிவம் | : | **சுபி அபி (கலர் ஜெராக்ஸ்)**<br>1, விளங்கியம்மன் கோயில் தெரு<br>**சிதம்பரம் - 608 001**<br>கைப்பேசி : **94424 41113**<br>email : subiabi44@yahoo.com |
| அச்சிட்டோர் | : | **பாரதி அச்சகம்**<br>திருவல்லிக்கேணி<br>**சென்னை - 600 005**<br>கைப்பேசி : **99416 25640** |

# பதிப்புரை

ஊழலற்ற இந்தியாவை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக நகராட்சியில் நிலவும் நடைமுறைகளை உள்ளது உள்ளபடி, அனைவருக்கும் புரியத்தக்க வகையில், அழகான எழுத்தோவியமாக்கி, அதனை வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த புவனகிரி செயபாலன் அவர்களுக்கும் இந்நூலினை ஆய்வுரை செய்து வழங்கிய பி. அரசப்பன் அவர்களுக்கும் நன்றி.

இத்தொகுப்பினை, நேர்மையை விரும்பும் நல்ல உள்ளங்களும், விமர்சகர்களும் படித்து பயன் பெறுவீர்கள் என நம்புகிறோம்.

ஊழலற்ற இந்தியாவை உருவாக்க தங்களின் பங்களிப்பாக, தங்கள் நண்பர்களையும் இத்தொகுப்பினை படிக்கச் செய்து ஆதரவளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- பதிப்பகத்தார்

**கி. அசோகன்** B.A., B.L.,
கூடுதல் மாவட்ட நீதிபதி

விரைவு நீதிமன்றம்-2
கடலூர்
நாள் : 12-3-2009

# மதிப்புரை

சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கின்ற ஊழலைக் குழி தோண்டிப் புதைக்க உருவெடுத்து செயல்பட்ட, செயல் படுகின்ற வள்ளுவனை இந்த எழுத்தாளர் இந்த நூலின் மூலம் வெளி உலகிற்கு காட்டிய பாங்கு எக்காலத்திலும் மறக்க முடியாத, மறுக்க முடியாத நிலையைக் காண முடிகிறது.

டாக்டர். வள்ளுவன் ஒரு தீவிரவாதி. இந்த தீவிரவாதி இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமானவராகக் கருதப்பட வேண்டிய நிலையில் உள்ளார். ஊழலை ஒழிப்பதில் தீவிரம் காட்டும் தீவிரவாதி ஆவார். இந்தத் தீவிரவாதி செயலைக் கெண்டு, அநேக தீவிரவாதிகள் ஊழலை ஒழிக்கும் தீவிரவாதிகளாக நிறைய உருவெடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இளம் வயதில் இருந்தே நாணயமான, நேர்மையான செயல்பாடுகளைத் தொடர்ந்து செயலாக்கி, இன்றும் தொடர்ந்து இலஞ்சப் பேய்களுக்கு மிக பெரும் பேரிடியாக இருக்கும் செயலை இந்த நூலைப் படிக்கும் போது அறிய முடிகிறது.

கொசுவை நாட்டில் நடமாட விட்டது யார்? என்ற கேள்வியை எழுப்புவோமானால் ஊழலைத் தொழிலாகக் கொண்ட நபர்களே காரணம் என்பது நன்கு விளங்கும். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் பழைய காலத்தில் கொசு மருந்து தெளித்தது போல் தெளித்திருந்தால் இன்று கொசுவே இருக்க வாய்ப்பில்லை. கொசு மருந்து அடிப்பதாக் கூறி பணத்தைக் கையாடல் செய்து, கொசுவை வளர்ப்பதிலேயே உள்ளாட்சித் துறை செயல்படுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. உள்ளாட்சி அமைப்பிலேயே சிக்கன நடவடிக்கையைக் கையாண்டு உரிய வரி மதிப்பீட்டை மக்களே செலுத்துவதற்கு வழிவகை செய்யாமல், இலஞ்ச ஊழல் பெருச்சாளிகள் அந்த வரியை வசூலிக்காமல், மக்களுக்குச் சேரவேண்டிய நன்மை மக்களுக்குச் சேராமல் போய் விடுகிறது என்பதையும் காண முடிகிறது.

அன்றாடம் நடக்கின்ற விபத்துக்களைத் தவிர்க்க மார்க்கெட் சுவர் அமைத்துத் தற்கால மார்க்கெட்டில் மதிப்பெண் நூற்றுக்கு நூறு வள்ளுவன் பெற்றுள்ளார் என்பதுடன் அனுமதியற்ற குடிநீர் இணைப்புக் கொடுத்து, மக்களுக்குக் குடிநீர் பஞ்சத்தை ஏற்படுத்தும் அவல நிலையைத் தடுத்துச் செயல்பட்ட பெருமானார் டாக்டர். வள்ளுவன். சொத்துவரி, நகராட்சி சான்று கேட்டல் ஆகியவற்றில் உள்ள குளறுபடிகள் மற்றும் ஊழல்களை நீக்கிய ஒரு அற்புத மனிதர் ஆவார். மக்கள் நலனுக்காகத் தீர்மானங்களைப் போட்டு அமல்படுத்த முடியாத நகராட்சியில் பெருந்தலைவராக இருந்த போது, அதையும் அமல்படுத்த வேண்டும் என்று தீவிரவாதியாகச் செயல்பட்டு உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து தீர்வு கண்ட உத்தமர் ஆவார். ஊழல்களை ஒழிக்க நேரடி விசாரணை கேட்டு, தனி நபராக உண்ணாவிரதம் இருந்த தற்காலிக காந்தியாவார். இன்னும் சொல்லப் போனால் அரசியல்வாதிகள் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று சொல்லி வந்தாலும் உண்மையிலேயே உள்ளாட்சித் துறையில் சுயாட்சி கோரி உண்ணாவிரதம் இருந்த ஒரே ஒப்பற்ற தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவர் பதவிக் காலத்தில் செயல்பட்டது போல், ஒரு உள்ளாட்சி அமைப்பு நேர்மையாகச் செயல்பட்டால் இந்திய நாடு எந்த நாட்டிலும் கையேந்தி கடன் கேட்கவோ, கையேந்தி பிச்சை எடுக்கவோ வேண்டியதில்லை. இவருடைய செயல்பாடுகளைப் பின்பற்றி இந்திய அரசு செயல்பட்டால் இந்திய அரசு அமெரிக்காவை விட மிகப்பெரிய வல்லரசாக உலகில் வர முடியும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 அமல்படுத்தப் பட்டாலும் கூட தகவல் அறியும் ஆணையச் செயல்பாடுகள் ஏனோ வேகமாகவும், விரைவாகவும் மக்களுக்கு பயன்படுகிற அளவில் நடைபெறவில்லை என்று சொல்லாமல், அத்தனையும் சரியாகச் செயல்பட வேண்டுமென்று குரல் கொடுத்த ஒரு உத்தமர்தான் இந்த டாக்டர். வள்ளுவன் ஆவார்.

திருவள்ளுவரால் தமிழ் சமுதாயத்திற்குப் பெருமை என்றால், இந்த டாக்டர். வள்ளுவன் ஊழலை ஒழிக்கும் அளவில் செயல்பட்டு திருவள்ளுவரின் வழி நடக்கும் ஒரு பெருந்தகை என்பதில் சற்றும் ஐயமில்லை. தற்காலத்தில் பதவி உயர்வு பெறுவதற்குப் பகட்டான அடிமைச்சாசனம் எழுதிக்

கொடுத்தல், கையூட்டு வழங்குதல் என்ற முறை சர்வ சாதாரணமாக இருந்து வருகிற சூழ்நிலையில் நாணயமான நேர்மையான அதிகாரிகளுக்கு மதிப்பில்லை என்பதைக் காண முடிகிறது. அதனால் தான் ஊழல் செய்யும் அதிகாரிகள் உண்மைக்காகவும், நேர்மைக்காகவும் செயல்பட்ட டாக்டர். வள்ளுவனின் செயல்பாடுகளுக்குள்ள ஒத்துப்போவதில்லை என்பதைக் காண முடிகிறது. ஊழல் வழக்குகள் இந்த டாக்டர். வள்ளுவனால் போடப்பட்டு இருந்தாலும், ஊழலை ஒழிக்க ஊழல் தடுப்புக் காவல்துறை கண்காணிப்புப் பிரிவு மிக விரைவாக செயல்பட வேண்டும் என்பதை இந்த நூலைப் படிக்கும் போது அறிய முடிகிறது. ஊழலை ஒழிக்க டாக்டர். வள்ளுவன் சொன்ன யோசனைகளும், அவருடைய சாதனைகளும் அளப்பரியது. மிகவும் சிறப்பானது. ஒட்டு மொத்தமாக இந்நூலைப் படித்துப் பார்க்கும் போது இந்த நூலை எழுதிய புவனகிரி செயபாலன் அவர்கள் மிக அற்புதமாக வள்ளுவனின் தீவிரவாதத்தை எடுத்து வைத்து, அவர் ஊழலை ஒழிக்க உலகுக்கு வந்த ஒரு தீவிரவாதி என்பதையும், உலகிற்கு எடுத்துக் காட்டிய விதம் டாக்டர். வள்ளுவனுக்கு மட்டும் பெருமை சேர்த்ததாகக் கருதிவிட முடியாது. மக்களுக்குத் தொண்டாற்றும் மிகப்பெரிய அரிய தலைவரை இந்த உலகிற்கு அறிமுகப் படுத்தியுள்ளார் என்றே காணமுடிகிறது. இலஞ்த்தைத் தவிர்க்கவும், நெஞ்சை நிமிர்த்தி நடக்கவும் வள்ளுவனின் வழிகாட்டுதல் சிறப்பாக அமைய எனது வாழ்த்துதலை இந்நூலிற்குக் காணிக்கையாக்குகிறேன்.

நேர்மையை என்றும் விரும்பும்
தங்கள் அன்புள்ள





பொறிஞர் **செ.மா. அரசு எம்.இ.,** சென்னை -93

முன்னாள் தலைமைப் பொறியாளர் (த.நா.பொ.ப.துறை) 07.03.2009

பொதுச் செயலாளர், ஊழல் எதிர்ப்பு இயக்கம்

# அணிந்துரை

வள்ளுவன் என்றாலே வழிக்காட்டுபராகத்தான் இருக்க வேண்டும் போலும். புத்தகத் தலைப்பைப் பார்த்தவுடன் பொய்யா மறை தந்த தெய்வப் புதல்வன் திருவள்ளுவன் பற்றிய நூல்களில் இதுவும் ஒன்று என்று தான் நினைக்கத் தோன்றும். ஆனால் திருவள்ளுவரின் 1330 வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி அதற்கு மேலான சில நெறிகளையும் சமுதாயத்தின் முன் வைக்கின்ற இன்றைய டாக்டர். வள்ளுவனைப் பற்றியதே இக்கையடக்க நூல்.

குறுக்கத்தரித்த குறளைப் போலவே பல விரிவான செய்திகளை உள்ளடக்கியது இந்நூல். பெறற்கரிய நண்பர் டாக்டர். வள்ளுவன் அவர்களின் செயற்கரிய சாதனைகளைக் கூறும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவது யான் பெற்ற பெரும் பேறாயாகும்.

நூலின் அடக்கப் பொருட்களைப் பற்றி நான் விமர்ச்சித்து எழுதப் போவதில்லை. டாக்டர். வள்ளுவன் நகர்மன்றத் தலைவராக இருந்து செய்த சாதனைகளை நாடறியும். அறியாதோர் நூலைப் படித்துத் தெரிந்துக் கொள்ளலாம். ஆனால் என்னுடைய இந்த அணிந்துரையில் கடந்த சுமார் 7 ஆண்டு காலமாக ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்து தோளோடு தோள் நின்று அவர்களுடன் தொய்வின்றிப் பணியாற்றிய சில நிகழ்வுகளைச் சொன்னால் படிப்போர்க்குச் சுவைபட அமையும் என்று நம்புகிறேன்.

ஊழல் எதிர்ப்பு இயக்கம் தொடங்கிய ஆரம்ப காலத்தில் ஒரு நாள் ஒரு தொலைபேசி அழைப்பில் ‘நகர் மன்றத் தலைவர் பேசுவதாகக்’ கூறினார். நான் அரசுப் பணியாற்றிய காலத்தில் நகராட்சிப் பணிகளைப் பார்வையிடும் பொறுப்பில் இருந்தேன். பெரும்பாலான நகராட்சித் தலைவர்கள், ஆணையர், பொறியாளர் செய்கின்ற பணிகளின் இலட்சணங்களைப் பற்றியும் நேரடியாகப் பார்த்து வெதும்பியிருக்கிறேன். எனவே

ஒரு நகரமன்றத் தலைவர் ஊழல் எதிர்ப்பு இயக்கத்துடன் தொடர்பு கொண்டது வியப்பைத் தந்தது. 'நான் உங்கள் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நான் உங்களோடு இணைந்து செயல்பட விரும்புகிறேன்' என்றார். கரும்புத் தின்ன யாரும் கூலி கேட்பார்களா? மிகக் குறுகிய காலத்தில் விருத்தாசலம் கிளை உதயமாகிறது. தொடர்ந்து கடலூர், சிதம்பரம், மங்கலம்பேட்டை, கருவேப்பிலங்குறிச்சி, நெய்வேலி, ஸ்ரீமுஷ்ணம் மற்றும் கடலூர் மாவட்ட அமைப்பு ஆகியவை உருவாகின. டாக்டர். வள்ளுவன் அவர்கள் இட்ட உரத்தின் மூலம் ஊழல் எதிர்ப்பு இயக்கம் செழித்து வளரத் தொடங்கியது.

விருத்தாசலம் வட்டத்தை இலஞ்ச ஊழல் இல்லாத வட்டமாக உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டோம். இக்காலகட்டத்தில் டாக்டர். வள்ளுவன் அவர்களின் சீரிய தொடர் நடவடிக்கைகள் காண்போரை வியப்புற வைத்தன.

விருத்தாசலம் நகராட்சியில், டாக்டர். வள்ளுவன் காலத்துக்கு முன்னர், ஓராண்டில் ரூ. 25 லட்சத்துக்குக் கொசு மருந்து அடித்து கதை நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த மகா மோசடி பற்றி வள்ளுவன் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தும் பயனில்லை. தமிழன் டிவியில் தலைவர் சி.எஸ்.கே. வள்ளுவனுடன் நானும் நேரடி ஒளிபரப்பில் கலந்துக் கொண்டேன். பேட்டியாளர் இவ்வளவு பெரிய தொகையைச் சுருட்டியது யார்? ஒரே நாளிலா? எப்படி முடிந்தது? என்று வினவ, "இது ஒருவர் ஒரு நாளில் செய்ததல்ல. சேர்மன் முதல் கடைநிலை ஊழியர் வரை எல்லோரும் சேர்ந்து பல மாதங்களாக மக்களை ஏமாற்றி அடித்த கொள்ளை தான். மக்கள் ஏமாளியாக இருந்தால் பேராசைக்காரர்கள் அவர்கள் தலையில் மிளகாய் அரைக்கத்தானே செய்வார்கள்" என்றார் வள்ளுவன்.

ஒரு நேர்மையான மக்கள் பிரதிநிதி மக்களுக்கு எப்படிப் பல நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை செயல்படுத்திக் காட்டியவர் வள்ளுவன். இ.நிர்வாக முறையை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டார். பொது மக்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் தேவை தரப்படும் பணிகளை எளிதில் செய்து கொள்ளத் தக்க வகையில் நடைமுறைகளை மாற்றியமைத்தார். குடியிருப்போர் நலச்சங்கங்களின் ஆதரவோடு பல நல்ல

பணிகளை செய்து முடித்தார். சாலைகள் சீரமைக்கப்பட்டன. பல ஆண்டுகளாக மின் வசதி இல்லாமல் இருந்த பகுதிகளுக்கு மின் விளக்குகள், சொத்து வரி விதிப்பு, இலஞ்சத்துக்கு இடமின்றி முறைப்படுத்தியது, பள்ளிக் கட்டிடங்கள் கட்டியது. எல்லாவற்றிலும் சிறப்பாக 16 ஆண்டு தொலைநோக்குப் பார்வையில் குடிநீர் வசதிகள் செய்து முடிக்கப்பட்டது. இவ்வளவுக்குப் பின்னும் நகர சபை சார்பில் வங்கிகளின் சேமிப்புக் கணக்கில் ரூ. 2 கோடிக்கு மேல் இருந்தது பாராட்டத் தக்கது.

வள்ளுவனின் அணுகுமுறை, செயல்பாடு நேர்மைக்குக் காரணம், அவரது இளமைப் பருவ வளர்ப்பும் வழி காட்டுதலும்தான். “உனக்கு உரிமையில்லாததை நீ தொடாதே” என்று தாரக மந்திரமாக ஓதி அவரை ஒரு சிறந்த குடிமகனாக உருவாக்கிய அவரது பெற்றோரை எண்ணும்போது கண்கள் பனிக்கின்றன. அவர்களைத் தொழுது வணங்குகிறேன். இன்னும் நிறைய, நிறைய... எழுதிக்கொண்டே போனால் அணிந்துரையே ஒரு நூலாகிவிடும்.

நல்லவரோடு பழகி, நல்லார் குணங்களை எடுத்துரைக்கின்ற வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. அந்த நற்பேறினை நூலாசிரியர் புவனகிரி செயபாலன் அவர்கள் நிகழ்வுகளைத் தந்தார். கோர்வையாகத் தந்த அவரது நன்முயற்சி பாராட்டுக்குரியது.

ஊருக்கு ஒரு வள்ளுவன் வேண்டும் என்று அடிக்கடி பேராசையுடன் குறிப்பிடுவார் தலைவர் சி.எஸ்.கே. அவர்கள். ஒரு நகராட்சிக்கு ஒரு வள்ளுவன் இருந்தாலே மக்கள் நலம் பெறுவர். நாடு மேம்படும்

**Prof. A. PANNERSELVAM**, M.A., M.Ed., Ph.D.,
Former Director of Teacher Education
Research & Training, Government of Tamilnadu

Ph : 24893597
39 (Old 17), Mangalam Appartments
18th Avenue, Ashok Nagar
Chennai - 600 083
Date : 13-3-2009

# வாழ்த்துரை

தனிமனித ஒழுக்கத்துக்கு நாட்டில் பல சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இச்சட்டங்கள் யாருக்காக? சட்டங்களைப் பற்றி கவலைப்படாமல் எப்போதும் நல்லதையே எண்ணி, நல்லதையேச் செய்து, எந்நிலையில் வாழ்ந்தாலும் பண்புகளை மாற்றிக் கொள்ளாத ஒழுக்கச் சீலர்கள், அரிச்சந்திரன் பரம்பரையினர். இதற்கு நேர்மாறாக "என் வழி தனி வழி" என்று சட்டத்தை மதியாதவர்கள், காட்டில் வாழ்ந்த வீரப்பன் பரம்பரையினர். இந்த இருவகை மனிதர்களும் ஒரு சிலரே. இவர்களுக்குச் சட்டம் ஒரு பொருட்டல்ல. சட்டங்களை மதித்தல் வேண்டும் தவறு செய்தால் தண்டிக்கப்படுவோம் என்று சட்டங்களினால் கட்டுப்பட்டாலும், சூழ்நிலை காரணமாக, தவறு செய்து சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளும் இரண்டும் கெட்டான்கள். பெரும்பாலானோர் இவர்களே ஆவர். இவர்களுக்காகவே சட்டங்கள். புராதன காலத்திலேயிருந்து மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்த பல கதைகள் உள்ளன. இன்றும் கூட பல மேலோர்கள் இன்னல்கள் பல உற்றபோதும், தன்னிலை இழக்காமல் வாழ்ந்துள்ளனர். நம்மை வாழ்விக்க வந்த காந்தியடிகள், வாழ்வாங்கு வாழ்ந்து நமக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழும் பெரியார், காமராசர், கக்கன் போன்றோர் தூய்மைக்கு வழிகாட்டியவர். இன்று மனித நேயமற்றவர்கள், ஆசை மிகுதியால், பேராசையினால் மக்களைச் சுரண்டிப் பிழைப்பு நடத்துகிறார்கள். முறையாக நடக்க வேண்டிய வேலைகளுக்குக் கூட இலஞ்சம் கொடுத்தால்தான் நடைபெறும் என்ற நிலை. இது போன்ற ஊழல் சாதாரண நிலையில் உள்ளோரிலிருந்து உயர்ந்த பதவியில் உள்ளோர் வரை புரையோடியிருக்கிறது. இதனை வெளிச்சம் போட்டுக் காட்டும் செய்தித்தாள்கள், படக்காட்சிகள் ஆகியவற்றைப் படித்தும், பார்த்தும் கூட மக்கள் வேடிக்கையாக எடுத்துக் கொள்கின்றனர். நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் வரை நம்மை

அயல்நாட்டினர் சுரண்டுகின்றனர் என்று அதிர்ச்சி யுற்றோம், வேதனை அடைந்தோம். ஆனால், இன்று நமது சொந்தங்களே சுரண்டுகின்றன.

இன்று உலக அரங்கினில் இலஞ்சம் பெருத்துள்ள நாடுகளின் பட்டியலில் 112வது நிலையில் உள்ளது என அறிகிறோம். வெட்கக்கேடு. முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு. அப்துல்கலாம் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளைக் கண்டு பேசும்போதெல்லாம் நான் இலஞ்சம் வாங்குவதை எதிர்ப்பேன், என் தாய், தந்தையரை இலஞ்சம் வாங்க விடமாட்டேன் என்ற உறுதி மொழியை எடுக்கச் சொன்னார். இன்று சில மாநிலங்களில் இலஞ்சம் வாங்குவதை எதிர்த்துப் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற கருத்துள்ளது.

அரசு பணி கிடைக்காதா என்று ஏங்கி அதனைப் பெற்ற பின்னர் மக்களைத் துன்புறுத்தி வஞ்சிக்கும் அரசு அலுவலர் ஒருபுறம். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகள் மறுபுறம். தீர்மானங்கள் கொண்டு வந்து சட்டமாக்குவதும், அவற்றை உடனடியாக மக்களுக்குச் சென்றடைய வழிவகுப்பதும் இவர்கள் இருபாலரது கடமை. இவர்களுக்கிடையே ஏதும் மோதலின்றி, உராய்வு இன்றி மக்கள் பணியே மகேசன் பணி எனச் செயல்பட ஒருமித்த கருத்து வேண்டும். இக்கருத்து அனைத்து நிர்வாகத்துக்கும் பொருந்தும்.

விருத்தாசலம் நகராட்சியை மேம்படுத்த, மக்கள் பணி செய்ய 25.10.2001இல் டாக்டர். மு. வள்ளுவன் நகராட்சித் தலைவராகப் பணி தொடங்கியபோது ரூ. 50 லட்சம் கடன் பட்டும், 5 மாதங்களாகப் பணியாளருக்குரிய சம்பளம் கொடுக்க இயலாத நிலையில் இருந்த நகராட்சியின் நிதிநிலையை, அவர் பதவிக்காலம் 5 ஆண்டுகள் முடித்து 24.10.2006இல் நகராட்சி நிதியை ரூ. 2.40 கோடியாக உயர்த்தியது அவரது தனிப்பெரும் சாதனை. ஆனால் இந்த நிலை ஏற்பட அவரிடம் மந்திரக்கோல் ஏதும் இல்லை. கடுமையான உழைப்பு நிர்வாக இயந்திரத்தைச் செயல்படுத்த, மக்கள் மனதை மாற்ற அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் படிக்கும் போது இது ஒரு தனிமனிதனின் போராட்டம் என்றே சொல்ல வேண்டும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, ஒவ்வொரு நிலையிலும் தனி மனிதனாகப் போராடி, இறுதியில் புடம்போட்ட தங்கமாக வெளிவந்துள்ளார்.

இந்நூல் அனைத்து நகராட்சி மன்றங்களுக்கும், மக்களுக்கும், நிர்வாக அலுவலர்களுக்கும் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களாட்சி மலர வழிகாட்டும். ஊழல் செய்யும் கொடியவர்களை ஒழிப்பது, செழிப்புடன் வளர்ந்துள்ள பயிரிடையே முளைத்துள்ள காளானைக் களை எடுப்பதை ஒக்கும். இதனையே வள்ளுவர்

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்ட தனாடு நேர்" என்றார்.

டாக்டர். வள்ளுவன் இளமைக்காலத்தில் என்னிடம் மூன்று ஆண்டுகள் பயின்றவர். சொல்வன்மை படைத்தவர். மனித நேயமும், சிறந்த பண்புகளையும் பெற்றவர். நகர் மன்றத் தலைவராகப் பெரும் சாதனை படைத்திருப்பதை என் பெருமையாகக் கருதுகிறேன். அவர் மேற்கொண்டு நடத்தும் அனைத்துப் பணிகளிலும் மேலும் சிறக்க என் உள்ளார்ந்த வாழ்த்துக்கள்.

பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு, நீரதன் புதல்வர், இந்நினைவகற்றாதீர், என்று பாடிய பாரதியைப் போற்றும் வகையில் இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். இலஞ்சம் கொடுப்பதும் குற்றம், இலஞ்சம் வாங்குவதும் குற்றம்.

இவண்



முனனாள கலவி இயக்குநர்
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்கம்
தமிழ்நாடு

**RAJIV GANDHI CHAIR FOR PANCHAYATI RAJ STUDIOS**

DEPARTMENT OF POLITICAL SCIENCE AND DEVELOPMENT ADMINISTRATION

GANDHIGRAM RURAL UNIVERSITY

**Prof. G. PALANITHURAI**,

Gandhigram - 624 302
Dindigul District
Tamil Nadu, India

Phone : 91-451-2451775(O) 91-51-2451063(R) Fax:91-51-2451775 Email L gpgri_hung1@rediffmail.com

# பாராட்டுரை

தலைவர் என்பவர் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் வழிகாட்டக் கூடியவர். மக்களின் மனம் போன போக்கில் செல்லாமல் மக்களுக்கு எது நன்மை பயக்கும் என எண்ணி மக்களை நெறிப்படுத்துபவர்தான் தலைவர். சூழலில் சிக்குண்டு போகாமல் சூழலை மாற்றியமைக்கும் ஆற்றலும், சக்தியையும் கொண்டவரைத்தான் நாம் தலைவர் என்கிறோம். அதே போல் மக்களாட்சி என்பது தேர்தல் நடத்துவது, பதவியில் அமர்வது மட்டுமல்ல. இவைகளைத் தாண்டி ஒரு பண்பாடாக, கலாச்சாரமாக, நடத்தையாக மக்கள் மற்றும் அமைப்புச் செயல்பாடுகளைக் கொண்டு வருவதுதான் மக்களாட்சி. எனவே, இது ஒரு முறைப்படுத்துப்பட்ட பக்குவமான மானுட செயல்பாடாகும். மக்களாட்சி அமைப்புகளில் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படக் கூடியவர்கள் சராசரி மனித சுபாவங்களில் இருந்து, மேம்பட்ட பண்பு நலன்களைக் கொண்டவர்களாகத் திறன் மிக்கவர்களாகவும், மக்களை நெறிபடுத்தும் சக்தி கொண்டவர் களாகவும் இருக்க வேண்டும். அது தான் சரியான தலைமைத் தத்துவத்திற்கு இலக்கணமாகும். ஆனால் இன்று சராசரி மக்களின் சராசரி மனோபாவத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் நம் மக்கள் பிரநிநிதிகளும், கட்சித் தலைவர்களும் நடந்து கொள்வது உண்மையான தலைமைத் தத்துவத்தையும், மக்களாட்சியையும் பிரதிபலிக்க இயலவில்லை.

இந்தச் சூழலில் மக்களாட்சியைப் பற்றிய கனவோடும், மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற கட்டுப்பாட்டோடும்,

தூய்மையான நல்ல நிர்வாகத்தையும் தந்திட வேண்டும் என்ற நோக்கோடும் உள்ளாட்சிக்குப் பலர் வருகின்றனர். இவர்கள் தான் தங்களின் இலட்சியங்களை நிறைவேற்றப் போராட்டத்திற்கு ஆட்பட வேண்டியுள்ளது. இந்த எண்ணிக்கை மிகக் குறைவுதான். இந்த வரிசையில் டாக்டர். வள்ளுவன் ஓர் போராளியாக உருவெடுத்துள்ளார். ஊழலற்ற ஓர் உள்ளாட்சியை உருவாக்க முனைந்த வள்ளுவன் சந்தித்த பிரச்சனைகள், போராட்டங்கள் அனைத்தும் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய சாதனைகளைச் செய்தவர்கள் அனைவரும் தன்னந்தனியே போராடி வெற்றிக் கொடி நாட்டியபிறகுதான் கூட்டம் வருகிறது. அந்த வரிசையில் திரு. வள்ளுவன் செய்துள்ள சாதனை என்பது அசாத்தியமானது. பாராட்டுக்குரியது. உள்ளாட்சியில் நல்லாட்சி தர வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு இந்நூல் ஒரு வழிகாட்டி. உலகிற்கே வழி காட்டினான் உலக் பொதுமறைத் தந்த வள்ளுவன். இந்த டாக்டர் வள்ளுவன் உள்ளாட்சித் தலைவர்களுக்கு வழி காட்டுகிறார். இதற்குத் துணிவும், பணிவும், தியாகமும், நியதியும், நேர்மையும் தான் தேவை. திரு. வள்ளுவனை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். இந்தியாவிற்கு இதுபோல் எண்ணிலடங்கா வள்ளுவன்கள் தேவை நீத்துபோன நிர்வாகத்தை செம்மைப்படுத்த.

அன்புடன்



**P. அரசப்பன்** B.A., B.Ed.,
*தலைமை ஆசிரியர் (பணி நிறைவு)*

*36, தெற்கு தெரு*
*ஆதிவராகநத்தம்*
***புவனகிரி - 608 601***

## ஆய்வுரை

## டாக்டர் வள்ளுவன் ஒரு சகாப்தம்

டாக்டர் வள்ளுவன் அவர்கள் விருத்தாசலம் நகரசபை தலைவராக அவர் ஆற்றிய பணியினை (பணி என்பதை விட தொண்டு என்ற சொல் பொருத்தமுடையது) விவரிப்பதும், அவர் நிர்வாகம் குடியாட்சி முறைமைக்கு ஏற்றதாக விளங்கியதை எடுத்துக் கூறுவதும், உலகில் தொண்டு மனப்பாங்கினையும், உரிமை போர் நடத்தி வெற்றி பெற்று உலகை விழிப்புறச் செய்த அன்னல்களுடன் ஒப்பிட்டுச் சொல்வதும் வறுமை இல்லா பூமியில் வாட்டமில்லா மனிதர்கள் வாழ வழி கண்ட தத்துவ ஞானிகளுடன் ஒத்து நோக்கிடவும், மனிதநேயம் உலகெங்கும் செழிப்புற்று விளங்க அன்னார் தொண்டு குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளி வீசியதை ஓரளவிற்கு உணர்ந்ததை எடுத்து இயம்புவதே இந்நூலின் நோக்கமாகும்.

நகரசபை தலைவராக டாக்டர் வள்ளுவன் தொண்டு மாவட்ட அளவில் ஏனையோருக்கு ஒரு வழி காட்டுதலாகவும் மாநில அளவில் ஒரு தூண்டுதலாகவும், தேசிய அளவில் ஒரு எடுத்துக்காட்டாகவும், உலக அளவில் ஒரு மக்களாட்சி தத்துவமாகவும் அமைந்ததை நடுநிலை உள்ளம் கொண்டோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேச் செய்வர். நகரசபை நிர்வாகம் என்பது ஒரு நிர்வாக அமைப்பு முறை (Administrative mechinery) இத்துடன் மனிதநேயம் என்ற உணர்வு திரவத்தை ஊட்டி (Drops of Humanism) அதன் இயக்குநராக டாக்டர் வள்ளுவன் செயல்பட்டது தான் செயற்கரிய செயல். அலங்கரிக்கப்பட்ட நகரசபை தலைவர் பதவியாக காண்போரை தலை குனியவைக்கும் தன்னிகரற்ற எடுபிடிகள் ஏராளம் பேர் அடங்கிய எதேச்சதிகார போக்கை நீக்கி (Imperialistic Rule) ஏழை எளியவர்களும் கண்டும் கொண்டும் செயல்பட வைத்த பெருமை டாக்டர் வள்ளுவனைச் சாரும். அன்றாடம் நிர்வாகத்தில் ஏற்படும் விரிசல்களின் இடைவெளியின் காரணங்களை கண்டாய்ந்து கடைநிலை வாழ்வோரும் கவலையற்ற வாழ்வு வாழ வழிகண்டவர். ஆட்சியாளர்களும் அரசியல் கட்சியினரும்

பகட்டான கலாச்சார புரட்சிக்கு வழி காண்பதற்கு முதன்மை அளிக்கும் இக்காலத்தில் விருத்தாசலம் மக்களின் கவலையற்ற வாழ்விற்கு வழி காண நினைத்தவர் டாக்டர் வள்ளுவன்.

உலகில் தத்துவ மேதைகளின் படைப்புகளும், ஞானிகளின் அறிவுரைகளும், விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகளும் இன்றும், என்றும் உலகை வாழ வைத்துக் கொண்டு வருகின்றவாறு வள்ளுவனின் குற்றமற்ற, செயல் பாடுகள் நிறைந்த இந்நூல் தமிழ்நாட்டு மக்களை அவர் தொண்டின் சிறப்பை உணர வைக்கும் இயல்பை ஓரளவு பெறும் என்ற எண்ணத்தில் எழுதப் பட்டதாகும். டாக்டர் வள்ளுவன் தன் நிர்வாகத்தில் புகுத்த நினைத்த ஜனநாயக பண்புகளை எடுத்து இயம்பும் போதெல்லாம் உலகை வாழ்விக்க வந்த உத்தமர்களின் புகழைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தின் பேரில் அவர்களின் வாழ்க்கையின் நிகழ்வுகள் இவண் அதிகம் இடம் பெற்றிருப்பதைப் பொருத்தருள்க!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற வரிகளால் பாரதியார் பொய்யா மொழிப் புலவன் திருவள்ளுவரை புகழ்ந்துரைத்த வரிகள் இக்காலத்தில் டாக்டர் வள்ளுவன் அவர்களுக்கு பொருந்தி நிற்பது இயற்கை அளித்த நியதியாகவே விளங்குகிறது. இந்நூலின் சிறப்பு அம்சங்கள் யாவும் செயலால் அறியப்படும் சிறப்பை உடையது ஆகும். இலக்கிய நூல்கள் நமக்கு அளிக்கும் இலக்கியச் சுவை Isthatic Taste கற்பனைவளம், சொல் ஆக்கம், நிகழ்வுகளின் போக்கு இவைகள் எல்லாம் நம் உணர்வுகளை பாதிக்கக்கூடியவை. ஆனால் ஆசிரியர் திரு. இரா. செயபாலன் தொகுத்து அளித்த "வழிகாட்டும் வள்ளுவன்" என்ற இந்நூல் மனித வாழ்க்கையின் நெறிமுறைகளை ஒருமைப்படுத்தி செயல்வழி சிந்தனையை தூண்டச் செய்யும் ஒரு அற்புதப் படைப்பு. இலக்கிய உணர்வுகளால் ஈர்க்கப்பட்டவர்கள் அனைவரும் அந்த உணர்வுகளின் வழியே வாழ்க்கையின் நடை பயணத்தைத் துவக்கினார்களா என உறுதி இட்டுக் கூற இயலாது. ஆனால் இந்நூலில் காணப்படும் நிகழ்வுகள் அனைத்தும் மனிதன் தன்னை ஒழுக்க விதிகளுக்கு ஒப்படைத்தே தீருவேன் என்ற நிலையை வலியுறுத்தி அதில் வெற்றியையும் ஈட்டிய ஒருவரை 'டாக்டர் வள்ளுவனை' அறிமுகப் படுத்துவதாகும்.

இந்நூலைத் தொகுத் தளித்ததன் மூலம் டாக்டர் வள்ளுவன் அவர்களின் அரும் பெருமைகளை உலகிற்கு அறிமுகம் செய்த இதன் ஆசிரியர் திரு. இரா. செயபாலன் பேரினை பெற்றவராகிறார். இவர் முயற்சி ஈடு இணையற்றது.

காரல் மார்க்சின் தத்துவங்கள் உலகெங்கும் ஒலிக்க ஒரு ஏங்கல்ஸ் விளங்கியது போலவும், ஆங்கிலப் பேரறிஞர் ஜான்சன் அறிவுத்திறன் உலக மக்களால் உணரப்பட ஒரு பாஸ்வெல் இருந்ததைப் போலவும் டாக்டர் வள்ளுவன் அவர்களின் தொண்டு தமிழக மக்களால் படித்துணர ஆசிரியர் செயபாலன் அவர்களின் வழிகாட்டும் வள்ளுவன் என்னும் இந்நூல் காரணமாக விளங்குகிறது. தன்னுடைய நிர்வாகத்தில் லஞ்சத்தையும், ஊழலையும் தலைகாட்ட விடமாட்டேன் என சபதம் மேற்கொண்டு அதன் வழியே பணியாற்ற முயன்றதை இந்நூலில் பல நிகழ்வுகள் மூலம் ஆசிரியர் விளக்கிச் செல்கிறார்.

இவ்வாறு வாழ்க்கையில் தன்னை ஒரு தத்துவத்திற்கென இளம் வயதிலிருந்தே பக்குவபடுத்திக் கொண்டவர்களில் டாக்டர் வள்ளுவனும் ஒருவராவார். பள்ளிப் பருவத்திலிருந்தே நெறிப் பட வாழ்ந்த வாழ்க்கை அவரைப் பிற்காலத்தில் லஞ்சத்திற்கு எதிராகவும், ஊழல் ஒழிப்பிற்கும் தான் செயல்படத் தலை தூக்கி நிறுத்தியது. மகாத்மா காந்தி அவர்கள் தன் வீட்டு வேலைக்காரப் பெண் மூலம்தான் அறிந்து கொண்ட அரிச்சந்தி ரனின் உண்மையே உரைக்கும் எண்ணம் அவர் மனதிலே வேர் ஊன்றி ஆலமரமாக தழைத்து விட்டது. தன்னுடைய பள்ளிப் பருவத்திலேயும் வகுப்பு ஆசிரியர் வற்புறுத்தியும் பொய் பேசாத நிலையில் நின்றார். இந்நிலையிலிருந்து என்றும் பிறழாத வரானார். பிற்கால வாழ்வில் ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் தொடுத்த போதும் போரில் சாமார்த்திய த்தையும் சாதுர்யத்தையும் நம்பவில்லை. மாறாக சத்தியத்தை நம்பினார். சத்தியாக்கிரகப் போரின் மூலம்தான் சூரியனே அஸ்தமிக்காத எல்லைகளைக் கொண்ட ஆட்சியை அடிபணியச் செய்தார். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்றை உலகில் நடத்தி வெற்றிக் கண்ட முதல் மனிதராக விளங்கினார்.

"ஊழிபெயரினும் தான் பெயரார் - சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்" என்னும் குறளின் இலக்கணமாகத் திகழ்ந்தார் என அறிகிறோம். அவ்வாறே டாக்டர் வள்ளுவனும்

தன் செயலில் சத்திய நெறியைக் கடைப்பிடித்ததுடன் நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும் பெற்று வஞ்சனைகளையெல்லாம் புறமுதுகு கண்டார் என்பதை அவர் நிர்வாகத்தில் செய்த மாற்றங்கள் பறை சாற்றிக் கொண்டுள்ளன. உலகோர் உள்ளங்களிலெல்லாம் அழியா எண்ணத்தை நிலை நிறுத்தி நின்று புகழ் படைத்தவர்கள் சிலராவர். ஜீவகாருண்யமே தன் வாழ்க்கை என தன்னை அர்பணித்துக் கொண்ட வள்ளல் பெருமான், சத்தியமே வெல்லும், சத்தியாகிரகப் போரே தர்மத்தின் இறுதி நிலை என உறுதியாக நின்று சாதனை படைத்த மகாத்மா காந்தி, அடிமை விலங்கை அழித்தே தீருவேன் எனப் போராடி வெற்றிக் கண்ட ஆபிரகாம் லிங்கன், சாதி சமயங்களை எல்லாம் கடந்து மனித நேயத்திற்கு புத்துயிர் ஊட்டிய அன்னி பெசன்ட், அன்னை தெரசா, டாக்டர் விஜயலட்சுமி, பழமையைப் புறங்கண்டு புத்துலக வாயிலைத் திறந்த கமால் பாஷா, தந்தை பெரியார், அதிகார வர்க்கத்தை அடிபணிய வைத்த நெல்சன் மண்டேலா இவர்களெல்லாம் தான் கொண்ட கொள்கைக் காகவே வாழ்ந்து வெற்றி கண்ட நெறியாளர்கள். இவ்வாறே உலகில் நடந்த போர்களும் ஜனநாயகத்தையும், சமத்துவ எண்ணத்தையும் நாட்டிற்கு வழங்கி உள்ளன. இவைகள் எல்லாம் உலகில் என்ன பிரதிபலிப்பை ஏற்படுத்தியது என்ற வினாவிற்கு விடையா ளகத்தான் டாக்டர் வள்ளுவன் போன்ற வர்கள் உலகின் ஒரு மூலையில் தோன்றத்தான் செய்கிறார்கள்.

ஜனநாயக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி தான் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தை திறம்பட நடத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது தான் அவர் கடமை. முதலில் நல்ல நிர்வாகம் மக்களுக்கு வளமான வாழ்வு தரும் நிலை (Welfare Status) அமைத்தல் வேண்டும். இது அமைவதற்கு இதுவரை இருந்த தடைகள் நீக்கப் பட வேண்டும். தடைகளுக்காண காரணங்கள் கண்டறியப் பட வேண்டும். இதில் ஏற்படும் எதிர்ப்புகளை சமாளிக்க தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். குறை காணா தலைமையாக தான் விளங்க வேண்டும். நல்ல நிர்வாகத்தின் மூலம் வளமான வாழ்வை மக்களுக்கு அளிக்கத் தடைக் கல்லாக உள்ளது எது என ஆராய்ந்து அந்தத் தடைக் கல்லாகிய லஞ்சத்தையும், ஊழலையும் நீக்க வழிகாணும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் டாக்டர் வள்ளுவன். முதலில் தன்னை அந்தச்

சோதனைக்கு ஆட்படுத்தி அக்னி பிரவேசம் செய்தார். இதை அவர் இருக்கைக்கு மேலே தொங்க விடப்பட்ட பலகை மூலம் "இலஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர்" "இலஞ்சம் கொடுப்பதும் குற்றம், வாங்குவதும் குற்றம்". "மக்களே எஜமானர்கள்" என்ற இந்த வாசகத்தால் நாடறியச் செய்தார். மக்கள் மனதில் எல்லாம் இவரின் சேவை மனப்பான்மை பதியலாயிற்று. இந்நோக்கில் மகாத்மா காந்தி அடிகள் தொண்டின் சாயலே டாக்டர் வள்ளுவனின் நிர்வாகத்தில் விளங்கக் காண்கிறோம். எந்த போராட்டமாயினும் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதிலும், இந்தியாவில் ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சத்தியாக்கிரகப் போர் நடத்திய போதும் முதலில் அவர் தன்னை அந்த சோதனைக்கு ஆட் படுத்திக் கொண்டவர் ஆவார்.

அடுத்த முயற்சியாகத் தான் டாக்டர் வள்ளுவன் அவர்கள் நிர்வாக சீர்கேட்டிற்கு காரணமான இலஞ்சம் எவ்வாறு கையாளப் படுகிறது. இலஞ்சப் பரிமாற்றம் செய்யப்படும் விதம் இதற்கான காரண காரியமானவர்களை கண்டறிதலை முயன்றார். இதன் மூலம் ஏற்படும் நிர்வாக ஊழல்களைக் கண்டு களைய முற்பட்டார். டாக்டர் வள்ளுவன் ஒரு மருத்துவர் என்பதால் இதற்கான சிகிச்சையை நாடினார்.

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்றவாறு

தீராத லஞ்ச நோய்க்குக் காரணத்தைக் கண்டறிவதிலும், அதை போக்குதவற்கான வழிமுறைகளை ஆராய்வதிலும், அது தன் பார்வையிலிருந்து நழுவிவிடாமல் கண் காணிப்பதிலும் தன் கவனத்தைச் செலுத்தினார். இலஞ்சம்தான் அலுவலகங்களின் அலுவலர்களின் இரத்த நாளங்களில் பாய்ந்து அணுக்களில் கலந்து விட்ட ஒன்றாகவே தென்பட்டதை ஒழிக்க அவர் எடுத்த முயற்சிகள் எவ்வாறெல்லாம் திசை திருப்பப்பட்டது என்பது தெள்ளத் தெளிவாகிறது. முதலாவதாக இலஞ்சத்திற்குப் பாதை அமைத்த நகராட்சியின் ஊழல்களுக்குத் தடை செய்ய நடவடிக்கை மேற் கொண்டார். மின் உதிரிப்பாகங்கள், குடிநீர்த் தளவாட சாமான்கள், கொசு ஒழிப்பு பூச்சிக்கொல்லி மருந்து இவைகள் வாங்கியதில் ஏற்பட்ட ஊழல்களை அம்பலத்திற்கு கொண்டு வந்ததுடன் முறையான துறை நடவடிக்கை மூலம் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறைக்கு முறையீடு செய்தார்.

நகரசபை ஊழியர்கள் பொதுமக்களிடமிருந்து இலஞ்சமாகப் பறித்த பணத்தை தக்க ஆதாரங்களுடன் நிரூபித்து திரும்பப்பெற 'மக்களின் வரிப்பணம் மீட்பு' ஆர்ப்பாட்டத்தைத் தானே முன்னின்று நடத்தி மக்களை விழிப்புணர்வு பெறச் செய்தார்.

## மக்களாட்சியின் அம்சங்களை செயல்படுத்துதல்

மக்களுக்காகவே நிர்வாகம் : விருத்தாசலம் நகராட்சி நிர்வாகம் மக்களுக்காகவே நடைபெற ஆவன செய்தார். மக்களுடைய, மக்களால் மக்களுக்காகவே என்ற மக்களாட்சி தத்துவத்தை செயல் படவைத்த பெருமை டாக்டர் வள்ளு வனைச் சாரும். இதற்கு அவர் எடுத்த முதல் நடவடிக்கையாக தன்னை மக்களில் ஒருவனாக ஆக்கிக் கொண்டு தன் பதவிக் கேற்ப ஆடம்பரத்தை ஒட்டிய அந்தஸ்துகளை நீக்கி, சிக்கன நடவடிக்கைப் பெயரில் தன் அலுவலகத் தொலைபேசி இணைப்பை நீக்கியதுடன் மற்ற தொலைபேசி இணைப்பு களுக்கும் கட்டுப்பாடு விதித்தார். மின்சார சிக்கனம் மற்றும் டீசல் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டது. வரி விதிப்பில் "பாட்னா முறை"யை கையாண்டதுடன் சொத்து வரி, தொழில் வரி, குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றைக் கணினி மயமாக்கியது. இதன் மூலம் பொதுமக்களின் சுமை குறைக்கப் பட்டு மக்களை நிர்வாகத்தில் நேரிடையாக பங்குபெறும் வாய்ப்பை உண்டாக்கினார். சிக்கனம் என்பது இந்தியாவின் பராம்பரியத் தத்துவம் என்பதை மகாத்மா காந்தி அவர்கள் பல படிகளில் நமக்கு எடுத்துக் காட்டாக செயல்பட்டுத்தியுள்ளார். எந்நிலையிலும் புகை வண்டியில் 3ஆம் வகுப்பில் பயணம் செய்தும், எளிய உணவை உட்கொண்டும், ஆடம்பர வாழ்வை அறவே நீக்கியும் நம் நாட்டில் வாழ்ந்ததோடு; தென்னாப்பிரிக் காவிலும் லண்டன் மாநகரிலும் வாழ்ந்து காட்டினார் என்பது அவர் சுய சரிதை மூலம் அறிகிறோம். அவருடைய நிர்மாணத் திட்டங்கள் கிராமத்தையும், கிராம வாழ் மக்களையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. குடிசைத் தொழில் செய்தலும், விவசாய வளர்ச்சியில் ஈடுபாடும் நம் தேசத்தை உய்விக்கும். பகட்டான மேல் நாட்டு வழியின் வளர்ச்சி தேசிய உணர்வை புதைகுழிக்கு அழைத்துச் சென்று நாளாவட்டத்தில் இயற்கையின் எதிர்ப்புச் சக்திக்கு இறையாவோம் என்ற அவரின் கருத்துக்கள் இன்று நமக்கு உண்மையை உணர்த்துகின்றன. ஆட்சியின் சிறப்பு என்பது கடையனுக்குக் கதி மோட்சம்

கிடைப்பதே என்ற இரஸ்கின் தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர் காந்தி மகான். காந்தி மகான் ஏற்றுக் கொண்ட தத்துவத்தை அப்படியே நெஞ்சில் நிறுத்தியவராக விருத்தாசலத்தில் வாழும் ஒரு கடையன் வாழ்வு பெற தன் நிர்வாக அமைப்பை மாற்றி அமைத்து செயல்படுத்த முனைந்தார் டாக்டர் வள்ளுவன்.

நகரத்தின் கோடியில் வாழும் ஒரு மனிதன் நகராட்சி நிர்வாகத்தின் அன்றாட நடவடிக்கைகளை நேரில் உணரும் வகையில் செல்போன் வசதி செய்து அதன் எண்கள் பொது மக்களிடம் விளம்பரப் படுத்தி. ஒளிவு மறைவில்லா நிர்வாகத்தை ஏற்படுத்தினார்.

இந்தியாவிலேயே முதலில் ஒளிவு மறைவற்ற மக்களாட்சி நிர்வாகத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் மாண்புமிகு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். சேலம் நகராட்சியில் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தலைவராக இருந்து நகராட்சியை நடத்தி வழிகாட்டிய பாங்கு இன்றளவும் பலருக்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது. நகராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மக்களாட்சியின் மாண்பினை உணர வைத்தவர். அவர் வகுத்த திட்டப் பணிகள், அவரின் அஞ்சா போக்கு, நேர்மை இவைகளால் டாக்டர் வள்ளுவனும் உந்தப் பட்டவர் எனலாம். இவ்வாறே மக்களாட்சியின் ஏணிப்படியாக உருவாக்கத் திட்டம் தீட்டியவர். ஜனநாயக பண்புகள் விருத்தாசலம் நகராட்சி நிர்வாகத்தில் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க அவர் தீட்டிய திட்டங்கள் ஏராளம். அங்கீகரிக்கப்படாத மனைகளில் வாழ்வோருக்கு வாக்குரிமை தரப்பட்டதை, வாழ்வுரிமை அளிக்கப்படாத போது வாக்குரிமை ஏன்? என அரசைச் சாடினார்.

இதன் தொடர்பாக உண்ணாவிரதப் போராட்டத்தைத் தனி மனிதனாக நின்று செய்து காட்டினார். தென்னாப்பி ரிக்காவில் இந்தியர்களுக்கு வாழ்வுரிமை அளிக்கப் படாததை கண்டித்து காந்தி அடிகள் நடத்திக்காட்டிய சத்தியாக்கிரகப் போரையே தானும் செய்து காட்டினார். பிழைக்கச் சென்ற இந்திய மக்களுக்கு தென்னாப் பிரிக்காவில் வாழ்வுரிமை தருமாறும், மனித உரிமை உலகெங்கும் ஒன்றே என வெள்ளைய ஏகாதிபத்தியத்திற்கு உணர வைத்தவர் காந்தி. ஆனால் பிழைக்கச் செல்லவில்லை பிறந்த நாட்டிலேயே வாழ்வுரிமை

தராத ஒரு அவல நிலையை அரசுக்கு எடுத்துரைத்து வாழ்வுரிமை இல்லாத போது ஏன் இந்த வாக்குரிமை என்றும், அரசு வாக்குகளை அபகரிப்பதில் உள்ள அக்கரை மக்கள் வாழ்வை மேம்படுத்தலில் காட்ட முனைய வில்லை என்பதை நாடறியச் செய்தார்.

மக்களுக்கு நன்மை செய்ய ஜனநாயகப் போக்கில் மக்களின் குறைகளை உடனுக்குடன் பெற்றுத் தீர்வுகாணத் தன் நிர்வாகத்தில் அவர் செய்து கொடுத்த வாய்ப்புகள் ஏராளம். ஆன்லைன் மூலமும், செல்போன் தொடர்பு மூலமும் வாய்ப்புகளை ஏற்படுத்தியதுடன், வளையாத வைராக்கிய உள்ளம் கொண்டோரை "தகவல் அறியும் உரிமைச் சட்டம்" மூலம் பதில் சொல்ல வைத்து மக்களின் குறைகளை தீர்த்து வைத்த பெருமை டாக்டர் வள்ளுவனைச் சாரும்.

நிர்வாகத்தில் இவர் செய்த செயல்களை நடுநிலைக் கண் கொண்டோர் ஆய்வு செய்வாராயின் இவர் நகரசபைத் தலைவராகப் பணி செய்ததே இந்திய நாட்டின் ஜனநாயக மரபினை மறந்து அதன் பண்பினை சவக்குழிக்கு அனுப்ப முயற்சிக்கும் சர்வாதிகார நோக்கு உடையோரை உணர வைப்பதற்காக ஜனநாயகப் போராளியாகவே செயல்பட தனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகவே தலைவர் பதவியைக் கருதினார் என்றால் அது மிகையாகாது.

## ஜனநாயகக் கட்டமைப்பில் ஒரு நிர்வாகி - போராளி

உலகில் போராளிகள் நடத்தும் போராட்டங்கள் பல்வேறு தன்மைகளையும், நோக்கங்களையும் கொண்டது. ஆனால் டாக்டர் வள்ளுவன் செய்த போராட்டங்கள் விநோதப் போக்கில் அமைந்த ஒன்றாகும். இவர் ஒரு நிர்வாகி போராளி இதன் விளக்கம் தான் ஏற்றுக்கொண்ட நிர்வாகத்தை சிறக்கச் செய்ய ஜனநாயக வழியில் மக்களுக்குப் பயனளிக்க தானே நிர்வாகத்தை எதிர்கொண்டு செய்த போராட்டங்கள். நிர்வாகத் தலைவரே தலைமையேற்று நடத்திப் போராளி ஆனார். இதில் போராளி நிர்வாகத்தின் தலைவர் - பயனாளிகள் பொதுமக்கள். இது விந்தையிலும் விந்தை. இவருடைய முடிந்த முடிவு நிர்வாகத்தைத் திறம்படச் செய்து பயனாளிகளான மக்களைப் பாதுகாத்தலே.

விருத்தாசலம் நகராட்சித் தலைவராகப் பதவி ஏற்று இவர் செய்த சாதனைகள் நகராட்சியின் வளர்ச்சித் திட்டங்கள், வரி விதிப்பாயினும், செலவினமாயினும், பொது மக்களுக்குச் சென்றடையும் பயனாயினும் என அனைத்துமே போராட்ட வடிவிலேயே அமைந்தது. ஊழல்களை ஒழிக்கவும், இலஞ்சத்தைத் தடுக்கவும் எத்தனை போராட்டங்கள்; நகராட்சி அலுவலர் களை நேர்மை வழிபடுத்தவும், ஆணையரின் அதிகார ஆணவத் தன்மையை போக்கவும், ஆட்சியாளர்களின் உதாசினப் போக்கை கண்டிக்கவும், மேல் அலுவலர்களின் கண்டுங் கானா போக்கை தட்டிக் கேட்கவும் அவர் செய்த போராட்டங்கள் எத்தனை! எத்தனை!! நகரசபைத் தலைவர் தன் மதிப்பு, மரியாதை, கௌரவம் அனைத்தையும் புறக்கணித்து தனிப்பட்ட மனிதனாக மக்கள் நலங்கருதி செய்த இப்போராட்டங்கள் எதைத் தெரிவிக்கின்றன என்பது கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். எங்கெல்லாம் மனித உரிமை நசுக்கப்பட்டதோ, எங்கெல்லாம் அடிமை எண்ணம் அரசோச்சியதோ, எங்கெல்லாம் மதம், ஜாதிக் கலவரங்கள் தலை விரித்தாடியதோ அங்கெல்லாம் அதை நல்வழிப் படுத்தும் நாயகனாக மகாத்மா தோன்றினார். எங்கெல்லாம் பஞ்சம், பட்டினி, தீரா நோய்க் கொடுமையின் பாதிப்பு ஏற்பட்டதோ இவற்றின் அவலத்தை யெல்லாம் துடைக்கும் கரம் மகாத்மாவின் கரமானது.

இவருக்குப் பின் தோன்றிய அத்தனை சமூக ஜனநாயகப் போராளிகள் மனத்திலெல்லாம் காந்தீயம் ஊடுருவி விட்டது. எண்ணத்தைத் தூண்டி இரத்தநாளங்களிலெல்லாம் கலந்து விட்டது. இதைத்தான் டாக்டர் வள்ளுவனின் போக்கிலும் காண முடிகிறது. அநியாயங்களை, கண்டும் காணாமல் செல்லும் போக்கினைத் தவிர்த்துத் தட்டி கேட்கும் மனநிலையைப் பெற்றார். அஞ்சாமையும், மன உறுதியும் அவருக்கு காந்தி கொடுத்த டானிக் ஆனது.

“போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுவார்
தூற்றட்டும் தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்”

என்னும் கவியரசர் கண்ணதாசன் பாடல்களுக்கு இலக்கணமானார். போராளிகளுக்குப் புகழ்ச்சியும் இகழ்ச்சியும்

ஒன்றே. இவைகளால் அவர்கள் மனம் பாதிக்கப்படுவதில்லை. வேண்டுதல் வேண்டாமைக் குணம் படைத்தவர்கள், கோபுரத்தைக் கண்டு வியந்ததில்லை குப்பை மேட்டைக் கண்டு நகைத்ததில்லை. நடுநிலை நோக்கில் நாட்டின் நன்மை நாடியாகவே செயல்பட நினைத்தார் டாக்டர் வள்ளுவன்.

அவர் நிகழ்த்திய உண்ணாவிரத போராட்டங்களான நேரடி விசாரணை வேண்டி உண்ணாவிரதம் என்பது கடனில் உள்ள நகராட்சியை மீட்டெடுக்கவும், மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இதன் மூலம் நகராட்சிக்கு சேர வேண்டிய வருமானத்தை பெறவும் நிறைவேற்றிய 100க்கு மேற்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தாமல் கிடப்பில் போட்டதைக் கண்டித்தே இந்த உண்ணாவிரத சத்தியாகிரகத்தைத் துவக்கினார். மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள் ஜனநாயக உள்ளாட்சி அமைப்பில் அரசு அலுவலர்களால் எப்படிப் புறக்கணிக்கப் படுகிறது என்பதை வெளி உலகிற்கு காட்டவே இப்போராட்டத்தை நடத்திக் காட்டினார். அடுத்து "சுயாட்சி கோரி உண்ணாவிரதம்" என்பது மக்களின் சேவை கருதி மக்கள் பிரதிநிதிகள் போடும் தீர்மானங்கள், ஊழல் அரசியல் வாதிகளாலும், இலஞ்சம் பெறும் அலுவலர்களாலும் செயல் முறைப் படுத்தாத நிலைக்கு சட்டம் துணை போனால், மக்களாட்சியில் உள்ளாட்சி நிர்வாகம் அலுவலர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் அடிமை அமைப்பாகவே விளங்கும். சுதந்திரமான ஜனநாயகக் கோட்பாடு கானல் நீராகும் என்பதை கருத்தில் கொண்டே உள்ளாட்சிகளுக்கு சுயாட்சி கோரி உண்ணாவிரத போராட்டத்தை தனியாக நடத்திக் காட்டினார்.

டாக்டர் வள்ளுவன் அவர்கள் விருத்தாசலம் நகராட்சி தலைவராய் இருந்து நடத்திய போராட்டங்களின் வெற்றி தோல்வி பற்றி ஆய்வு செய்வதை விட, இந்த போராட்டங்கள் லட்சகணக்கான மக்கள் மனதில் ஏற்படுத்தி உள்ள ஜனநாயக சிந்தனைகள் மகத்தானதாகும். பயனாளிகள் இவரை போற்றியப் போது பாதிக்கப்பட்டோர் இலஞ்சம் பெறும் நிலை இழந்த அலுவலர்களின் வாய் தூற்றினாலும், அவர்கள் நெஞ்சம் இவரின் செயலை நினைவில் நிறுத்தவே செய்யும். "நெஞ்சிரு க்கும் வரை இவர் நினைவிருக்கும்" என்ற சொற்றொடர் நிலைக்கும். இவருடைய அணுகுமுறை மக்களின் இடர் பாடுகள் நீங்கி நிர்வாகத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

50 லட்சம் ரூபாய் கடனில் தத்தளித்து வறுமையில் வாடிய நகராட்சியை ரூ. 2கோடியே 40 லட்சம் வருவாய் பெறச் செய்து உபரி காட்டிய உத்தமராக விளங்கினார்.

**ஒப்பு நோக்குதல்** - டாக்டர் வள்ளுவன் அவர்களின் நகரசபை நிர்வாகம் மற்ற நகரசபை நிர்வாகத்தினின்றும் வேறுபட்ட ஒன்றாகவே காணமுடிகிறது. நிர்வாகத்தில் ஏற்படுத்திய சில சிறப்பு அம்சங்களே இதற்கு சான்று பகரும். இப்பதவி பாரம்பரியமாக தன்னையும் தன் வாரிசுகளையும் சுற்றி வலம் வர வேண்டும் என எண்ணாமல் பாரதத்தின் பாரம்பரிய கொள்கைகளை நிலை பெறச் செய்தாலே ஏற்புடைத்து என எண்ணிச் செயல்பட்டார். சிறப்பான நிர்வாகி எனப் பெயர் எடுத்தோரெல்லாம் சிறப்பான நிர்வாகத்தை அமைத்தார்கள் எனக் கூற முடியாது. சாதுர்யமும், இராஜதந்திரமும் தான் நிர்வாகத்தில் கோலோச்சின. இதைத் தவிர்த்து வெளிப் படையான நிர்வாகத்தின் மூலமே மக்களாட்சி தத்துவத்தை அடைய முற்பட்டார் என அறிய முடிகிறது. நிர்வாகத்தை அதன் போக்கிலேயே விட்டுவிட்டு தன் எதிர்பார்ப்புகளை மட்டும் நிறைவு செய்வதற்கான வழி வகைகளைக் கண்டு நல்லத் திறமையான நிர்வாகி எனப் பெயர் படைத்தோர் பலர். இவர்கள் நிர்வாக வியாபாரிகளாகவே உலா வந்து நாட்டின் சீர்கேட்டிற்கு வழிகோலுபவர்களாகத் திகழ்வர். நாட்டுப் பற்றுள்ள நிர்வாகத்தலைமையின் கடமையை வள்ளுவர் வாக்குப்படி "வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை. ஆராய்வான் செய்தவினை" என உணர்த்தும் வகையில் வருவாயை பெருக்கியும், நிர்வாகத்தை வளம்படுத்தியும் கெடுதிகள் வந்தபோது அதை ஆய்ந்து போக்க நடவடிக்கை எடுத்த வல்லமை இருந்ததை காண முடிகிறது. இவ்வாறான கடமை உள்ளம் கொண்டோர் பாரம்பரியமாக நம்நாட்டில் வாழ்ந்து இலக்கணம் படைத்து உள்ளனர். கடமை வழி சான்றோர்களாகவும், செயல் வழி நாட்டுப்பற்று மிக்கோராகவும், உணர்வுழி தேசிய நோக்கம் கொண்டோராகவும் உள்ளத்தின் வழி கருணை படைத் தோராகவும் விளங்கி முடிவில் தொண்டின் வழி தியாகியாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டோரின் தியாகச் சுடரின் தாக்கத்திற்கு டாக்டர் வள்ளுவன் ஆட்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு கைமாறு கருதா கடப்பாட்டு உணர்வு இவரை தன்னலம் கருதா நாட்டு நலம் விரும்பியாக மாற்றியதில வியப்பதற்கு

ஒன்றுமில்லை எனலாம். “கடைமையைச் செய் பிரதிபலனை எதிர்நோக்காதே” என்ற கீதை பேருரைக்கு செயல் வடிவம் கொடுத்தவராகவே இவர் விளங்க காண்கிறோம்.

உலகில் தோன்றிய நல்ல தத்துவங்கள் அனைத்தும் இவர் நிர்வாக அமைப்பின் மூலகூறுகளில் ஐக்கியமாகி ஒட்டி விளங்குவதுடன், இவரின் நேர்மை, உண்மை, தன்னலமற்ற போக்கிற்கு உலகில் நடந்த பல புரட்சியுகங்கள் முன்னோடிகளாக விளங்குகின்றன. நிர்வாகத்தில் கையாண்ட அடிமையற்ற போக்கு இவருக்கு ஆபிரகாம் லிங்கன் மூலமாகவும், மகாத்மா காந்தியின் வழியிலும் ஏற்பட்டிருக்க வேண்டும். இவர் நிர்வாகத்தில் கொண்ட அஞ்சாமையும், எளிமையும் காந்தி மகான், இராஜாஜி, காமராஜ் போன்றோர்களின் நிர்வாகத் திறன் எதிரொலியாக பிரதிபலிக்க காண்கிறோம். இவர் செயல்களில் காட்டிய சமதர்ம சிந்தனை உலக சம தர்ம தந்தையாகிய காரல் மார்க்ஸின் வழியில் கிடைத்திருக்க வேண்டும்.

தன் நிர்வாக காலத்தில் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் விளங்கினார் என்று இவர் சந்தித்த நிகழ்வுகள் மூலம் அறியப்படுகிறது. விருத்தாசலம் நகராட்சியின் தலைவராக இருந்து இவரால் நிறைவேற்றப்பட்ட முன்னோடித் திட்டங்கள் அனைத்தும் அலுவலர்களாலும் அரசின் அலட்சிய போக்கினாலும் செயல்படுத்த இயலா நிலை அடைந்ததை காணமுடிகிறது. நிர்வாக செலவினங்களில் விதியை மீறி நிகழ்த்தி லஞ்ச வேட்டை ஆடிய அலுவலர்களின் அதிகார துஷ்பிரயோகமும், மக்கள் பிரதிநிதியாக தலைவர் தட்டிக் கேட்டதைப் பொருட்படுத்தாத அலுவலர்களும், ஆணையரும் இதன் மேல்முறையீட்டை மேல் அதிகாரிகளும் அரசும் புறக்கணித்ததும், ஊழல் பட்டியலை காவல்துறைக் கண்டு கொள்ளாமையும், எல்லையற்ற வரம்பு மீறிய எங்கும் காணா இவைகள் இமாலய அநீதியல்லவா! தலைவர் முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீரானதுதான் வெளிப்படை. இன்றைய ஜனநாயகப் போக்கில் அரசின் சித்தாந்தம் இதுவானால் நீதியின் மூலம் நேர்மையைத் தேடியலையும் இளந்தலைமுறையினர் காலப் போக்கில் தீவிரவாதிகளாக மாற, இத்தகைய தேச துரோகிகள் அதிகார பீடத்தில் அமர்வதே காரணமாகி விடுகிறது. இப்போக்கை விலக்கி இவருக்கு நெஞ்சுரத்தை ஊட்டிய அய்யன் திருவள்ளுவனாருக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் தன் நன்றியை

செலுத்தக் கடமைப் பட்டதாகும். ஆனால் நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் பெற்ற டாக்டர் வள்ளுவன் பணி வழியே தன் பயணத்தைத் தொடர காண்கிறோம்.

படைப்பாளிகளில் யுகப் புரட்சியை செய்தவர்களைப் படித்திருக்கிறோம். சாதனை புரிந்த சகாப்த வாதிகள் என்றும் நம் எண்ணத்தில் நிலைத்து நிற்கிறார்களோ இல்லையோ அவர்கள் சாதனை ஆண்டாண்டு காலமாக நம்மால் அனுபவிக்கப் படுகின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகளால் இவ்வுலகம் சுழன்று கொண்டுள்ளது. கலிலியோவின் சகாப்தம் விண்வெளி ஆய்வின் காலமாகவும், தாமஸ் ஆல்வா எடிசன் சகாப்தம் மின் சக்தியின் உபயோகம் உள்ளவரையும் (காலமாகவும்) ஸ்டீவன்சனின் சகாப்தம் தொடர்வண்டி பயன்பாட்டுக் காலம்வரையும் நீடிப்பது போல் பல அறிவியல் விஞ்ஞானிகளின் சகாப்தம் அவரவர் கண்டுபிடிப்புகளின் பயன்பாடு நீடிக்கும் வரை உள்ளவாறு அரசியல், சமூகஇயல்களில் அதன் புரட்சிக் கோட்பாடுகள் உலகில் நீடிக்கும் வரை அதன் படைப்பாளிகளின் சகாப்தம் தொடர்கிறது. ஆன்மீக வாதிகளின் சகாப்தம் அவர்களின் தத்துவங்கள் மக்களின் மனதை விட்டு அகலாகாலம் வரை நிலைத்து நிற்கும். கருணை உள்ளம் மனித மனதில் உள்ளவரை வள்ளலார் சகாப்தம் தொடரும். அகிம்சையும், சத்தியமும் உலகில் நிலை கொண்டுள்ள வரை மகாத்மா காந்தி சகாப்தம் தொடருவதைப் போல் நிர்வாகத்தில் ஊழலும், இலஞ்சமும் விரட்டப்படும் நடைமுறை செயல்படும் வரை டாக்டர் வள்ளுவன் அவர்களின் சகாப்தம் ஒரு நாட்டில் அல்ல இந்த உலகில் நிலைப்படும் இது திண்ணம்.

தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும்.

**P. அரசப்பன்**
*28-02-2013*

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

மிக மிக விரைவாக நீதியை வழங்கிடும்

**திரு. கி. அசோகன்**

கூடுதல் மாவட்ட நீதிபதி, கடலூர் அவர்களுக்கும்.....

நூறு நாட்களுக்கும் மேலாகத்

தமது கடுமையான உழைப்பாலும்

எழுத்தாற்றலாலும்

**நகராட்சி நிர்வாகத்தை**

உலகுக்கு எளிமையாக்கிட உதவிய

**புவனகிரி செயபாலன்** அவர்களுக்கும்

**டாக்டர் மு. வள்ளுவன்**

முன்னாள் நகர் மன்றத் தலைவர்,

விருத்தாசலம்.

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | நேர் வழி பயணத்தில்... | 31 |
| 2. | விருத்தாசலம் பெருமையும் – வள்ளுவனும் | 35 |
| 3. | சிக்கன நடவடிக்கை | 40 |
| 4. | மார்க்கெட் சுவர் | 51 |
| 5. | அனுமதியற்ற குடிநீர் இணைப்பு | 59 |
| 6. | சொத்து வரி | 64 |
| 7. | நகராட்சி சான்றுகளுக்கு... | 68 |
| 8. | குத்தகை – வாடகை பாக்கி | 74 |
| 9. | ஒத்துழையாமை | 81 |
| 10. | தீர்மானங்களை அமுல்படுத்த வழக்கு | 88 |
| 11. | வழக்கு நடத்த நிதி | 92 |
| 12. | நேரடி விசாரணை வேண்டி உண்ணாவிரதம் | 96 |
| 13. | வாழ்வுரிமை இல்லாமல் வாக்குரிமை ஏன்? | 104 |
| 14. | குடிநீர் மேல்நிலைத் தொட்டி | 113 |
| 15. | வழக்கு தொடர அனுமதி மறுப்பு | 118 |
| 16. | சுயாட்சி கோரி உண்ணாவிரதம் | 122 |
| 17. | எழுது பொருள் ஊழல் – முறியடிப்பு | 126 |
| 18. | பதவிக்காலமும் – உள்ளாட்சித் தேர்தலும் | 134 |
| 19. | தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 | 139 |
| 20. | தணிக்கையறிக்கை | 144 |
| 21. | TUFIDCO | 149 |
| 22. | நகராட்சி வருவாயும் பணியும் | 153 |
| 23. | ஊழலை ஒழிக்க – வள்ளுவனின் யோசனைகளும் சாதனைகளும் | 156 |

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. **- வள்ளுவர்**



"லஞ்சம் வாங்க மாட்டேன்,
லஞ்சம் வாங்கவும் விடமாட்டேன்"

**- வள்ளுவன்**